உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

களந்தை, ஆதியப்பநாவலர் இயற்றிய

# திருக்களர்ப் புராணம்

இஃது

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் முதல் தமிழ்ப்பண்டிதராகிய

பின்னத்தூர் - ப்ரஹ்மஸ்ரீ

அ. நாராயணசாமி ஐயரவர்களால்

பரிசோதித்த பிரதிக்கிணங்க

திருக்களர்-தி. மு. சுவாமிநாத உபாத்தியாயரால்

எழுதிய கதாசாரங்கள், குறிப்புகள், கர்ணபரம்பரைக் கதைகள்,

வீரசேகர ஞானதேசிகர் திருப்பணி முதலியவற்றோடு

திருக்களர் கோவில் பஞ்சாயத்தார்களுளொருவராகிய

களப்பாள் - ஸ்ரீமாந்

இரங்கசுவாமி முதலியாரவர்கள்

பொருளுதவியால்

சென்னை

கார்டியன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

பரிதாபி௵] 1912. [ஐப்பசிமீ

விலை அணா 8.

MADRAS : G. C. LOGANADHAM BROS.
THE GUARDIAN PRESS, MOUNT ROAD

# அட்டவணை


| சருக்கம். | பக்கம். | செய்யுள். |
|---|---|---|
| பாயிரம் ... ... | 1 ... | 14 |
| அனுகூலச் சருக்கம் ... | 5 ... | 54 |
| பாரிசாதவனச் சருக்கம் ... | 19 ... | 83 |
| நிருத்தச் சருக்கம் ... ... | 38 ... | 58 |
| பஞ்சாக்கரச் சருக்கம் ... | 51 ... | 39 |
| மாலாதாரகச் சருக்கம் ... | 64 ... | 63 |
| மஹாரதன் புத்திரப்பேற்றுச் சருக்கம் | 7[illegible] ... | 64 |
| தீர்த்தமான்மியச் சருக்கம் ... | 95 ... | 36 |
| திருஞானப் பதிகம்... ... | 107 ... | 11 |
| திருக்ஷேத்திரக் கோவை ... | 109 ... | 1 |
| திருப்பதிகக் கோவை ... | 109 ... | 1 |
| திருப்பதிக் கோவை ... | 109 ... | 1 |
| பெரியபுராணச் செய்யுள் ... | 110 ... | 2 |
| தேவியார் திருவிளையாடல் ... | 111 ... | ... |
| வீரசேகரஞானதேசிகர் திருப்பணி | 115 ... | ... |
| | ஆக | 427 |

# முகவுரை

கடல்புடைசூழ்ந்த நெடுநில வுலகிலே, எந்நாட்டினுஞ் சிறந்த சோழவள நாட்டிலே, காவிரிநதிக்குத் தெற்கிலே, தஞ்சாவூர் ஜில்லாவிலே, மன்னார்குடி தாலூகாவிலே, திருத்துறைப் பூண்டிக்கு (நான்கு மைல்) மேற்கிலே விளங்காநின்ற திருக்களர்த் தலத்திற்கு சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன் தருமபுர வாதீனத்திலே, (அழகிய சிற்றம்பல தேசிகர் காலத்திலே,) வித்துவானாயிருந்த (களந்தை) ஆதியப்பரென்பவர் வடமொழியிலிருந்து தென்மொழிச் செய்யுள் நடையில் பெயர்த்திருந்த புராணத்தையும்; திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் திருவீழிமிழலையிலிருந்து திருமறைக்காட்டுக்குச் சென்றபோதும், மேற்படி திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாண்டிநாட்டிலிருந்து சோழநாடு புகுந்து திருப்பாதாளீச்சுரம் சென்றபோதும் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப பதிகங்களில் இறந்தவை யொழிய எஞ்சியுள்ள திருஞானப் பதிகத்தையும்; களப்பாள் ஸ்ரீமாந்-கு. ஸ்ரீநிவாசமுதலியாரவர்கள் கேட்டுக்கொண்டபடி கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் முதல் தமிழ்ப்பண்டிதர் (பின்னத்தூர்) ப்ரஹ்மஸ்ரீ. அ. நாராயணசாமி ஐயரவர்களால் பரிசோதித்து, பல புண்ணிய சீலர்களின் பொருளுதவியால் (சுபகிருது வருஷம்) அச்சிட்டு வெளிப்படுத்திய பிரதிக்கிணங்க ஒவ்வொரு சருக்கத்தினிறுதியிலுங் கதாசாரஞ் சேர்த்தும், கர்ண பரம்பரையில் வழங்குந் தேவியார் திருவிளையாடல்களையும் நேரிற் கண்ட திருப்பணி வைபவங்களையும் சங்கிரகமாக எழுதி யிறுதியில் வைத்தும் மேற்கண்ட ஸ்ரீநிவாச முதலியாரவர்கள் குமாரரும், மேற்படி கோவில் பஞ்சாயத்தார்களுளொருவரும் பொதுஜனப் பிரியரும், பரோபகார நிதியரும், சிவபக்தி முதியரும், அடியாரன்பருமாகிய ஸ்ரீமாந் இரங்கசுவாமி முதலியாரவர்கள் பொருளுதவியால் அச்சிடத்துணிந்த வெனது புன்மொழியாவையும் நன்மொழியாகக் கொள்வீர்களென்பது திண்ணமேயாம்.

திருக்களர்,
பரிதாபி௵

தி. மு. சுவாமிநாத உபாத்தியாயர்.

சிவமயம்

# திருக்களர்ப் புராணம்

## பாயிரம்

### வலம்புரி விநாயகர்

மாமலர்க் கோதை நாளு மகிழ்திருக் களருள் வைகுந்
தேமல ரிதழி வேய்ந்த செஞ்சடைக் கடவு ளோர்பாற்
காமர்பூங் கொம்ப ரீன்ற வலம்புரிக் களிற்றின் வண்ணத்
தாமரை புரையுஞ் செம்பொற் றாளிணை வணங்கல் செய்வாம். (1)

### பாரிசாத வனேசர்

நீர்கொண்ட செழுங்கமல வயல்குலவு திருக்களரு ணெடியவா
னக், கார்கொண்ட திருமேனிக் கண்ணனுநான் முகத்திறையுங் ககனத்
தோருந், தார்கொண்டு தொழநடஞ்செய் தடியரித யத்திலகுந் தண்ணி
லாவிண், டேர்கொண்ட பிறைச்சடிலத் தெம்பிரான் பூங்கழற்றா
ளிறைஞ்சி வாழ்வாம். (2)

### அமுதவல்லியம்மை

பலவகை யண்ட மெல்லாம் பானிலாக் கற்றை சுற்றி
யிலகிய தாள மாக்கி விளமுலைக் கணியும் பேதை
யுலகெலா மகிழ்ந்து போற்றுந் திருக்கள ருவந்து மேவு
மலைமக ளமுதவல்லி மலரடி வணக்கஞ் செய்வாம்.

## விநாயகக்கடவுள்

மருமல ரணையல வைகு மடந்தையு முலக மீன்ற
வருமறைக் கிழவ னாவி னமலையும் வணங்கும் பைம்பொற்
றிருமலை மகட்கு முக்கட் டேவற்கு மருமை யாகித்
தருவனத் துறையுந் தெய்வத் தந்தியைச் சிந்தை செய்வாம். (4)

## குமாரக்கடவுள்

உரைதரு மறையு ஞானத் தண்மையுங் கங்கை நன்னீர்த்
திரைபொருஞ் சடிலத் தெம்மான் செவியமு தொழுகக் கேட்பக்
கரையிலா வனந்த கோடி கலையுணர்ந் தியம்பி னோனை
வரைபக வெறிந்த வைவேன் மதலையை மனத்துள் வைப்பாம். (5)

## கலைமகள்

ஆரண நான்கு மோரா றங்கமு மலகி லாத
காரணங் காட்டு ஞானக் கலைகளுந் தானாய் நின்ற
வோரணங் கினைப்பூ மேலோன் றனதுநா வுறையுந் தெய்வ
வாரணங் கிளமென் கொங்கை மயிலினை வணக்கஞ் செய்வாம் (6)

## ஆளுடைய பிள்ளையார்

தெண்டிரைப புவியி னோங்கிச் சேயிதழ்க் கமலத் தண்ண
லெண்டரு மறைக்கு மேலா யிலங்கவா சவனு மாலு
மண்டரு மறிதற் கெட்டா வரனருள் விளைப்ப வோதித்
தண்டமிழ் விளக்குங் காழித் தலைவனை வழுத்தல் செய்வாம். (7)

## ஆளுடையவரசு

உலகெலா மெனப்பாடென் றடியர்தமக் குரைபகர்ந்த வொருவனருளானே, யலகிலா முதுமறைக்கு மறிவரிய பரஞ்சுடரென் றறிவானோக்கி, நிலைநிலாப் புன்சமயத் தமனொழுங்க நெறிமுழுது நீக்கு ஞானத், தலைமைசால் வாகீசர் தாண்மலரை பெமதுசிரந் தரித்தல் செய்வாம். (8)

## ஆளுடையநம்பி

தார்திவ ளளகச் செவ்வாய்த் தடமுலைப் பரவை தன்பா
லாதியம் பரமன் றூனே யரையிருட் போழ்தி லன்பாற்
றூதுசென் றருளப் பாடுஞ் சுந்தர மூர்த்தி பொற்றாட்
பாதுக மெமது சென்னிக் கணியெனப் பணித்தல் செய்வாம். (9)

## ஆளுடையவடிகள்

ஒழுக்கநெறி யுணராத புத்தரெலா முரையடங்க யூம ராக, விழுத்தகுநான் மறைப்பிரம ஞமகளை முனிந்துமுடி வேந்த னீன்ற, வழுக்கின்மட மாதிஞெடும் பதிகமுறைத் துயர்ஞால மகிழ மேஞட், டொழுத்தகைய மணிமன்றிற் பவந்தவிர்க்கு மடிகளையாந் துதித்தல் செய்வாம். (10)

## ஆசிரியர்

கல்விலையா னிழலமர்ந்து நால்வர்க்குஞ் சுகர்தமக்குங் கனிவாற் பாடு, மல்லல்வயற் றிருவாத வூரருக்கு முபதேசம் வழங்கி மீண்டுந், தொல்லுலகி லந்தணனும் வடிவாகித் தோன்றியருள் சுரந்த நோக்கால், வல்வினைதீர்த் தெமையாண்ட சாம்பசிவ குருவினடி வணக்கஞ் செய்வாம். (11)

## சிவனடியார்கள்

சிவசின்னந் தனைப்பெற்றோர் சிவன்கழற்பூ சனைபுரிந்தோர் சிவ நாமத்தைப், பவநந்தப் புகன்றிடுவோ ரரனடியார் தமக்கினிய பத்தி பூண்டோர், புவனங்கள் புகழ்கயிலைச் சிவபுரமாங் கதிபுக்கோர் புகுவோர் ரென்னு, மிவர்தங்க டிருவடிப்பூங் கமலமல ரெமதிதய திருத்தல் செய்வாம். (12)

## அவையடக்கம்

இலங்குமா தவன்றுயிலும் பாற்கடலை யொருதுரும்பி லிணக்கி யூருஞ், சிலம்பிநூ லிணைப்பிணைத்துக் கடைந்தமுதம் பெறுமொருவன்

செய்கை போலாம், வலந்தநூல் பலவுணர்ந்து வாய்ததவறி வாலடங்கி மலமோர் மூன்றுந், தொலைந்தபே ரறிவாளர் முன்னர்யான் றமிழ் பாடத் துணியு மாறே. (13)

## சிறப்புப்பாயிரம்

கருணைமிகு நந்தியுரைப் படிசூத மாமுனிவன் கழறு மாறே, தருமைவரு மழகியசிற் றம்பலசற் குருவருளே தரித்து நாளு, முருக னெனக் கலையுணர்ந்த சரவணமா முனியருளான் மொழிகென் றோத, விருநிலத்தி லுயர்களந்தை யாதியப்பன் பசுந்தமிழா லியம்பல் செய்தான். (14)

திருச்சிற்றம்பலம்.

# முதலாவது

## அனுகூலச்சருக்கம்

### திருச்சிற்றம்பலம்.

மூந்து பூதலம் புனலெரி யனிலம்வான் முதலா
விந்து சேகரன் றிருவரு ளாற்றரு மிறையோன்
றந்த நால்வரு ளொருவன்மா தவமுடைத் தலைவன்
சிந்தை தூயனுன் மறையெலா முணர்ந்திடுந் திறலான். (1)

அன்ன மாதவன் றன்மையா முரைப்பதெ னரன்றான்
பின்னு மீங்கிவ னுயினு னென்னலாம் பெயரோ
வுன்ன ருஞ்சனற் குமாரனுங் கன்னவ னொருகா
லின்னல் வல்வினைப் பிறவிவே ரறுப்பதற் றெண்ணி. (2)

மூண்ட வாசனத் திறைவனுந் திருமகண் முயங்குந்
தண்டு ழாய்நறை கமழ்புயத் தமலனுந் தராள
மண்டு தெண்டிரைப் புவனமுங் ககனமும் வணங்கு
மண்டர் நாயக னுறைதிருக் கயிலைவந் தடைந்தான். (3)

வெள்ளி மால்வரை யெய்திய முனிவரன் வியப்பாய்க்
கள்ளு லாமலர்க் கொன்றையான் முன்றிலிற் கடிப்பாற்
றள்ளி வேத்திரத் தாலிமை யவர்களைத் தடுக்கும்
வள்ளல் பாலுற மருவினன் வணங்கினன் மகிழ்வால்.

ஆர்வ மீக்கொள வந்தணன் வணங்கலு மறிவாற்
சீரி யோர்புகழ் நந்திவா னவனருள் சிறந்து
தேரு மாதவ நின்வர வுரையெனத் திளைக்கும்
வேரி நாண்மல ரோன்றிரு முனிவரன் விளம்பும்.

ஐய நீதெரி சித்திடின் முத்தியை யளிக்கு
மெய்ய ருட்சிதம் பரநகர்ப் பெருமையும் விமலன்

பைய ராவணைக் கண்ணனும் பிரமனும்*பாவி
யுய்ய முன்னடம் புரிந்தது,மன் றுநீ யுலிரத்தாய். (6)

மூன்று கேட்டியான் புனிதனு யினனுன் தருளா
லின்று மாலயற் கரியவன் றருவனத் திலகு
மன்று ளாடியாங் தெரிசனே வழங்குவோ மகிழ்வா
லென்று கூறின னெனுமுரை கேட்டன னினிதின். (7)

அந்த மாக்கதை கேட்பதற் காதா வடைந்தே
னெந்தை கூறுகென் றருந்தவன் பின்னுமீ திசைப்பான்
பந்த வல்லினைப் பிறவியின் வேரினைப் பறிப்பான்
வந்த வெற்குநீ யளிப்பதுன் றன்மையின் வழக்கால். (8)

தவமி லாதவ ராயினுந் தனையடைந் தவரை
யவல நீக்கியாங் கவர்தமை யளிப்பதுன் னறனும்
புவன மூன்றினு மறிகலாப் பொருளுனக் குளதோ
சிவன ருட்டிற நீயலா லுலகிலார் தெரிப்பார். (9)

நறிய கொன்றையான் பெருமையுங் கீர்த்தியு நலனு
மறிவை நீயத னுலினை யன்பினுற் கேட்பான்
குறுகி னேனரன் காதையி லொருபொருள் கூறச்
சிறிது கேட்பினு முத்திவந் துறுமெனுந் தெளிவால். (10)

அன்ன காதையை யன்பினு லுரைத்தரு ளடிகேள்
பொன்னி லங்கிய புரிசடைப் பரமனே பொருவு
முன்னை யான்புகழ்ந் துரைப்பதற் கியலுமோ வுரவோ
யென்ன வின்னண முனிசொல நந்தியு மியம்பும். (11)

## வேறு

முனிவரி லுயர்ந்த மூதறி வுடையோய் முண்டகப் பொகுட்டில் வீற் றிருக்குந், தனிமுதற் கடவு ளறிவரும் பரமன் சகமெலா நிறைதலாற் றயங்கும், புனிதனு லய்மெய் புவனமு மெனினும் போதமெய்த் தொண்டர்நெக் குருகிக், கனியுமன் பதனுற் றவத்திறல் யோகக் காட்சியாற் கடவுளங் குவக்கும். (12)

அவ்விட முழுது மானினி துறையு மாலய மெனப்படு மவற்று, ளைல்வனந் தீர்த்த நதிதல மிவற்று ளைலமிகு மோரொரு தலத்தி, னிவ்வயிற் கருணைத் திருக்கணைக் கருளி யேத்தினோர் தமக்கெலா மிரங்கி; நவ்வியங் கரத்தோ னுங்கவர்க் கியைந்த நல்வரம் பலபல நல்கும். (13)

விரும்புநல வயஙக ளாஙகவாக களாபப யகுநதவத தலததுளும் விளங்கித், திருந்திய மனத்தி லார்வமீ தூர வடியர்சே வித்தின்பந் தெவிட்ட, விருங்கடற் புவன முதலிய பூத மெவற்றையு மழித்துநின் றெரியுட், புரிந்திடு நிருத்த னன்பினு னடிக்கும் புண்ணிய தலமள விலையால். (14)

அலகிலப் பதிக்கு ளோங்கிய பதிகள் சிலவுள வவற்றையென் குரவன், மலவிரு ளிரிய வுரைத்தன னெனக்கு மறைநெறி யொழுக்க மூந் தருமத், தலைமையும் பரமன் றிருவடிக் கன்புந் தகுதியும் வழா தமர் தவத்தோய், நலனுறு காத னன்பினு லுனக்கு நவையற மொழிகு வன் வகையால். (15)

இப்பெருங் காதை நின்னிக ரடியார்க் கியம்பிட வேண்டுமைந் தெழுத்துந், தப்பற வுரைத்து நீறிடா தவர்க்குஞ் சங்கரற் கன்பிலா தவர்க்கு, முப்பரம் பொருட்கு முதல்வனை யிகழ்ந்து முகுந்தனே முதலிய தேவை, யொப்பிலாப்பரமென் றுரைக்குநீ சருக்கு முரைக் கின்மா பாதக முறுமால். (16)

திருவெண்ணீ றணியா ருருத்திர வக்கந் தரித்திடார் சிவமறை புகலா, ருருகியா தரவா லரன்றனை நினையா ரோதிய வாரணத் தொழுக்க, மருவிடா ருரிய தங்குலத் தியற்கை வழுக்கினோ ரீங்கி வர் மனித, ருருவுள ரெனினுஞ் சாதியிற் கலப்பா யுதித்தவ ரீரகி லங் குதிப்பார். (17)

ஓலமொன் றுதநி யாலம்வந் துடற்ற வும்பரு முனிவரும் வெரு வி, ஞாலமுண் டவனே சரணென வொளித்து நவைசெயும் வேழ மொன் றுதி, மூலமென் றழைக்கப் புறப்படுந் திகிரி முகுந்தனே பரமெனக் கால, காலனை யிகழ்ந்தோ ருயர்குல மெனினு மிழி குலத் தவரெனக் கரைவார். (18)

திருத்திய நீறு முருத்திர வக்கத் தெரியலுந் தரித்துமூ வி‌லவே,
லொருத்தனை யிதயத் திருத்தியைந் தெழுத்து மொருமையா லுணர்
பவ ரவர்பாற், கருத்துற வீழுத்து மன்பினே ரிவரைக் கதமுடைச்
செருக்கினற் கழறி,யுருத்தவர் பொருவி லுயர்குல மெனினு மிழிபிறப்
பினரென வுரைப்பார். (19)

## வேறு

போத நீற்றினைப் புனைந்துளோர் கண்டிகை பூண்டோ
ராதி யாயபஞ் சாக்கர மோதுவோ ரறிவான்
மாதொர் பாகனைப் போற்றினே ரிவர்க்கெலாம் வருண
பேத மில்லையென் றுரைப்பர்நூன் முறைதெரி பெரியோர். (20)

## வேறு

அந்தண ரரசர்கள் வணிக ராயினும்
பிந்தின ராயினும் பிறைமு லாமுடி
யெந்தைபஞ் சாக்கர மியம்பு வாரெனி
லிந்திரன் மாலய னவர்க்கி ணையிலார். (21)

எக்குலத் தாயினு மெந்தை நீற்றினே
டக்கமா லிகைபுனை யவர்க டோன்றிடி
லக்குல முயர்குல மக்கு லத்துளோர்
முக்கண னருளினன் முத்தி யெய்துவார். (22)

ஆற்றருங் கொாமிகுத் தாபத் தெய்தினு
நீற்றணி யமலனுக் கன்பு நீங்கினோர்
பாற்றரும் பெரும்பொரு ளுவும் பற்றிடா
மாற்றருந் தீவினை பயக்கும் வாய்மையால். (23)

பூந்தள வுறுமுகைப் பொம்மன் மென்முலை
யேந்திழை பாகனு மீசற் கன்பிலா
மாந்தர்கட் குனுவள வெனினும் வான்பொரு
ளீந்தவ ரவுரவந் தெய்து வாரரோ. (24)

பெறலரு மானிடப் பிறவி யேய்ந்தவர்க்
குறுதியா மூதிய முலகில் யாதெனி
லிறுதியி லியாவையு மிறுக்கு மெல்லையி
லறிவனுக் கொருமையா லன்பு பூண்பதே. (25)

மன்னிய வானவர் மற்று ளோர்க்கெலா
முன்னவன் றனக்குறும் பத்தி யான்முயன்
றுன்னரும் பூசையா லன்றி யோய்விலாச்
சென்மமு மரணமுந் தீர்க்க லாகுமோ. (26)

## வேறு

இன்னண மியம்பிய குணஞ்சரிதை யெல்லா
நின்னரு கிருப்பது நினைந்துமொழி கின்றே
னன்னர்மறை நான்முறை நவின்றுயர் தவத்தோய்
முன்னுரை யியற்கையொழி வோர்க்குமொழி யேனல். (27)

என்றுபுக லித்திற மியம்பமுனி கேளா
வொன்றிய மனத்துவகை யுற்றெதிர் வணங்கி
மின்றிகழ் சடைக்கடவுண் மேயதல மெல்லா
மின்றினி துரைத்தியென நந்தியு மிசைப்பான். (28)

## வேறு

சீரமுறு கனக மேருமால் வரைக்குத் தென்றிசை நாவலந் தீவிற்,
பரவருந் தரும மனைத்தையும் பயக்கும் பாரத கண்டத்திற் றிரைபாய்,
சுரநதி முதலா வருநதி மருங்கிற் றுறுவனந் துன்றிய மலையி,லரணின்றி
துறையுந் தலங்கணூற் றெட்டா மவனியிற் கதியருள் டலங்கள். (29)

இனையநற் றலத்து ளரன்றனக்குரிய வியறகையா யெவர்க்கும்
வல் வினையை, நினையுமுன் பகற்றுஞ் சிவதல மறுபத் தெட்டுள வி
வையெலா நின்பாற், றனிவிதந் தோதிப் பின்னர்நீ கேட்ட சங்கை
யுத் தரமெலாம் பகர்வேன், முனிவகே ளென்னுச் சிலாதன்மெய்ப்
புதல்வ னவையெலா முறைமுறை மொழிவான். (30)

## வேறு

கண்ணுதலோன் கயிலையெனச் சிறந்துறையுங் காசி
கருதுபிர யாகைபிதிர் கட்குமுத்தி யளிக்கும்
விண்ணவர்க டொழுங்கயைகே தாரம்புட் கரஞ்சீர்
மிகுநந்தி வர்த்தனம்வர்த் தனமுனிவர் விரும்பு
மெண்ணரிய காளகூ டாதனநான் மறையு
மேத்துகபி லாச்சிரம மிடரொழிக்க வெவ்வரு
நண்ணியநன் மயூரவா கனத்தான மளகை
நங்கோம தீச்சுரமா நலம்பெருகு நகரம். (31)

அக்கினிசை லேச்சுரம்வா னவர்க்குவரம் பயக்கு
மானசம தக்கினீச் சுரமலக்கண் டவிர்க்கு
மிக்குளகோ கன்னமொடு பிருகுகச்ச மழியா
வீடளிக்கும் பரமசிவன் விண்டுவுடன் கூடி
யொக்கவுறை யரிகரேச் சுரமெனுமித் தலங்க
ளுலகெலா மியற்றியளித் தழிபினிற் றுடைப்போன்
செக்கரிளம் பிறைச்சடையிற் றிளைத்தெறியுந் தரங்கத்
தீம்புனன்மா நதிக்கரையிற் சிறந்ததிருத் தலமே. (32)

விப்பிரர்சூழ் பற்பரேச் சுரம்விமலேச் சுரம்வான்
வியக்கும்விசா லேச்சுரமா னந்தபத்தி ரமத்த
மொப்பிறுங்கேச் சுரம்வேத்தி ரீரணியம் பாரி
லுயர்வீர பத்திரம்பிப் பிலவனம்வா னுவக்குஞ்
செப்பிடமா காசநகர் புகழரம்பேச் சுரமேற்
றிகழிந்த்ரேச் சுரம்புட்ப வனமறைக டெரிக்கு
மிப்புவியின் மிருபாதா ளேச்சுரமித் தலங்க
ளிலகியகோ தாவரியி னிருமருங்கிற் றலமே. (33)

வாய்த்தகா ளாஞ்சரங்கா ளாமுகேச்சு ரஞ்சீர்
மகிபத்திரேச்சுரம்வாய் வீச்சாங்கர் வேச

மாய்த்தமலந் தனைக்கடியு மறையிருத்தேச் சுரமேல்
    வரமளிக்குந் தும்புரீச் சுரமமல மான
வேய்த்தாள மிரையிலகுந் திருச்சயிலம் விளங்கும்
    வியன்றிருக்கண் டேச்சுரம்வா மனன்மேவாச் சிரமந்
தூய்த்தவர்சே ரக்கினிசா லேச்சுரம்வ ராகேச்
    சுரமிவைகள் கண்ணனதி சூழ்கரைமேற் றலமே. (34)

உயர்ந்திசைக்கு மாகாளேச் சுரங்கலிங்கேச் சுரம்வா
    னுவந்தேத்தும் பதரிவன முரகர்முனி வர்களு
நயந்துறையு மவிமுத்தேச் சுரம்புவன முழுது
    நவின்றிறைஞ்சு சுக்கிரிவேச் சுரமிவைக ளுஞ்
தயங்குபுனற் றுங்கபத்ரித் தடங்கரைமேற் சிறப்பாந்
    தலமாகும் விரூபாக்கந் தனையேயொப் பில்லா
வயங்குமணி நித்தவிலக் குமீச்சுரமா தவதம்தார்
    வைகுமதங் கேச்சுரமா லேச்சுரத்தோ டின்னும். (35)

திருக்கோடி சங்கரமா ரண்ணியகா னனமுஞ்
    சிறந்தமா தவிவனமுந் திகழனங்கேச் சுரமும்
விருப்பின் வசிட்டாச்சி ரமஞ்சிருங்கேச் சுரமும்
    விமலனுறை சம்பாதீச் சுரமுமுயர் விசும்பிற்
றருக்கொடுசெல் சடாயுத்தா னப்பரியஞ் சாலந்
    தரங்கரு மெறிதிரைக டமனியமுங் கிரியின்
மருப்பிலகு நித்திலமும் வரன்றியரு கெறியா
    வருபம்பை நதிமருங்கின் மருவுசிவ தலமே.

பரையுவக்கும் பார்ப்பதீச் சுரமும்மே லான
    பாராவ தேச்சுரமும் வாரிபத்ரேச் சுரமும்
புரையறுகா ளேச்சுரமுந் திருக்கமலேச் சுரமும்
    புகலரிய வக்கினிகெற் பேச்சுரமும் புலவ
ருரைசெய்சமீ வனஞ்சரா சனஞ்சரணீச் சுரம்பா
    ருயர்ந்தயாக் கியவற்கேச் சுரம்யோகேச் சுரமு

மானுறையு முமைகருப்பேச் சுரமுமுனி வாருக்
கருள்பனுசேச் சுரம்வடவா ரணியமொடு பின்னும். (37)

சுாரளிக ளிசைபயிலு மசுமந்த கவனங்
கருதுமே காந்தநக ரங்கரபேச் சுரமும்
பாருயாத் தீச்சுரமும் பலசவனப் பதியும்
பைங்கதலி வனமுநறைப் பன்மலர்த்தா திலகு
மேரியன்மா தளிவனங்கர்ச் சூரகா னனமு
மிருங்கதலி வனங்காமேச் சுரமுமிட ரரிக்குஞ்
சீரிலகுங் களங்கரகி தேச்சுரமும் பரவுந்
திருப்பசுப தீச்சுரமுந் திருக்கறுக்குந் தலமாம். (38)

கிட்டுறுமுன் றுயரகற்றுங் கேடில்பய னளிக்குங்
கிரகணியேச் சுரத்தொடுமேற் கிளந்தபல கருமம்
பெட்புறுதண் புனற்பரிகா நதிக்கரையிற் றலமாம்
பேசுமடி யவர்தமக்குப் பெரும்பதவி யளிக்கு
மட்டிலகுந் திருக்காளத் தீச்சுரமு மானோர்
மருவுதிரு வேங்கடமும் வாய்ந்தகுக வனமு
மிட்டமுறுங் காகோல நகருமிமை யவர்க
ளேத்தேக பருப்பதமு மெழிற்றுரேச் சுரமும். (39)

ஆனவயி ராவதமுந் தீர்த்தகிரி நகரு
மருட்பிரமேச் சுரமுமிறை யமர்ந்தபணீச் சுரமும்
வானவர்கள் பயிலப்ர வனமுமலர் வயல்சூழ்
மார்க்கண்டேச் சுரமுமுகில் வளைபுமுயர் காவிற்
றேனருந்திச் சிறகாளி செவ்வழிகள் பாடச்
சிறந்தசங்க மேச்சுரமும் பரவுசெம்பொ னாரம்
பூநிறையுங் குழைகண்முகந் தெறிதருகல் லோலப்
பொன்முகரிக் கரைமருங்கிற் பொருந்தியமா தலமே. (40)

## வேறு

பதரிவனஞ் சுாகண்டேச் சுரமே லானோர்
பகர்தண்மேச் சுரமுன்ன தாசலஞ்சீ

ருதவுந்த மலேயுமதிர் திரைப்பா லாறு
முயர்நதியின் கரைத்தலமா மும்பர் போற்றுஞ்
சிதைவறுமங் கலவமிசங் காம கூடந்
திகழுகல் யூரணபுர * நான்கும் தேரி
லதிகமெனுந் தலமூலகி னதிக்கு மேன்மை
யான் பொன்னிக் கரைத்தலமா மறிவின் மிக்கோய். (41)

ஈங்கணியம் பியவொருநூற் றெட்ட தாகு
மித்தலமன் றியுமிவற்றின் மிக்கா மேன்மை
யோங்கிவருகாவிரிமா நதியின் றீர்த்தத்
துயர்தலமோ ரறுபத்தெட் டுளவா மந்தப்
பாங்குறுநற் றலமவற்றிற் பரமா னந்தப்
பாண்டரங்க நாடகத்தின் பரிசு காட்டித்
தீங்குறுவல் வினையகற்றி யிறைவன் மேவுந்
திருப்பதியெட் டவற்றின்பேர் தெரியக் கேட்டி. (42)

அலலல்வினைப் பவமாற்றி யடியார்க் கெல்லா
மானந்தப் பெருவாழ்க்கை யளிக்குஞ் செம்பொற்
றில்லேவனம் வெண்காடு பாரி சாதந்
திருவளர்தென் கமலேயொடு சீரார் கூட
லெல்லேயின்மா மறைசொல்பாதா ளீச்சு ரத்தோ
டிடைமருதூர் குடந்தையிவை யிறைவ னுடுந்
தொல்லேநக ரெனுவிளம்பிப் பரம னுடுந்
தொழிற்றிறமு மீதெனவே சொல்ல லுற்றான். (43)

## வேறு

தேசுறுந் தில்லேச் சித்ர கூடத் திறமையிற் புண்ணியத் துருவா மாசின்மந் தார வனமணிச் சபையில் வான்புக ழிடைமருதூரிற், பேசு நற் றலமாங் கும்பகோ ணத்திற் பெருவர மளிக்கும் வெண் காட்டி,

---

* நான்கென்று பிரதிகளிற் காணப்படுகிறது—மூன்றென்றிருக்கவேண்டும்.

-லாசில்பல் லுயிர்க்கு மிறைவனு மொருவூ ஞனந்தத் தாண்டவம் புரிந் தான். (44)

தேன்றிருக் கமலைச் சித்ரபீ டத்திற் றியாகவி னோதநம் பெருமா, னென்றெடுத் துரைக்கும் பெயருடை யீச னினிதினு சனநட மயர்ந் தான், சென்றுறு மால வாயெனு மதுரைச் சிவதலத் தினிலருள் சிறப் பத், துன்றிநின் றயன்மால் பணிசெயப் பரமன் சுந்தர தாண்டவம் புரிந்தான். (45)

சுந்தரப் பெயரா நதிக்கரை மருங்கிற றுதியவி நாசியாந் தலத்திற் பந்தவல் வினைக ளர்த்தபா தாளீச் சரமுதற் றிருப்பதி யதனி, லிந்து வும் பணியு மிதழியு நதியு மிலகிய புரிசடை யிறையோன், றந்திர மென்னு மூர்த்ததாண் டவத்தைச் சதுமுகத் தோன்றொழ நடித் தான் (46)

கண்டெடுத் துரைக்கு மெண்டல மவற்று ளியற்றருந்தவத்தினோ ரெவர்க்கும், வேண்டுறு மடியார் தமக்குமென் ஞான்றும் வேலைக டொறுமெழுந் தருளி, நீண்டவார் சடையான் பன்மறை வடிவாய் நிறையருட் சத்தியோ டினிதிற், காண்டகு நடனம் புரியுமித் தலங் கள் கருசினி தனிற்சிறப் பாமால். (47)

இத்தலங் களிலே காரண மனந்த மியம்பிடிற் பெருகுமிங் கிவற் றைக், கைத்தலத் திலகு நெல்லியங் கனிபோற் காட்டினேன் றொகுத்துநன் கருத்தா, வுத்தம நீமுற் றவத்தினுற் கேட்கப் பெற்ற னை யும்பர்கோ னெனினுஞ், சித்தியா ஞான சிவதல மேன்மை கேட்பதற் கெய்துமோ தெரிக்கில். (48)

முடனறத் தெரிந்து முத்தழ லோம்பு மறையவர் சந்நிதா னமுங் கோட், படவர வறுகு நறைபிழி யிதழிப் பனிமலர் மிலைச்சிய பவளச், சடைமுடிப் பெருமான் றனிப்பெருங் கோயிற் றுனமுஞ் சந்நிமண டபமு, மிடர்கெட முறையா விக்கதை யினிதி னியம்பிடு மிடனெனத் தகுமால். (49)

ஆதிகா யகனு மாறன்றிருச் சரிதை யானவிக் கதையுயாம் புரா ணம், போதனுன் மறைக்கு மேலதா யிந்தப் புராணமுமத்தே...

யிதனிற், பாதியா யினுமோர் சருக்கமா யினுமோர் பாடலா யினும் பத மெனினுங், நீதற வுரைப்போர் கேட்குநர் கயிலை சேர்ந்துவீ டடைகுவர் திண்ணம். (50)

ஆனவிக் காதை கேட்கில்யா ரேனு மவரவர் விரும்பிய நடைவார், தீனராம் வறிஞர் கேட்கின்மற் றவர்க்குச் செல்வமுற் றிடுமெகப் பெறுத, பானலங் கருங்கட் கோதையர் கேட்கிற் பாலரை யினிதினிற் பயப்பார், வானுறு பூத மலகையிக் காதை கேட்குநர் பேர்சொல மறுகும். (51)

எனவருள் சிறப்பச் சிலாதனற் புதல்வ னியம்பலு மன்பினு லிறைஞ்சி, மனநெகிழ்ந் துருகி மெய்ம்மயிர் பொடிப்ப வழுத்திநான் முகன்றரு மறையோ, னினையநற் றலத்திற் றருவனத் தியல்புஞ் சிற்சபை மேன்மையு மெனக்கு, நினைவுற வுரைத்தி யென்றலு மியைந்து நிமலனு நந்தியீ துரைப்பான். (52)

கரணமோர் நான்கு மின்னுயிர்க் கியைந்த கருவியு மறிவினுற் கயிலை, வரையில்வீற் றிருக்கு முக்கணெம் பெருமான் வயத்தவாக் கியமுறு மறையோய், தருவனத் திலகுஞ் சிற்சபை மேன்மை சாற்றுவன் யானுனக் கதனை, யிருளறக் கேட்டி யதிற்செறி சனமு முனியுனக் கெய்துமென் றுரைத்தான். (53)

ஈண்டியம் பியநற் காதையை முறையா லிசைப்பவ ரிசைத்திடு மொழியைப், பூண்டவன் பதனுற் கேட்பவ ரெவரும் போகமும் போதமுஞ் மடைவார், காண்டகு கமலப் பொகுட்டில்வீற் றிருக்கும் பிரமனுங் கண்ணனு முதல்வ, ரீண்டமா முடியு மடியுமே யறியார் நிமலன்றன் சரிதையார் தெரிப்பார். (54)

## கதாசாரம்

ஸ்ரீ வேதாகம விபவாநந்த சாக்ஷாத்காரமாயும், பரிபூரணராயும், சச்சிதானந்தராயும், விபுவாயும், அருவாயும், உருவாயும், அருவுருவாயும், ஆதிமத்தியாந்த ரகிதராயும் விளங்கும் பரமேஸ்வரனுடைய திருவருளினாலே மண், நீர், தீ, காற்று, வெளி யென்னும் ஐந்து பூதாதி

மயமாகிய உலகமெல்லாம் படைத்தருளிய பிரமாவின் புத்திரர்களில் சனற்குமார முனிவரென்று ஒருவ ரிருந்தார். அவர் பரிசுத்தமாகிய மனமும், அரிதாகிய தவமும், வேதங்களையெல்லா முணருந் திறமு முடையவர். இவர் பிறவிக்கடலைக் கடக்கக் கருதி, பிரம விஷ்ணுக் களாலும் அறியக்கூடாத சிவபெருமா னெழுந்தருளி யிருக்கின்ற திருக்கைலாஸ மலைக்குச் சென்று, அங்குப் பரமபதியினுடைய திருச் சந்நிதியில் நெருங்குந் தேவர் குழாங்களை வெள்ளிப் பிரம்பால் அடித்து விலக்கிக்கொண்டிருக்கும் திருநந்திதேவருடைய திருவடிகளில் விழு ந்து நமஸ்கரித்தனர். திருநந்திதேவர் சனற்குமார முனிவரை ஆசீர் வதித்து நீ வந்த காரணம் யாதென வினவ? சனற்குமார முனிவர் ஐயனே! தரிசித்தமாத்திரத்தில் முத்தி யளிக்கும் சிதம்பர நகர்ப்பெருமையும், அந்நகரில் சபாநாயகப் பெருமான் திருநடம் புரிந்த தும், முன்பு தாங்கள் சொல்லக்கேட்டுப் புனிதனுயினேன். இன்று நடேசப் பெருமான் தருவனச் சபையிலே நிர்த்தம் புரிவதாய்ச் சொல் லினரெனக் கேள்வி யுற்றேன், அத்தல மான்மியத்தை அடியேனுக் குத் திருவாய் மலர்ந்தருளல் வேண்டுமென்றனர். திருநந்திதேவர் உன்னைப்போன்ற பக்திமான்களுக்கே அத்தகைய மான்மியத்தைச் சொல்லவேண்டும். விபூதி யணியாதவர், உருத்திராக்கந் தரியாதவர், பஞ்சாட்சரஞ் செபியாதவர், சிவபக்தி யில்லாதவர், சிவநிந்தகர், வேதவிதி கடந்தவர், குலத்தியற்கை வழுவினவர் இவர்களுக் குச் சொல்லலாகாது. இவர்கள் உயர்ந்த குலத்தினரா யிருந்தாலும் தாழ்ந்த குலத்தினரேயாவர். இவர்களுக்கு மீளாநரகமே கதியாகும். விபூதியும் உருத்திராக்க மாலையுந் தரித்து, சிவபெருமான் இருதய கமலத்தி லெழுந்தருளி யிருப்பதாகத் தியானித்து, பஞ்சாக்கரஞ் செபி க்கும் சிவனடியாரை வழிபடுவோருக்குத் துன்பஞ் செய்வோர் ஒப்பில் லாத உயர்ந்த குலத்தவராயினும் இழிந்த குலத்தவரே யாவர். விபூதி யணிந்தவர், உருத்திராக்கம் புனைந்தவர், பஞ்சாக்கரம் செபிப்பவர், சிவ பக்தி யுடையவர் இவர்களுக்குச் சாதிபேத மில்லையென்று பெரியோர் சொல்வர். எந்தச் சாதியிற் பிறந்தவராயிருந்தாலும் பஞ்சாக்கரஞ் செபிப் பாராகில் அவருக்குப் பிரமவிஷ்ணுக்களும் ஒப்பாகார். எந்தச்

குலத்திலேனும் விபூதி ருத்திராக்கந் தரிப்பவர்பிறக்கில் அக்குல மேயர் குலம், அக்குலத்துள்ளோர் முத்தியடைவர். சகிக்கமுடியாத துன்பம் வந்தாலும் சிவபெருமானை மறக்கலாகாது பெறுதற்கரிதாகிய மனி தப் பிறவி யிற்பிறந்தவருக்கு உறுதியாகியலாபம் சிவபக்தியேயாம். சிவபூசை செய்தாலொழிய சனன மரணந் தொலையாது. சகமெலாம் நிறைந்த நமது பரமேஸ்வரன் தமது அடியார்களுடைய பக்குவா பக் குவத்துக்குத் தக்கபடி சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதங்களை யளித்தாள்வதற்காகத் திருவுருக்கொண்டு எழுந்தருளி யிருக்கின்ற சிவதலங்கள் பலவுண்டு. அவற்றுள் (கங்காநதிக் கரையிலேயுள்ள) காசி பிரயாகை, கயை, கேதாரம், புட்கரம், நந்திவர்த்தனம், காளகூடாத னம், கபிலாச்சிரமம், மயூரவாகனத்தானம், அளகை, கோமதீச்சுரம், அக்கினிசைலேச்சுரம், சமதக்கினீச்சுரம், கோகன்னம், பிருகுகச்சம், அரிகரேச்சுரம்; (கோதாவரி நதிக்கரையிலே யிருக்கின்ற) பற்பரேச் சுரம், விமலேச்சுரம், விசாலேச்சுரம், அநங்கபத்திரம், இறுங்கேச்சுரம், வேத்திராரணியம், வீரபத்திரம், பிப்பிலவனம், ஆகாசநகர், அரம் பேச்சுரம், இந்திரேச்சுரம், புஷ்பவனம், பாதாளேச்சுரம்; (கிருஷ்ணு நதிக் கரையிலேயுள்ள) காளாஞ்சரம், காளாமுகேச்சுரம், மகிபத்தி ரேச்சுரம், வாய்வீச்சுரம், மறையிருத்தேச்சுரம், தும்புரீச்சுரம், திருக் சயிலம், திருக்கண்டேச்சுரம், வாமனச்சிரமம், அக்கினிசாலேச்சுரம், வராகேச்சுரம்; (துங்கபத்திரி நதிக்கரையிலேயுள்ள) மாகாளேச்சுரம், கலிங்கேச்சுரம், பதரிவனம், அவிமுத்தேச்சுரம், சுக்கிரிவேச்சுரம் (பம்பை நதிக்கரையிலே யிருக்கின்ற) விரூபாக்கம், இலக்குமீச்சுரம் மதங்கேச்சுரம், மாலேச்சுரம், திருக்கோடி, சங்காரணியம், கானனம், மாதவிவனம், அனங்கேச்சுரம், வசிட்டாச்சிரமம், சிருங்கேச்சுரம், சம் பாதீச்சுரம், சடாயுத்தானப் பரியம், சாலந்தரநக (வேகவதி நதிக் கரையிலே யிருக்கின்ற) பசுர்ப்பதீச்சுரம், பாராவதேச்சுரம், வாரிபத்தி ரேச்சுரம், காளேச்சுரம், கமலேச்சுரம், அக்கினிகெற்பேச்சுரம், சமீ வனம், சராசனம், சரணீச்சுரம், யாக்கியவற்கேச்சுரம், யோகேச்சுரம், உமைகருப்பேச்சுரம், பனசேச்சுரம், வடவாரணியம், அசுமந்தகவனம், ஏகாந்தநகர், கரபேச்சுரம், அத்தீச்சுரம், புலசவனம், கதலிவனம்

மாதவனம், கர்ச்சூரகானனம், தேற்றுவனம், காமேச்சுரம், களங்கரகி தேச்சுரம், பசுபதீச்சுரம், கிரகணியேச்சுரம்; (பொன்முகரி நதிக் கரையி லேயிருக்கின்ற) திருக்காளத்தீச்சுரம், திருவேங்கடம், குகவனம், காகோலநகர், ஏகபருப்பதம், தாரேச்சுரம், அயிராவதம், தீர்த்தகிரி நகர், பிரமேச்சுரம், பணீச்சுரம், அப்ரவனம், மார்க்கண்டேச்சுரம், சங்கமேச்சுரம், செம்பொனூரம்; (பாலாற்றங்கரையிலே யிருக்கின்ற) பதரிவனம், சுரகண்டேச்சுரம், தன்மேச்சுரம், உன்னதாசலம், குக மலை; (பொன்னிநதிக் கரையிலே யிருக்கின்ற) மங்கலவமிசம், காம கூடம், கல்யாணபுரம் இந்த நூற்றியெட்டுத் தலங்களும் பெருமை பொருந்தியன. இவற்றைப் பார்க்கிலும் பெருமை பொருந்திய தலங்கள் அறுபத்தெட்டு. அவற்றுள் (சபாநாயகப் பெருமான் ஆநந்ததாண்டவம் புரிந்தருளிய) சிதம்பரம், திருக்களர், திருவிடை மருதூர், திருக்குடந்தை, திருவெண்காடு; (தியாகேசப் பெருமான் அசபா நடனம் புரிந்தருளிய) திருவாரூர்; (சோமசுந்தரப் பெருமான் சுந்தர தாண்டவ மாடியருளிய) திருவாலவாய்; (செகதீசப் பெருமான் ஊர்த்துவதாண்டவமாடியருளிய) திருப்பாதாளேச்சுரம் இவ்வெட்டுத் தலங்களும் விசேஷம் பொருந்தியன. இவற்றைப் பார்க்கிலும் பெருமை பொருந்திய தலங்களில்லை. இவற்றுள் நீ கேட்ட பாரி சாதவன மான்மியத்தைக் கூறுகிறேன்; அந்த மான்மியத்தைச் சிவால யத்திலும் மடலாயத்திலும் அந்தணர் வீட்டிலுமிருந்து சொல்லக் கேட்டல் வேண்டும். இம்மான்மியத்தைக் கேட்போர் இம்மையில், கல்வி, செல்வம், புத்திரன், ஞானம் முதலியவற்றையும் மறுமையில் மோக்ஷத்தையும் பெறுவர்.

திருச்சிற்றம்பலம்

# இரண்டாவது

## பாரிசாத வனச் சருக்கம்

*திருச்சிற்றம்பலம்.*

மங்கலஞ் சிறந்த பாரிஜா தவன மான்மிய முரைப்பதற்கியைந்த, புங்கவன் கமலப் பூங்கழல் வணங்கிப் போதமே வியசனற் குமார, னங்கண்மா ஞாலம் புகழ்தரு வனத்தி னமைதியா வையுமியம் பென லுங், திங்கள்வாண் முகமு மிதயமு மலர நந்திவா னவனிவை செப்பும். (1)

தேன்பழ னுகுத்த தேறலுந் தருவின் செழுமலர்க் குழைகளுந் தெய்வ, நன்மணித் திரளுந் தாளமு மகிலுஞ் சாந்தமு நாகவெண் மருப்பு, மின்னவிர் கனகக் குவைகளு மணைந்து விரிதிரை தாவுகா விரியா, முன்னிய நதியொன் றேரொழு நதிக்குண் முதன்மையா மொழிதரு நதியாம். (2)

இனையமா நதியின் மருங்கில்வா னவரு மிருடியர் குழாங்களுஞ் சுருதிப், பனவரு மகலார் புண்ணிய முழுதும் பயத்தலாற் பல்லுயிர்க் குதவி, தனையருள் காதன் மிக்கவிந் நதியிற் றண்புன லமலமா யுல கிற், புனிதமா யநாதி யாயதெக் காலும் பொருவிலாப் போகமேயளிக் கும். (3)

இந்தமா நதியிற் றீம்புனல் பருகி வியாவரு மிகழ்மது வருந்த வந்தபா தகம்போ மப்புனன் மூழ்கில் வல்வினை முழுவது மாயுஞ் சந் தனு டவிக ளோங்கிய சையத் தடவரைச் சாரலே முதலாச் சிந்துவி னளவுந் திரைபரந் தெழுமித் திருநதிப் பெருமையார் தெரிப் பார். (4)

ஆயவிந் நதியி னிருகரை மருங்கி லமரர்கின் னரருண் முனிவர், தூயவிஞ் சையர்கள் சித்தர்க ளுரக ரெனுமிவர் தொல்லுருக் கரந்து, மாயையின் வடிவம் வேறெடுத் தினிதின் வைகுவ ரிருடிகண் மலர் தாய், சேயமுற் றிறைஞ்ச விலிங்கமா முருவாய்த் திலவணி மவுவியு நிலவும். (5)

பெண்ணொரு பாக னிலிங்கநல் லுருவாய்ப் பெட்புறத் தரிசனம ருளிப், பண்ணவ ரமர் ரேனையோ ரெவர்க்கும் பரிவொடு மேற்கதி பயப்பத், தண்ணளி புரியு மித்திரு நதியின் சார்கரை மருங்குள தலங்க, ளெண்ணரும் பெருமை யிந்நதிக் கிணையா விருப்பவோர் நதிகளு மில்லை. (6)

வேறு

இத்தகைய காவிரியின் றென்பா லோங்கி
யிந்திரன்மா லயனமர ரெவர்க்கு மேலா
முத்திதருந் தருமக்ஷேத் திரமா மூவர்
முழுமுதலோன் கமலையெனு முதன்மைத் தான
மத்தலத்தி னிருதியுறுந் திசையி லோரொன்
றரையான யோசனைவிட் டப்பான் மேவு
மெத்தலமும் பரவுதரு வனமே மேலோ
ரியற்றருமா தவமியற்று மியற்கைத் தாமால். (7)

வேறு.

இன்ன பொன்னிணர்கொள் பாரி சாதவன மெத்த லத்தினு முயர்ச்சியாய்ப், பன்னு நான்மறைவ லோர்கண் மாதவர்கள் பிழுதில் விண்ணவர்கள் பரிவினு, லுன்னு சைவநெறி வல்ல வுத்தமர்க ளிவரொ லாமுறைவ தாழிநாண், மன்னு காலையினும் வதிவ தித்தரு வனத் தியல் புகல வொண்ணுமோ. (8)

வேறு.

எழில் வாய்ந் திலகு மவ்வனத்தி லின்சொன் மழலை யஞ்சுகத் தோ, டொழியா திசைக்கு மாகமமு மிருதிப் பொருளு முயர்மறை யும், வழுவா துரைக்கும் வரிச்சுரும்புண் மலர்ப்பைங் கோட்டி வளம் பூவை, யுழைசே ரிசைப்பூங் குயிலவைகேட் டுரையுந் தரங்கள் சில கூறும். ))

புலவுண் டுவக்கும் வரிப்புலியும் புல்வா யினமு மொருசாரிற்
குலவுந் தறுகட்பிணை றெயிற்றுக்கொலையேனமும்வெவ்வாய்ஙமலி

பலவுமொருபாற் பயிலும்விடப்பரந்தட் பகுவா யணையாக
வெலிகண் டுயிலு மரிமாவு மிபமு மொரு மினிதியங்கும். (10)

உகிர்வா ளுறுத்தி மதகரியி னுயிருண் டுவக்குஞ் சொரிகுருதிப்,
பகுவாய்த் தறுகட் கேசரியெண் பணைக்காற் பறவை யொடு துயி
லும், புகழா வரவி னொடுகீரி விளையாட் டெய்தும் பொருந்தியவண்,
மகிழ்வா லுழுவை முலைத்தீம்பால் வரமான் மறியுண் டிறுமாக்கும்.(11)

பொங்கும் பிரசத் துளிதூங்கும் பொலன்று தவிழ்க்கும் பசுங்
கோட்டிற், செங்காற் றவள வோதிமமுஞ் சிறைமென் கிளியும்
பூவைகளு, மங்குன் முழக்க மெனமுழங்கு மறைமா முனிவர் பண்
ணியர்க, ளங்க ணழைப்ப முன்றிறொரு மவரோ டினிதின் விளையா
[டும். (12)

இறையிற் கழியும் புழுமலத்தா லியன்ற வுடலந் தனைப்பெருக்கு
முறுதி கருதி யூனயின்ற தீயோ ருரோமங் தொறுமூசி
நிறுவித் தசையீர்ந் தழலோங்கு நிரயத் தழுத்து மறலியெனு
மறிவுற் றேயோ வருந்தாதூ னறுத் கறிக்கு மெபுலியும். (13)

உணர்வில் விலங்கும் பறவைகளு மொழுக்க முயன்று பகைநீங்கிப்
பணிவு மருளு மெய்திடினிப் பாரி சாத வனத்தானத்
தணுகு மாந்தர் பெறுமியல்புக் களவொன் றுளதோ வாதலினுற்
பிணிசெய் பிறவி வேர்களைந்து பெருவாழ் வளிப்ப தித்தலமே. (14)

அளவில் போகத் தொடுபோத மருளு மிடனு மணிமேவி
யொளிபெற் றரிய புண்ணியகேத் திரமா யுயரித் தலமதனிற்
றெளியும் விரதத் துருவாச னிம்மையோ ருலகிற் சென்றணைந்து
மிளிருங் கனகப் பூந்தருவை மேனாட் கொணர்ந்திங் கமைத்துண்
[ணல். (15)

## வேறு

இமையவர் தன்மை யெய்திய முனிவ னித்தரு வமைத்திடு முன்
னுங், கமையுறு புவியி லுத்தம தலமக் கற்பக வனமுறுந் தான,
மமையுமத் தலத்தி லத்தரு வாச னான்றிருப் பூசனை கருதி, நம
ரோலா முய்யத் தன்றிருப் பெயராற் றீர்த்தமொன் றாக்கின னயப்பால்.

அந்தநற் றீர்த்த வேலையிற் புனித மாமிருத் திகைதனைக் கொணர்ந்து, கொந்தவிழ் பசும்பொற் பூந்தரு வடியி னான்மறை கூறிய விதியாற், றந்தவே திகையின் மணலினா லிலிங்கந் தனைவகுத் தாகமந் தவறா, திந்திரன் பரவு பரமனைத் தாபித் தியற்றினன் பூசனை யினிதின். (17)

மீண்டுமோ யிடையி லிமாசலத் துதித்த மெல்லிய றிருவுருவாக்கி, யாண்டநூல் விதியாற் பதிட்டைசெய் தமுத வல்லியென் றொருபெய ரமைத்து,வேண்டுறு மடியர்பணிசெய வுமைக்கு மேதகு பூசனையியற்றி, யீண்டிய பிரம கற்பமா மாயு ளெய்திய முனிவர னிருந்தான். (18)

நினைந்துபற் பலகா லார்வமீக் கொள்ள நெஞ்சநெக் குருகியா தரவாற், கனிந்தறி வயர்ந்து மெய்ம்மயிர் பொடிப்பக் கட்புனல் சோர நாக்குழற, மனங்கவர் காம மாதியா வுரைக்கு மாசிரு மூன்றையு மகற்றி, யனங்கவே ளுடலம் பொடிபட விழித்த வரன்வெளிப்படும் வகை துதித்தான். (19)

மந்திர விதியா லினையன புகழ்ந்து மங்கலப் படிவமா யிலகு
மிந்துசே கரனை நாடொறு முனிவ னிறைஞ்சலும் யாவரு மியற்றா
வந்தமின் மறையோன் றவத்தினாற் பெருகு மன்பினா னம்மணலிங்கலி
ழுந்துபா தலத்தி னளவும்வே ரூன்றி முழுமுத லிலிங்கமா யினதால்.

ஆனதோ ரிலிங்கப் பெருமையைக் கருதி யன்பினா னெஞ்சநெக் குருகி நான்மறை முனிவன் பன்முறை வணங்கி நவிற்றரும் பூசனை யயர்ந்து வானவர் முதலா மற்றுளோ ரெவரு மகிழ்வுற வொருமையா வழுத்தி மேன்முல்ற யனந்த மாம்பல கற்ப காலமுந் தொழுமற வேலை. (21)

அம்முனி புரியுந் தவத்தினாற் பரம னருளனு மதியினாற் கமஞ்சூன், ஊமம்முகி றவழும் பாரிசா தவனம் வளர்திருக் களருண்மற் றெவருந், தம்மில்வேற் றுமையாம் பகையுள தெனினுந் தம்பகை தவிர்ந்தறந் தவறா, திம்மையிற் பயக்கு மரும்பெற லொழுக்க மியைந்தன ரியற்ற ருந் தவத்தோய். (22)

இத்திறம் பலகா லருமையின் முனிவ னியற்றிடு பூசனைக் கிரங்கி மத்தமு மதியும் புனைபுரி சடையு நீற்றொளி வண்ணமு நான்கா, மத்தி ருப் புயமு மான்மழுக் கரமு மணிமுகத் தழகுமெய் யருளான், முத்தி தந் தளிக்கு முக்கணும் விளங்க முழுமுதற் பரமனங் கெழுந்தான். (23)

நாடோ தவனங் கெழுந்தருள் கயிலை நம்பனைக் கண்டொறு மிறைஞ்சிப், பாடினன் வியந்தான் றுள்ளினன் றுள்ளிப் பன்முறை பின்னரும் பணிந்தா, னாடினன் கரத்தாற் றாளமிட் டுருகி யாங்கவ னம்புயத் திருத்தாள், சூடினன் றலைமே லிருகணீர் பொழியத் தொழுங்தொறுங் காதலாற் றுதித்தான். (24)

ஈறின்மா தவனின் றித்திறம் பரவி யேத்தலு மிறைவனு மகிழ் ந்து, வீறுசான் முனிவ வெவ்வரம் பெறநீ விரும்பினை யவ்வர மளிப் பேங், கூறுநீ வேட்ட வரமென முனியுங் கொந்தழன் மெழுகென வுருகி, யாறுபோல் விழியிற் றுளிப்புன லொழுக வன்பினுற் றொழுதி வையுரைப்பான். (25)

ஐயநீ புவனத் தலகில்பல் லுயிர்க்கு மறிவுமா யவ்வுயிர்க் குயிராய், வெய்யவல் வினையா யவ்வினைப் பயனும் மேவினை நான்பெறவிரும்பும், பொய்யினல் வரங்கள் கேளெனப் புகன்றாய் போதமில் புன்மையேன் புரியுஞ், செய்கையுன் செயலே யன்றியெற் குளதோ திருவுளத் துல கெலாந் தெரிந்தோய். (26)

என்பல புகன்று பின்னரு முனிவ னிறைவனை நோக்கியான் சாபந், தனைச்சொலி லெனக்குத் தவமிகச் சாபத் தொழிலைய லோரீக் குமா தவங்க, ளினைத்துமன் றதல வரமரு ளெனவாங் கவன்மனக் கவ்வா மருளி, நினைப்புறு மன்ப ரிதயபுண் டரிகத் தமளியி னமலனு மகன்றான். (27)

கறைமிடற் றமல னவ்வர மளிப்பக் காயமே முதலிய வாறு, மறைதவிர்த் துயர்ந்த முனிவரன் விரத மிக்குற மனுவொரா யிரத்தி, னிறுதியி னளவும் பாரிசா தவனத் திறையவன் றிருவுள முவப்ப, மறையின்மந் திரத்தான் முறைமுறை பரவி வாசமா யவ்வயின் வதிந்தான். (28)

அரும்பெறற் றவத்தின் மேன்மையாற் றருக்கிப் பின்னரம் முனிவெகுண் டலர்மே, லிருந்தவன் ரேமா விந்திர னமர ரெண் டிசைப் பாலரிங் கிவரைப், பொருந்துமோர் திரண மெனநனி யிகழ் ந்து போதனுக் கலகிலாப் புவியுட், டிருந்துபூ சனையின் ருகவென் றுடன்று தீத்தகு சாபத்தை விளைத்தான். (29)

அன்றவ னிழைத்த சாபமுற் றதனு லம்புயத் தவன்றனக் கின் னம், பொன்றலில் புவனத் தவரெலாம் பரிவிற் பூசனை யாற்றிடார் புவிமேன், மன்றலங் கமலப் புதுமல ரமளி வானவன் கோயிலு மில்லை, வென்றுதம் புலனை யானருட் பெறுவோர் வெறுப்புறிற் கெடாதவ ருளரோ. (30)

மிடையிருள் சீத்துத் தெறுகதிர் பரப்பும் வெய்யவா னிரவிமண் டிலமு, மிடர்மிக நடுக்குற் றிவன்றவத் தழலா லெய்த்திடு மிந்திர னிமையோர், படரில்பண் ணவர்கள் பாதலத் துரகர் திசைதொறு மிவன்பெயர் பகரி, லுடலும்வெம் பயத்தாற் கரப்பர்பேய் பூதமீங் கிவ னேக்குமு னெளிக்கும். (31)

ஏலவார் குழலி பாகனுக் காளா முனிவர னின்னவா றுருழ்குங், காலையிலொருநாண் மயனெனுந் தெய்வகம்மியன் றனை வரவழைத்து, மாவிரு மிரக்கும் விளங்கொளிப் பசும்பொ னவ மணிநிரை குயிற்றி, யாலமுண் டிருண்ட கண்டனுக் கினிதி னாலய மியற்றென வறைந் தான். (32)

வேறு

ஆயசொற் றலைமேற் கொண்டாங் கமரர்கம் மியனு மோங்கி
மீயுயர் பாரி சாத வனநாப்பண் விமலன் வைகப்
பாய்கதிர்ப் பரிதி கோடி யுதயமால் வரையின் பாங்கர்ச்
சேயொளி விரிக்கு மாபோற் செம்பொனின் விமானஞ் செய்தான். (33)

விண்ணுறும் பதவி நீங்கி மேற்கதி பெறுதல் வேண்டிக்
கண்ணகன் புவியின் மேலாங் கற்பகப் பொதும்பர் மேவித்
தண்ணில வெறிக்கு நாளுங் கோட்களுந் தயங்கு மாபோன்
மண்ணிய வயிரத் திண்கான் மண்டபம் பலவுஞ் செய்தான். (34)

மின்றிரண் டிலங்க வண்ட கோளகை மேல தாகு
துன்றிய சடிலங் காட்டிச் சுவணமால் வரைபோல
வன்றிறற் சூல மேந்தி யிறுதியின் மாதோர் பாக
னின்றன் னெனத் தோன்று நிரைமணிச் சிகர

படிகளே றிணையு மோலப் பரவையே றிணையுஞ் சே
தடநெடுங் கிரிபோ னீண்டு தாரகை யுலகின் காறு
மிடையும்வெண் கொடிமீ தோங்க வியன்மணித் திரளின் கற்றை
புடைதொறுந் தயங்கப் பைம்பொற் புரிசையோ ரேழுஞ் செய்தான். ()

பவளமு முழுமா ணிக்கப் பன்மணித் திரளு மேன்மே
லவிரொளி பரப்ப நன்பொற் குறடும்வே திகையு மாக்கிக்
குவலயத் திழியும் பொற்பூங் கற்பகக் குழைக டோறுந்
தவழ்பசுங் குழவித் தென்ற றயங்குசா ளரமுஞ் செய்தான். (37)

இப்பரி சியற்றி யீசற் காலய மிதனுள் வெவ்வே
றொப்பிலங் கான்வேள் கால வயிரவ னெடுநீண் டீச
னெப்புவி களுக்குங் கண்ணு மிரவியோ டங்கத் தேவர்
செப்பிய திசையின் பால ரிவர்க்குமா லயங்கள் செய்தான். (38)

அயர்வறு பசும்பொற் கோயி லின்னன வமரர் நாட்டின்
மயன்வகுத் தமைத்து முன்சொன் மாதவ னுணை யான்மேல்
வியன்மறை விதியான் முன்சொல் விநாயக னாதி யாகப்
பயிலுறு தேவர்க் கெல்லாம் பலவிதப் பதிட்டை செய்தான். (39)

ஏற்றமத் தேவர்க் கெல்லா மதநுறை பதிட்டை செய்த
மாற்றரும் புகழ்மைத் தெய்வ மயன்றனை முனிவ னோக்கி
மேற்றவத் தயனுங் காணு வியக்குஞ்சிற் சபையொன் றின்னே
நாற்றிசை முழுதும் போற்ற நடேசனுக் கியற்று கென்றான். (40)

## வேறு

அன்ன வாசகங் கேட்டலு மமரர்கம் மியனதற் கியைந்தரி தாய,
மன்னு மாதவ முனிவரன் மகிழ்வுற மலரய னெனச்செய்வான் மதி

த்து, மின்னி லங்கிய வயிரநற் றூணிரைத் தொளிர்தர மேவிய நான்கு, பன்மணிக் கொடு முடியுறப் பசும்பொனாற் பலவிதழ் நாற்ப தும் வனைந்து. (41)

எய்த ரும்பிரத் தாரத்ர யமுமெழி லிரணிய கருப்பமு மியற் றிப், பைய ராமணிக் கற்றைகான் றொளிதரும் படிகொள்வே திகை முறை புனைந்து, துய்ய செஞ்சுடர்த் தம்பமு நிறுவியோர் சூழலிற் பலகதி ரனைத்துங், கையி னலயன் வகுப்படித் திலங்கிய கனகமன் றமுமுள தாக்கி. (42)

ஆன பன்மணி துவன்றிய கனகமா வம்பலத் தலகில்பே ரானப, ஞான நாடகம் பயின்றிடு நடேச்சுரன் றனக்குநான் மறைவிதி யதனாற், பேன வெண்டிரைப் பாற்கடலமளியி லறிதுயில் புரிதரு பெருமான், றூன்வ ணங்குறச் சபையினைப் பதிட்டிக்கு முறைப்படி யியற்றியத் தலத்தில். (43)

பரவு மெந்திர ராசனை விதிமுறை பதிட்டைசெய் தன்னத னுப் பண், விரவு மந்திர ராசனை யமைத்தவ னடுவுற விதியினை நோக்கி, புரைகொள் காமரா சியவெந் திரம்வகுத் துருப்பெறு முயிர்தோறு மொன்றாய்த், திரிவி லாதுறை முழுமுதற் கியைந்ததோர் சிற்சபை யின்னணஞ் செய்தான். (44)

தேவர் கம்மிய னியற்றுமம் முழுமணிச் சபையினைத் தெரிவுற நோக்கிப், பாவ வல்வினை போக்கிய முனிவரன் மகிழ்தலு மயனடி பணிந்து, சீவ நாயக னடேச் சனுக்குருச் செய்திட வேண்டுமென் றிசைப்பப், பூவி னன்முக னனையுமா முனிவரன் மயன்றனைப் பார்த்திது புகல்வான். (45)

வேறு

பொருவரும் விதிநூல் விஞ்சையிற் றெரிந்த புலமையோய் நன்றுநீ புகன்றாய், திருநடம் புரியு மீசனுக் குருவம் வேண்டுநீ செய் யென வதுகேட், டுருகியா தரவான் மாண்டொழிற் றெய்வ கம்மிய னியற்றுவா னுவந்தா, னுருவமா யுருவாய்ப் பல்லுயிர்க் குயிரா மவனு னக் குருவமியார் வகுப்பார்.

சுடருமிழ் பருதி யாயிர கோடி யொருங்குறத் தோன்றிய தென்னப், படரொளி பரப்புங் கோடிமாற் றிலகு பசும்பொனுங் கிருபதுலாத்தான், முடிவில்பற் பலவா யிலக்கண முளதா முருந்தனும் பிரமனு மங்ங, னடிமுடி யிவையென் றெளிதினிற் காண நடேசனுக் கோருரு வமைத்தான். (47)

தோழுகுலத் தூரவோன் மகிழ்வுற வமரர் கம்மியன் சோதனை மயர்ந்து, விழைமறை யாள ரருளிற்சக் கரப்ரத் தாரபூ ருவமுதல் விதியால் வழுவகல் வாத்து பூசனை முதலாம் விதானத்தி னுலவண் வனைந்த, வெழுதரு மெழில்கொ ளத்திரு வுருவி லிறைவனைப் பதிட்டைசெய் திப்பால். (48)

ஐங்கரன் முதலாம் வானவர் சோமாக் கந்தன்மற் றெவர்க்குமா முறையாற், பொங்கெழிற் படிவம் பலுபல வகுத்துப் பதிட்டையும் புரிந்துபுங் கவற்குச், செங்கதி ராழி யொன்பது மிரந்த்ர மொன்பதுஞ் சிறப்பவொன் பதுகாற், றங்குழா மணித்தேர் மானிடப் பிரமா ணப்படி சமைத்தனன் பின்னு. (49)

முராரிகே தனமு முறைமறைப் பிரமன் முதலிய தேவர்கே தனமும், பொராவருஞ் சமரிற் புறங்கொடுத் திரியப் போந்தது புவனகோ டிகளுஞ், சராசர முழுது மழியும்வே லையினுந் தனியுயிர்த் திடுவதித் தகைய, பராவரு மிடபப் பதாகையொன் றியற்றி யின்னன் பணியெலா மயர்ந்தான். (50)

செயலரும் பதிட்டை விதியினிற் றவறு மற்றுள குற்றமுந் தீரப், பயின்மணிக் கோயி லியற்றியாங் கதனிற் றன்பெய ரிலிங்கமாப் பண்ணி, யியல்பெறப் புரிந்து பெருந்தவ னருளா லேடவிழ் மலரயனெனலா, மயன்முக மலரத் தவத்தரு வாசன் விடைதர வானுலகடைந்தான். (51)

இம்முறை மயன்செ யாலய மதனுட் டெய்வவிக் கிரகமற் றுவையு, மெய்ம்மையா யகிலப் பல்லுரு வனைத்தும் வியாபியாம் பரிசினால் வியாபித், தம்முறை தேவ ராய்மகிழ்ந் தமர்ந்தா னருந்தவ

முனிவனுக் கன்பான், மும்மலந் தவிர்ந்து மேலனுக் கிரகம் பண்ணு வான் முழுமுதற் கடவுள் (52)

எல்லையில் பெரும்பே றெமக்கருள் பரம னின்னண முறையு நாட் பரவிற், செல்கதி யளிக்கும் பாரிசா தவனத் தெம்பிரான் றிரு வுளஞ் சிறப்ப, நல்லறந் துதிக்கும் வசிட்டனே முதலா மருடியரால் விழா நடத்த, மல்லன்மா தவத்தா னுயர்துரு வாச வரமுனி முயன்ற னன் மகிழ்வால். 53)

சித்திரை மதியில் வளர்பிறைத் திதியின் மான்றலை நாளெனுந் தினத்தி, லுத்தம வமையத் தங்குரார்ப் பணபூ ருவமுத லாப்புரிந் துவப்பாய், முத்தல மதிக்கு நான்மறை முழங்கத் தேவதுந் துபிமுறை முழங்க, வெத்தரா தலமும் புகழ்தரு வனேசற் கெழில்பெற விடைக் கொடி யேற்றி. (54)

விண்டொடுந் தாள வெண்குடை தயங்க விடைநெடுந் துவசம்வா னிரவி, மண்டில முரிஞ்சப் பாற்கடற் றிரைபோன் மணிகொள்சா மரைமுறை யிரட்ட, வெண்டரு மன்வி லரமடந் தையர்க ணடித்திட யிமையவ ரெவருங், கண்டுகண் களிப்பக் கணபதி முதலாங் கடவுளர் விழாத்தின மயர்ந்து. (55)

பாதலத் தூரக ஞயிரஞ் சுடிகைப் பன்மணிக் கற்றைகான் றில ங்க, வாதவன் புரவி யிரதமுந் தலைசாய்த் தயர்வுற முனமயன் வகுத்த, மேதகு கனகக் கொடிநெடுந் தடந்தேர் விழாவுமாங் கயர்ந்துசித்திரை யா, மோதுநாண் மகிழ்வாற் றீர்த்தவுற் சவமு மொளிபெற வாற்றியங் குவந்து. (56)

பற்றறத் துறந்த பண்ணவர்|மறையோர்|சூழ்வரப் பாரிசா தவனத், துற்றுவா ழெமது கண்ணுதற் கயிலை யொருவனை வெள்ளிடை வணங்கி, யற்பொடுங் கரத்தாற் றுளமிட் டுருகிக் காதர வாதரம் பெருகப், பெற்றநல் லறிவாற் றவத்துரு வாசன் பெரிதுவந் தேத்தி னன் பின்னர். (57)

பாரதொளி யிமைக்குங் கயிலையின் முளரிப் பண்ணவ னுலகினிற் பரமன், சாரந்தருள் விளைப்ப வுற்சவ மியற்று மியல்பெனத் தொன்

ணிலத் தெளிதின், வரந்தரூங் கனகக் கற்பக வனத்தி லின்றுயர் விழாவென மலரோன், புரந்தரன் முதலா விபுதர்மற் றெவருந் தவத் திரு வாசனைப் புகழ்ந்தார். (58)

பரவைசூழ் புவனப் பரப்பினு மோரேழ் பாதலத் திடையினும் பரந்து, விரவுவா னகத்து மருவிய தேவர் விஞ்சையர் கருடர்கிம்புருடர், பொருவில்கந் தருவர் கின்னர ருரகர் தானவர் யாவரும் புரிவாய்த், துரிசக றருவா சன்றனை நோக்கித் தூயரா யவரவர் துதித்தார். (59)

தூர்வையை நுகரு மாதவன் றவத்தின் றொன்மையாற் புரந்தரன் முளரிப், பேரெழிற் பிரமன் பதமெலா நடுங்கு மெனிலவன் பெருமையார் புகல்வார், வேரியங் கடுக்கை வேய்ந்தவ னடியார்க் கறியலா மாதலால் விரிநீர்ப், பாரின்மா னவர்கள் யாவரும் பரமன் பத்தரே யாகவிப் பாங்கால். (60)

அன்னநற் றவங்க ளியற்றிய முனிவ னண்டரன் விழாமுடி வதனிற், பின்னருங் களரிப் பரனையோர் கோடி மாமதி யளியொடும் பிறங்க, வுன்னுமோர் கோடி யாதவர் குழுமி யுதயமால் வரையிடை யுதித்தாங், கென்னவுன் னினன்ற னிதயபுண் டரிகத் திதக்கர ணமும்விடுத் திணிதின். (61)

மூளுமா தரவா லருந்தவ முனிவன் முன்னுமுன் முக்கணெம் பெருமான், வேளொடு நந்தி பிரமத கணங்கள் விண்ணவர் கின்னர ரியக்கர், கோளில்சூ ரியர்பன் னிருவரெண் வசுக்கள் குலவுருத்திரர் புதி ரொருவ, ராளுகந் தளிக்கு மடியரீங் கிவர்கள் சூழ்வர வாங்கெழுந் தனனால். (62)

எழுந்தருள் கயிலை யிறைவனைப் பரவிக் காண்டொறுங் காண்டொறு மிறைஞ்சிச், செழுந்தவ முனிவன் மெய்ம்மயிர் பொடிப்ப விழிபுனல் சிதறவா னந்தம், பொழிந்திடப் பலகா னெஞ்சநெக் குருகிப் புகழ்தலு மழுவலான் புரிவாற், றெழுந்தவ முனியை யன்பினு னோக்கிச் சொல்லின னீதவன் றுதி. (63)

அறவரி லுயர்ந்த நற்றவத் தோய்நீ யன்பினு லெமக்கடி யவ ஞயச், செறிவுறு|மருளாற் பூசனை புரிந்து திவ்விய வுற்சவஞ் செய்து, பெறலரும் விரதம் பூண்டனை மகிழ்ந்தேம் யாதுகா ரணமினிப் பெறு தற், குறுவரம் யாது கருதினை புகலென் றுரைத்தனன் பின்னரு முரைப்பான். (64)

ஐந்தவித் தான்ற மாதவத் தோய்நீ யவாவுறும் வரங்கண்மற் றனைத் துந், தந்தனக் கருள்வோந் தொண்டருக் குதவா வரமிலை விரைவி னிற் றக்க, மந்திர முறுமற் புகலென முனிவன் பின்னரும் பன் முறை வணங்கி, யிந்துசே கரன்ற னிணையடிக் கமல மேத்தியாங் கிவையெடுத் திசைப்பான். (65)

சகதல முழுதும் வியாபியா யழியாச் சராசர வுயிர்க்கெலா முயிரா, யகமொடு புறமா யிருவினைப் பயனுய்ச் சுவர்க்கமா யருநர கமுமாய்த் தகைபெறு மறிவாய் மறவியாய்ப் பிறிவில் சச்சிதா னந்தவா ரிதியாய், நிகரிறற் பரமா நிருமல வரந்தா னின்றரி சனத்தின்மே லுளதோ. (66)

பற்பல விரத மருச்சனை யோக பாவனை யிவையெலாம் பயின் றும், பிற்பெறு பயன்யா துன்றரி சனமாம் பேறலாற் பிறிதுவே றுள தோ, வுற்புதா வுன்றன் றிருவனுக் கிரக மருள்வதே பெருவர மதன் மேற், செரற்றிடும் வரம்யா னறிகிலேன் றெரியச் சுருதிக ளுரைப் பது மிதுவால். (67)

அலகிலா ரணங்க ளாகம புராண மருமறை மற்றுள பலவாங், கலைகளு முனது காட்சியே பயனென் றியம்பிடு முனிவரர் கருத்தா, னிலைபெற வுரைக்கு மொழியுமீ தன்றி நின்றரி சனமலா வரத்திற், பலனறி தென்ப வெவருமா தலினு லெனக்கிது வேபெறும் பலனும்.

ஆரண முழுது மறிவுரு நீயின் றறிவுற் வீண்டெழுந் தருளுங், காரண மடிகேள் யாதெனக் குனது காட்சியாற் பாக்கிய மனைத்தும், பூரண மாவின் றெய்திய தடியேன் புனிதனு யினனுன தருளாஞ், மேருவுந் திரண மெனக்கினை யொருவர் விண்ணினு மண்ணினு முளரோ. (69)

மெல்லிய திரண மாயவென் றனக்கு வெளிப்படத் தோன்றினை யதனாற், புல்லிய னெனினு மின்னனுக் கிரகத் தினுக்குரித் தாயி னேன் புரியும், பல்பெருந் தவமும் பயிலுநூன் மறையுஞ் செபங்களுங் கைவரும் பலனு, நல்கின வெளியேற் குன்றரி சனக்கா லெனப்பல வின்னன் நவின்று. (70)

அளிதவ ழிதழித் தெரியல்வா னவனைப் பின்னரு மருந்தவன் வணங்கித், தெளிவுறு மறிவா லீதெடுத் துரைப்பான் சிவபுரத் திறைவனீ யென்பாற், களைகணு யளிக்கும் பெருவர முதவக் கரு திணு லம்முறைத் தருள்பின், பெளியனீ புகலு மவ்வரங் கேட்ப னென்னு மெம்பிரா னியம்பும். (71)

தவலரும் விரத முனிவரின் மேலாந் தவத்தினே யடியவர் தமக் குப், புவிமுத லொருமூன் றுலகினு மற்றைப் புறத்தினும் பூருவங் கொடாத, வுவமையில் வரமும் பயனுமில் லெனமுன் புரைத்தன மினி யுரை யுளதோ, விவணுனக் கியன்ற வரமிது வெனக்கூ றெனமுனி வானுமீ தியம்பும். (72)

அண்ணனீ கனகப் பொதுவினிற் புலிக்கா லருந்தவன் பதஞ்சலி பரவப், பெண்ணணங் கொருபான் மகிழ்வுற வமரர் பிரமன்மா லிந்தி ரன்பிறரு, மெண்ணெகிழ்ந் திறைஞ்ச வனுக்கிர கந்தா னுலகெலாஞ் செயும்பொருட் டிரவோ, ரெண்ணரும் பரமா னந்தநா டகமுன பியற் றினை யந்நட மின்னும். (73)

யான்றவ மிழைக்கு மித்தரு வனத்தி னினமணிக் கற்றைகாஞ் றிலங்கி, வான்றொடுங் கனகச் சிகரமா மன்றின் மலைமக ளொடுநடித் தருணீ, யான்றநல் விரத மித்தலத் தடியே னுற்றிய தப்பொருட் டெனக்கன், றீன்றவா னென்னக் கரைந்துமா தவனீ தியம்பமேற் பர மனு மிசைப்பான். (74)

சச்சிதா னந்தத் தாண்டவந் தொழுதத் தரிசனந் தனைப்பெறு நாளு, மிச்சையா முனிவ வம்முறை நடன மியற்றுவோ மெனப் பின்னு மிசைப்பான், முச்சகம் பரவுங் கந்தமா தனத்தி லுறுபதி னுயிர்

முனிவர், மெச்சிய சைவ நெறியுளார் புனிதர் மாதவம் யாவையு மிருந்தோர். (75)

அந்தநற் றவர்கள் பரிலர்தம் பாலர் சிறுவர்நற் கிளையொடு மமர்ந் தோர், மந்திர மறையோ ராங்கவ ரெமது மாநடத் தரிசன மகிழ்ந்து, வந்தனை புரியுங் கருத்தினுல் விரதம் பூண்டொண்மை வழுத்துவோ ரின்னோர், தந்தமர் முதலா மனைவரும் பாற்ப கற்பத்தி விம்பரிற் சார்வார். (76)

மாலைவெள் ளருவி மணிகொழித் திழியுங் கந்தமா தனவரை மருங்கிற், சால்புறு முனிவ ரெய்துநா ளெமது தாண்டவ தரிசனந் தருவோ, நாலிரு திசையும் புவனமுந் தொழுநீ யவரொடு தரிசன நயந்து, மேலுநத் துதிசெய் தவருறு மளவு மித்தரு வனத்தினில் விரும்பி. (77)

பூசனை யயர்ந்து சச்சிதா னந்தப் பொதுநடத் தரிசன மின்று, நேசமா முனிவ கண்டதாக் கருதி நீயயிர்த் திடாதுறை வைவே, லீசனு னுனக்கு மறையுப தேச மியற்றுவிப் போமென வியம்பி, மாசிலா விரத முழுவதும் புரியம் மாதவற் கபயமும் வழங்கி. (78)

## வேறு.

பாகசா தனன்பொன் னுட்டிற் பாரிசா தவன நாப்ப
ணுகலோ கத்தின் காறு நண்ணியே சுயம்பு மூர்த்த
மாகிய சிவலிங் கத்தி னருந்தவன் பரமா னந்
போகவா ரிதியின் மூழ்க மறைந்தனன் கயிலைப் புத்தேள். (79)

அருந்தவத் துயர்ந்தோன் பின்ன ரத்தலத் தவர்க ளோடுந்
திருந்திய கயிலை யீசன் றேவரைக் காக்குஞ் செவ்வே
ளிரந்தவர்க் கருள்செய் முக்க ணிமயமா தெனுமின் னோர்க்குப்
பொருந்திய வறிவாற் பூசை விதிமுறை புரிந்து பின்னும். (80)

ஆலய மெழுகி மீது ரன்பினு லலகு மிட்டுக்
கோலிநந் தனவ னங்கள் கொழுமல ரோடை செய்தாங்

காலமுண் டவற்கு நாளு மபிடேக மாதி யாக
வேலுநற் கரும மாற்றி யின்னண மொழுகுங் காலை (81)

## வேறு

மேம்படு தவத்து வியாதனே முதலா மருடிக ளனைவருமுவிச விப், பாம்புரை யார்த்த பராபர முதலா நிருமலன் பாரிசா தவன, மாம்பதி மருவி யாட்டயர் வோமென் றறைந்தது மருந்தவ னறி வாற், றீம்பறப் புரியு மொழுக்கமுங் கேட்டு மகிழ்வொடுந் தருவனஞ் சேர்ந்தார். (82)

சங்கியம் பியநற் காதையை யுரைப்போ ரினிதுறக் கேட்பவ ரிவர்பாற், பாங்குறப் பயின்ற பண்பினோ ரின்னோர் தம்மொடும் பரி வுறப் பசர்வோ, ராங்கவர் குலத்துட் டோன்றினோ ரெவரு மளப்பரும் போகமுந் றளிகொ, டேங்கம ழிதழித் தெரியலெம் பெருமான் கயி லையி லெய்துவர் திண்ணம். (83)

## கதாசாரம்

மஹாநதி ஏழனுட் சிறந்தது காவிரிநதி. இதனருகில் தேவர்களும், முனிவர்களும், விப்பிரர்களும் வசிப்பர். தேவர்களாலும், முனிவர்க ளாலும் பூஜிக்கப்பெற்ற எண்ணிறந்த சிவதலங்களுமுண்டு. இந்நதி யில் மூழ்கில் சகல பாவங்களும் போம். இந்நதி நீரை யுட்கொண்டால் கட்குடித்த பாவம் போம். இந்த நதிக்குத் தெற்கிலே, திருவாரூரென் னுந் திவ்விய க்ஷேத்திரத்திற்கு நிருதிதிசையிலே, ஒன்றரை யோசனை தூரத்திலே பாரிசாதவனமென்று ஓர் சிவதலமிருக்கின்றது. அத்தல மெத்தலத்தினு முயர்ந்தது. அதில் தேவர்களும், முனிவர்களும், விப்பிரோத்தமர்களும், சைவோத்தமர்களும் வசிப்பர். குழந்தையும், கிளியும் பேசிக்கொண்டிருக்கும். வண்டினங்கள் வேதாகமப்பொருளை யோதிக்கொண்டிருக்கும். பூவைக்குக் குயில் பதில் சொல்லும். புலியும், பசுவும் ஓரிடத்தில் தண்ணீரருந்தும். நாயும், பன்றியும் ஒன்றாய்த் திரி யும். பாம்பின் வாயைத் தலைக்கணையாக வைத்துக்கொண்டு எலி தூங்கும். சிங்கமும், யானையுஞ் சிநேகமாயிருக்கும். சிங்கமும், சரபமுஞ் சேர்ந்து விளையாடும். பரம்பும், கீரியும் பகையின்றி யிருக்கும். புலி முலைப்பாலை

மானகனறு குடிக்கும். அன்னமும், கிளியும், பூவையும் இருடிபத்தினி களிடம் வந்து விளையாடும். புலி (மாமிசம் புசிக்காமல்) புல்லைப் புசிக்கும். இப்புண்ணிய தலத்திலே, முன்னொரு காலத்திலே பராசமுனிவர், காலவமுனிவர் இவர்கள் அமைத்த ஆலயஞ் சிதைந்து சிவலிங்கத் திருவுருவ மறைந்த தானத்திலே (காமம், குரோதம், லோபம், மோகம்,மதம்,மாற்சரியமென்னும் பகைவரை யடக்கி ஆணவம், மாயை, காமியமென்னும் முக்குற்றத்தையுந் தொலைத்து, பிறவிக்கடலையும் பிரம கற்பத்தையுங் கடந்த,) துருவாச முனிவரென்பவர் தேவருலகி லிருந்து, ஓர் பாரிசாத விருக்ஷத்தைக் கொணர்ந்துவைத்து வளர்த்து, அதன் கீழ்பால் ஒரு தடாக முண்டுபண்ணி, அத்தடாக மண்ணிற் கொஞ்சமெடுத்து, சிவலிங்கத் திருவுரு வமைத்து, அத்திருவுருவை அவ்விருக்ஷத்தினடியில் வைத்துப் பூசித்தலோடு தேவியார் திருவுருவமும் அமைத்து அமுதவல்லி யென்று பெயரிட்டுப் பூசித்துக்கொண் டிருந்தனர். சிவபெருமான் அம்முனிவர் புரியுந் தவத்துக்கிரங்கி அவ்விலிங்கத்தினின் றெழுந்தருளி காட்சிகொடுத்து, உனக்கு வேண்டுவன யாதென வினவ? முனிவர் பெருந்தகை வணங்கித் துதித்து எந்தாய்! யான் பிறரைச் சபிக்கில் எனக்குத் தவம் வளரவும், மற்றவருக்குத் தவம் குறையவும் வரமருள வேண்டுமென்றார். சிவபெருமான் அங்ஙனமே கொடுத்து அவ்விலிங்கத்திலேயே மறைந்தருளினர். அதுமுதல் அத்தலத்திற்குப் பாரிசாதவனம், மந்தாரவனம், கற்பகவனம், தருவனமென்னும் பெயர்களுண்டாயின. துருவாச முனிவர் அன்று முதல் ஆயிரம் மனுவந்தரம் வரையில் சிவபெருமானைப் பூசித்துக் கொண்டிருந்தனர். இவ்விதந் தவம்புரியுங் காலத்தில் பிரம விஷ்ணுக்களையும் இந்திராதி தேவர்களையும் ஓர் திரணமாக நினைத்து பிரமதேவருக்குப் பூசையில்லாமற் போகவெனச் சபித்தனர். அச்சாபத்தினால் பிரமதேவருக்குப் பூவுலகத்தில் இன்றும் ஆலயமும் பூசையுமில்லாமற் போயின.

துருவாச முனிவர் (தேவ தச்சனாகிய) மயனை வரவழைத்து, சிவலிங்கப் பெருமான், தேவியார் இவர்களுக்கு உயர்ந்த பொன்விமானங்களும் வயிரக்கால் மண்டபங்களும், சபாநாயக பெருமானுக்கு வயிரக்

கால் நிறுத்திய பொற்சபையும், (விநாயகர், சோமாஸ்கந்தர், சுப்பிர மண்யர், தக்ஷிணாமூர்த்தி, காலவயிரவர், சண்டிகேசுவரர், சந்திர சூரி யர், திக்குப்பாலகர் முதலிய) பரிவார தேவதைகளுக்குத் தனித் தனி ஆலயங்களும், ஏழு சுற்று மதில்களும், கோபுரங்களும், இருபது தலாம் பசும்பொன்னால் சபாநாயகப் பெருமான் திருவுருவமும், பரி வார தேவதைகள் திருவுருவங்களும், ஒன்பதுகால் மஹாரதமும், துஜஸ்தம்பமும் அமைத்து அந்தந்த மூர்த்திக்குரிய தானத்தில் அந் தந்த மூர்த்தியைப் பிரதிஷ்டை புரிந்து பூசித்தனர். மயன் (தான் ஆலய முதலியன அமைத்ததில் ஏதேனுங் குற்றம் நேர்ந்திருந்தால் அது நீங்க) தன் பெயரால் ஓர் சிவலிங்கப் பிரதிஷ்டை புரிந்து பூசித்து துருவாச முனிவரிடம் விடைபெற்று தேவலோகஞ் சென் றான். துருவாச முனிவர் (திருவிழா செயக்கருதி) வசிட்டர் முதலிய மகருஷிகளை வரவழைத்து, சித்திரைமாசம் பூர்வபக்க மிருகசிர நக்ஷத்திரத்தில் விதிப்படி இடபக்கொடி யேற்றி, பத்துநாளுத்ஸவம் நடாத்தினர். அதில் ஐந்தாநாள் இடபோத்ஸவமும், ஒன்பதாநாள் மஹா ரதோத்ஸவமும், பத்தாநாள் துருவாச தீர்த்தோத்ஸவமும் விசேஷமாக நடாத்தினர். இவ்விதம் பிரம்மோத்ஸவம் நடாத்தி அன்பும் அச்சமும் பெருகத் துதித்து வணங்கி தனது இருதய கமல மாகிய திருக்கோயிலினிடத்தில் பரமேஸ்வரன் (கோடி சந்திரரும், கோடி சூரியரும் ஒரே காலத்தில் உதயமானால் எவ்வளவு சோதிமயமோ அவ்வளவு சோதிமய சொரூபமாய்) விளங்குவதாகத் தியானித்தார். இவ்வாறு தியானிக்குஞ் சமயத்தில் சிவபெருமான் தன்னை விநாயகர், சுப்பிரமண்யர், திருநந்திதேவர், பூதகணங்கள், வானவர், கின்ன ரர், கிம்புருடர், இயக்கர், பன்னிரு சூரியர், பதினொரு ருத்திரர், அஷ்டவசுக்கள், சிவகணங்கள் முதலியோர் சூழ துருவாச முனி வர் முன் தோன்றினர். இவ்வாறு தோன்றிய சிவபெருமானைத் துரு வாச முனிவர் பார்க்குந்தோறும் மெய்ம்மயிர் பொடிப்ப, கட்புனலி சோர, நாக்குழற, நெஞ்சம் நெக்குருக ஆனந்த பரவசராய் வணங்கித் துதித்தார். பரமபதி துருவாசரை நோக்கி முனிவர்களிலே சிறந்த நற்றவ முனிவ ! நீ எமக்கடியவனாய் அன்பினால் பூசனை புரிந்து, உத்

லவமுமியற்றி, அரிதாகிய தவம் புரிந்தனை மகிழ்ந்தேம்; நீ வேண்டும் வரங்களனைத்துந் தருவோம்,தொண்டருக்குதவா வரமில்லை, நீ கருதியதைக் கேளென்றனர். துருவாச முனிவர் பன்முறை வணங்கித் துதித்து சர்வவியாபியாய், உயிர்க்குயிராய், அகமாய், புறமாய், இருவினைப் பயனாய், சுவர்க்கமாய், நரகமாய், அறிவாய், மறவியாய், சச்சிதானந்த வாரிதியாய், நிகரில்லாத தற்பரமாய் விளங்கும் ஹே நிர்மல! தவம், பூசை, தியானம் இவையெல்லாம் புரிவது நின் தரிசனத்தின் பொருட்டேயாம். ஆதலால், சிதம்பர நகரிலே கனக சபையிலே வியாக்கிர பாதர், பதஞ்சலி முனிவர் முதலியோர் காண நடித்தருளிய பரமானந்தப் பெருங்கூத்தை யான் தவம் புரியு மித்தருவனச் சபையிலே யான் காண நடித்தருள வேண்டுமெனத் துதித்தார். கைலாசபதி துருவாச முனிவரை நோக்கி நீ விரும்பிய சச்சிதானந்தத் தனிப்பெருந் தாண்டவத்தைப் பாத்ம கற்பத்திலே (திக்குமலைகளிலொன்றாகிய)கந்தமாதனம் அறுபதினாயிர முனிவர்களும் இங்கு வருங்காலத்திலே நடித்தருள்வாம். சுப்பிரமண்யனால் பஞ்சாக்கர உபதேசமுஞ் செய்விப்பாம்; அச்சச்சிதானந்த நாடகத்தை இன்று கண்டதாகக் கருதிக்கொண்டிரு வென்று அபயங் கொடுத்து சுயம்புமூர்த்தியாகி விளங்குஞ் சிவலிங்கத் திருவுருவில் மறைந்தருளினார்.

துருவாச முனிவர் அத்தலத்தில் வசிப்பவர்களோடு அவ்வாலயத்தைச் சுற்றி வில்வம், பாதிரி, கோங்கு, பன்னி, கொன்றை, புலிநகக்கொன்றை, பொன்னாவிரை, மந்தாரை, சண்பகம், குரா, குருந்து, மகிழ், புன்னை, சுரபுன்னை, வெட்சி, கடம்பு, ஆத்தி, செருந்தி, பவளமல்லிகை, வன்னி, பலாசு, மாவிலிங்கை, நுணா, விளா, முக்கிளுவை, நெல்லி, நாவல், இலந்தை, பலா, மா, எலுமிச்சை, நாரத்தை, தமரத்தை, குன்ஞ்சி, மாதுளை, நொச்சி, அகில், சந்தனம், அசோகு, வெள்ளெருக்கு, மருது, அல்ரி யென்பனவாகிய கோட்டுப்பூ வகைகளும்; மல்லிகை, முல்லை, இருவாட்சி, பிச்சி, வெண்காக்கொன்றை, கருங்காக்கொன்றை, கருமுகை, தாளி, வெற்றிலை, குருக்கத்தி யென்பனவாகிய கொடிப்பூ வகைகளும்; சந்தியாவர்த்தம், குடமல்லிகை, செம்பரத்தை, கொக்கிறகு மந்தாரை, துளசி, செங்கீரை, பட்டி, நாயுருவி,

கருஞூமத்தை, பொன்னூமத்தை, கத்தரி, தகரை, செவ்வந்தி, தும்பை, வெட்டிவேர், இலாமச்சை, தருப்பை, மருக்கொழுந்து, மருவு, சிவ கரந்தை, விஷ்ணுகாந்தி, மாசிப்பச்சை, விபூதிப்பச்சை, பொற்றலைக் கையாந்தகரை, எள்ளு, பூளை, அறுகு என்பனவாகிய நிலப்பூ வகை களும்; பலவித வாழை, செவ்விளநீர், சந்திரகேளி யிளநீர், சூரிய கேளி யிளநீர் இவைகளும் நிறைந்த நந்தன வனங்களும்; செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், செவ்வாம்பல், வெள்ளாம் பல் என்பனவாகிய நீர்ப்பூவகைகள் நிறைந்த ஓடைகளும் அமைத்து சிவபெருமானைப் பூசித்துக்கொண்டு தவம் புரிந்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

குறிப்பு.—சித்திரை மாசம் மிருகசிர நக்ஷத்திரத்தில் துவஜாரோ கணஞ் செய்து, இரண்டாநாள் முதல் பத்தாநாள் வரையில் தினந் தோறும் சிவலிங்கப்பெருமான் முதலிய எல்லா மூர்த்திகளுக்கும் விசேஷாபிஷேகாதிகள் செய்வித்து, காலை மாலை யிருவேளைகளிலும் விநாயகர், சுப்பிரமண்யர், சோமாஸ்கந்தர், தனியம்மன், சண்டேசுவரர் இப்பஞ்சமூர்த்திகளையும் இரண்டாநாள் முதல் நாலாநாள வரையில் பல வாகனங்களிலும் ஐந்தாநாள் மூஷிகம், மயில், பெரிய விடபம், சிறியவிடபம், பதுமபீடம், இப்பஞ்ச வாகனங்களில் தனித்தனி சப்பரத்திலும் ஆறுநாள் முதல் எட்டாநாள் வரையில் பல வாகனங் களிலும் ஒன்பதாநாள் மஹாரதங்களிலும் வீதியிலெழுந்தருளி வரப் பண்ணி பத்தாநாள் துருவாச தீர்த்தோத்ஸவ முதலியன நடத்துவது மிக்க விசேஷமாம்.

## மூன்றாவது

## நந்தச்சருக்கம்

—நச்சிற்றம்பலம்.

ாமறை தெரிக்கும் வியாதனே முதலா மாதவர் „ தருவனத் தடைந்து, தாமுறை புரியு மொழுக்கமுங் கந்த மாதனத் தடவரை மருங்கிற், ரேமில்பன் முனிவர் வந்திழைத் ததுவுஞ் சுருதிமேலவ னடித் ததுவு,மேமுறப் பிரமன் றருமுனி கேட்ப நந்திவா னவனிவை யிசைப்பான். (1)

தன்னிகர் பசும்பூங் கற்பக வனத்திற் சார்ந்திடும் வியாதனே முதலா, மன்னமா தவரோ டுலகெலா மளிக்கு நிமித்தமா வகிலகோ டிகளின், மன்னுயிர்க் குயிரா மொருவனைக் கருதி யிரவியின் மண்டில நடுங்கப், பொன்னிலத் திமையோர் வெருவுறத் துருவா சன்பெரு மாதவம் புரிந்தான். (2)

அருமறை வியாதன் கண்ணுவன் பரத்து வாசன்பார்க் கவனெ னும் பெரியோன், பெரியபிங் கலன்கார்க் கியனுவ மனியன் பிருதுசு கோத்திரன் பிரமன், றருமகத் தியன்மாத் தியந்தனன் மங்குஜதசிரன் பிராதிருத் தகைசேர், கிருதுசங் கிருதி யுசிநரன் றிருவன் மவுனபார்க் கவனெனக் கிளந்தோர். (3)

அத்திரி யேக நேத்திரன் றால லோசன னங்கிரா விரத, வித்த கம் புரியுஞ் சங்குமா தவனிங் கிவர்தமா னுக்கரும் விரவி, நித்திலம் வயல்சூழ் களந்தையி னளவுஞ் சாலைகள் புடைதொறு நெருங்கப், பத்தியி னியற்றிச் சுற்றெருகு குரோசப் பரப்புற மருவினர் பரிவால். (4)

நாற்கதி யகற்றி மும்மலங் களைந்து நால்வகைத் தோற்றமுங் கழந்து, மேற்கதி யளிப்ப வாங்கவ ரெவரும் வேறுவே றிலிங்கமுண் டாக்கிப், போற்றரும் பூசை விதிமுறை யயர்ந்தும் பொருவில்சற் குருபுகல் விதியின், பாற்பட மறையின் மேற்படுந் தெய்வ வைந்தெ ழுத் தையுமுறை பயின்றும். (5)

உணர்வினு லணியு மூன்பெரும் பாவம் போக்கிடு முருத்திர வக்க, மணிகொண்மா லிகையை யழகுறப் புனைந்து மறையினுற் றிரு வெண்ணீ றணிந்தும், பணவர வசைத்தோன் சச்சிதா னந்த நாடகங் காண்குறும் பரிவா, லிணரிள நறும்பூங் கற்பக வனத்தின் மாதவ மெய்தியு மிருந்தார். (6)

அவிகொளா குதிசெய் புகையிருட் படல மவிர்கதி ராயிரம் பரப் புந், தவனமண் டலத்தி னெல்லையுங் கடந்து சேரலாற் றுளிமுகி றவழு, மிவரிளம் பசும்பூங் கற்பக வனத்தி லிருடியர் தவாக்கினிக் கிடருற் றவமையி லிரவி யொளித்தன னெனவாங் கிரவியி னுளரி மழுங் கிடுமால். (7)

ஓதுநான் மறையின் முழக்கினுற் றவள நீற்றொளி பரப்பலா லுலவாப், போதமா தவத்தால் வீக்கிய சடிலச் செந்துகிர்க் கற்றையின் பொலிவாற், றீதக னளின வக்கமா லையுமேற் றரித்தலாற் பாற்கட லிவணு, மேதகு நறும்பூங் கற்பக வனத்திற் றவம்புரி யிருடியர் வெள் ளம். (8)

காலமங் குணர்ந்து மழைமுகில் பொழியு மாறெனக் கதமிலம் முனிவர், வேலைக டோறு நான்மறை விதியா னித்திய வினையெ லாம் புரியச், சூல்வளை யினங்கள் வயிறுளைந் தீன்ற வெண்மணிச் சோதிகான் றிமைக்குஞ், சேலுலாம் வயல்சூழ் நாடெலா நிதிகள் சிறந்துபல் வளமுமா யினவால். (9)

ஈங்கிவர் புரியு மாதவப் பெருமை யொருவரா லுரைப்பரி திவ ரிற், றீங்கற நுகரு முண்டிநீத் தமைந்தோர் சிலர்புனல் பருகுவோர் சிலர்க, டேங்கிய வுதகத் தமிழ்ந்திநிற் பவர்கள் சிலர்மதி வதனமே னோக்கி, யோங்கிநிற் பவர்கள் சிலர்சரு கருந்தி யுறுபசி யொழிப்பவர் சிலரால். (10)

இருவகை புரியுஞ் சாந்திரா யணநோன் பியற்றுவோர் சிலருயிர்ப் பொடுக்கித், தருவெனப் பகர நிற்பவர் சில்லோர் தாளுற நிற்பவர் சிலர்தாட், பெருவிர லூன்றி நிற்பவர் சிலர்பஞ் சாக்கினி மத்தியிற்

பிரியா, தரியநல் விரத மாற்றுவோர் சிலர்யோ கடைபவ ரலகின்மா முனிவர். (11)

ஐம்பகற் கொருகா லுண்பவ ரநேக ரறுமதிக் கொருபொழு தயின்று, வெம்பசி தவிர்ப்போ ரவரினும் பலர்மு வைந்துநாட் செல்வுணல் விரும்பு, நம்புநீர் முனிவர் பலர்களின் னணைநா நாவித நற்றவம் புரிந்தா, ரிம்பரெம் பெருமான் ஞானநா டகஞ்செ யமையமு மணித்தினெய் தியதால். (12)

மிகுமணி யருவிக் கந்தமா தனமா மோங்கலின் மேவிநல் விரதம், புகரறப் புரியு மோரறு பதினு யிரவரும் புதுமதி புனைந்து, துகிரிளங் கதிர்தோய்ந் திலகிய சடிலத் தோன்றல்கற் பகவனத் தியைந்து, மகி தலந் துதிக்க ஞானநா டகஞ்செய் காலமங் குணர்ந்திவண் வந்தார். ()

## வேறு

நண்ணு மாதவர் தாந்துரு வாசனை நயந்தா
ரெண்ண ருந்துரு வாசனுச் சிரமமின் றெய்தி
மண்ணி னுமலம் புனிதவா யினமுனம் வகுத்த
புண்ணி யப்பய னிதுவெனுப் பின்னரும் புகல்வார். (14)

## வேறு

இனைய மாதவற் காவிறை யாமுதற்
புனித் னைந்த நட்டம் புரியுமா
லனைய மாமுனி சீரினை யந்தமா
றனைய னுயினுஞ் சாற்றுதற் கொண்ணுமோ. (15)

என்ன மாதவர் யாவரு மின்னனை
பண்ணி யேத்தினர் பன்முறை யத்தவ
மன்ன னீங்கிவர்க் கண்டு மகிழ்வுறச்
சொன்ன யந்துபல் காற்றுதித் தானரோ. (16)

மங்கை பாகன் றிருவரு ளான்மறை
யெங்கு மோது மியல்பி னிருடியுந்

தங்கு மன்புறு தன்னடி யாரொடு
மங்க வர்க்குப சாரமிக் காற்றினன். (17)

இப்பண் பாக வியற்றிடு மாதவ
னொப்பி னல்லுப சார முவந்தன
ரெப்ப யன்களு மெய்தின ராமென
வப்பெ ருந்தலத் தாங்கவர் வைகினர். (18)

வேறு

வதியுமா தவர்க ளனைவருங் கனக கற்பக வனேசன்மா மணிப்பொற், பொதுவிலா னந்த நடம்புரிந் தருளு மளவும்வெண் புனிதநீ றணிந்து, விதியினு லரிய வுருத்திர வக்க மாலிகை விதமுறப் புனைந் தாங், கிதயநெக் குருகி யன்பினு லரனை யெண்ணியீங் கிவருறும் வேலை. (19)

நணணுறும் பசுந்தோட் டளிதவழ் முளரிச் சதுமுகன் றாளமொத் திசைப்ப, மண்ணுறும் வயிரக் கிரிநிகர் பஃறோள் வாணன்வன் குடமுழ வியம்பப், பண்ணமை நரம்பிற் றிவவியா ழிருவர் பல்லிசை யின்னமு துகுப்ப, நண்ணரும் புவனங் கிழியவிண் ணதிர நந்திமத் தளியொலி திளைப்ப. (20)

கடையுகத் ததிரு மிடியெனத் தேவ துந்துபி பன்முறை கறங்கக், கொடிபுரை மருங்குற் றரளவெண் முறுவற் குழைதவழ் கொடியவாட் டடங்கட் பிடிநடைக் களபப் புணர்முலை யிமவான் பெண்ணணங் கின்னகை பிறங்கப், படிமுழு தளந்த சுடருமிழ் திகிரி மாதவன் முறைமுறை பரவ. (21)

பணமணிச் சுடிகை யாயிரம் பரப்பும் பாதலத் துரகனு நறும்பூ, மணமலி பசும்பொற் கற்பக நாட்டின் வலாரியுங் காண்டொறும் வணங்க, விணரொளி தருமா தவர்கள்பன் னிருவ ரெண்டிசைப் பாலர்நின் றிறைஞ்சத், துணையில்வெள் விடைமேல் வருமுருத் திரர்கள் பதினொரு வருமுறை துதிப்ப. (22)

வானவர் கருடர் சித்தர்கந் தருவர் கின்னரர் மருவுகிம் புருட
தானவ ருரகர் நிருத்தரா காச வாசர்விச் சாதர ருரையா

மோனர்பன் னரிய வுத்தர குருவோ ரீங்கிவர் முறைமுறை பணிய மேன்மைத் திலகுந் தாரகைத் திரளும் பூதமும் விரவிமுன் றுதிப்ப.()

பிள்ளைவெள் ளெகின மெனுநடைத் துவர்வாய்ப் பிறைநுதற் பேரெழிற் றிருவுங், கள்ளவிழ் கூந்தற் கலைமக ளோடு கவிரிதழ்ப் புலோமசை யணங்கும், வள்ளையங் குழைதோய் சேயரிக் கருங்கண் மதிமுக வுருப்பசி முதலாங், கிள்ளையங் குதலை யரமடந் தையருங் கிளருமன் புறத்தணி பரவ. (24)

மூன்றரைக் கோடி தீர்த்தமுந் தெய்வ நதிகளுந் துகிர்க்கொடி முரித்துக், கான்றொளி விடுக்கும் வெண்மணி வரன்றிக் கரைதெறு மெறிதிரைக் கடலும், வான்றவப் பயனு முருப்பல வெடுத்து விரூப மாய் வலம்வர மகிழ்வாற், சான்றமா தவர்கள் குழுவெலா நெருங்கித் திசைதொறுஞ் சார்ந்துசே விப்ப. (25)

பாதல முழுதும் பொன்னடித் துணையா வம்பர மருங்குலாப் பரந்த, மாதிர மனைத்துங் கரங்களா வயங்கத் தாரகை மாலிகை வனைந்து, மீதுயர்ந் திலங்கும் பிறைகுலா மவுலி யண்டத்தி னப்புறம் விளங்க, வாதவன் கனற்று மெரிமதி யெனுமூன் றருள்விழி சுரந் தருள் விளைப்ப. (26)

மருவிரி முளரித் தாளிலொன் றூன்றி யொருபதந் திக்கிவான் முகட்டிற், றிரிதரு மிரவி யாயிர முதித்தாங் கெனவுமிழ் சேயொளி பரப்பத், தருவனத் திலகு மாமணிப் பொதுவிற் சக்கரச் சுழலெனத் தயங்கப், பிரமதாண் டவஞ்செய் தருளினன் றவளப் பிறைகுலா மவுலியெம் பெருமான். (27)

பூவரும் பிரம னுயிர நயனப் புரந்தரன் புணரியை யுழக்கித், தேவர்கட் கமுத முதவிய கிரிச்செங்கண்மா யவனெனுந் திறத்தோர், ரேவரு முணர வரியவா னந்த நடம்புரி வேலையி னெவரு, மோவியப் படிவ மொத்தனர் கரண காரிய மனைத்தையு மொழிந்தார். (28)

வேறு

வெவ்வரா வுலவிய வேணி யான்புரிந்
தெவ்வுயிர் முழுவது மியக்கு மிந்நட

மவ்வியந் தவிர்தரு வாச னன்பினுற்
செவ்விய மனமுறத் தெரிசித் தானரோ. (29)

ஆரண முழுவது மாய்ந்து மேம்படு
பேரறி வாற்றரி சித்த பேர்சிலர்
வாரியிற் றிரண்முனி வரரின் மாலகல்
சீரிய மனத்தினுற் றெரிசித் தார்சிலர். (30)

கந்தமா தனகிரி யகன்று கண்ணுற
வந்தமா தவர்தரு வாசன் வியாதன்பின்
முந்துமா முனிவரர் பிறரு முற்றியாங்
கிந்தவா றரனடந் தரிசித் தேத்தினர். (31)

## வேறு

வையக முதலா மைந்து பூதமும் பிறவு மற்றத்
தெய்வமு மிறையிற் பூழி யாயிறத் திரிக்குஞ் சூலத்
தையனின் றுடு மாற்றுற் றிருக்கள ரெனும்பே ராகி
யெய்திய புவன மூன்றின் மேன்மைபெற் றிலங்கிற் றன்றே. (32)

கமலையிற் பிறந்து மேலாங் காசியி லிறந்துங் கண்ணு
லமைவுறு பசும்பொற் றில்லை யம்பலங் கண்டு மண்பாய்
விமலன்வா ழுருணை நாளு முன்னியும் வீடு காண்பார்
சமைதிருக் களருள் யாதொன் றியற்றினு முத்தி சார்வார். (33)

அலர்தலைப் புவன மீதிற் சிவபதி யனைத்தி னுந்தண்
மலர்விரி பாரி சாத வனமுதற் றலமாம் யார்க்கும்
புலைமல மூன்றும் போக்கி யிருவினைப் புணர்ச்சி நீக்கித்
தொலைவில்பே ரின்ப நல்குந் தூயவீ டளிக்கு மாதோ. (34)

விருப்புறக் குருவின்றாரம் விழைந்தன ரேனு மாறாச்
செருக்கினன் மறையோர் பாலர் தெரிவையர்ச் செகுத்தா ரேனு
முருத்தெழுந் தொருவன் செய்த வுதவியைக் கொன்றா ரேனுந்
திருக்கள ரடைந்தா ராயிற் றேவர்க்குந் தேவ ராவார். (35)

முகிழ்விரி யிதழி வேய்ந்த புரிசடை முதல்வ னின்ன
தகையவாங் கனகப் பைம்பூந் தருவனச் சபையி னுப்ப
ணகிலமு முனிவர் விண்ணோ ரனைவரு மன்பி னோக்கி
மகிழ்வுற நிருத்தந் தெய்வ வருடமட் டளவுஞ் செய்தான். (36)

அண்டராண் டளவுந் தாண்ட வம்புரி யண்ணல் பின்ன
ரெண்டரு மனத்தாற் றியானித் திடுந்துரு வாசன் காமத்
தண்டிரைப் பரவை நீத்த தவமுனி வரையு நோக்கிக்
கண்டிரோ வெமதானந்த நடமெனக் கழறி னுனல். (37)

அம்மொழி யறையக் கேட்ட தவத்துரு வாச னுதி
யெம்முனி வரர்கள் யாரு மின்பமுற் றிறைஞ்சி யன்பான்
மெய்ம்மயிர் பொடிப்பப் பொங்கி விழிபுனன் மாரி சிந்த
மைம்மறை மிடற்றோன் கேட்ப வின்னன மகிழ்ந்து சொல்வார். ()

அறுபகை துரந்து நீங்கா மும்மல மகற்றி நான்கா
யுறுகதி யொருவி யோரே ழுற்பவந் துடைத்தார்க் கேனும்
பிறையணி யிறைவ நீசெய் பிரமதாண் டவத்தைப் பேணி
மறுவிலிந் தியத்தாற் றுய்ய மனத்தினு லறிதற் பாற்றோ. (39)

எல்லையி லண்ட கோடி யெனுமொளிர் தாளங் கோத்து
மெல்லிடைச் சுணங்கு போர்த்த வெம்முலைக் கணியுங் கோலப்
பல்வளைத் தளிர்க்கை முக்கட் பராபரை யன்றி யுன்ற
னல்லெழிற் பிரமா னந்த நடமெமக் குணர லாமோ. (40)

ஆயினு மடியோ மெங்க ளறிவினுக் கியைந்த வாற்று
ணீயுகந் தாடு மாட லெனுஞ்சநெக் குருகி நோக்கி
மாயிரும் பிறவிப் பௌவ மலச்சுறா விழுங்கா வண்ணந்
தீயவை தவிர்க்கு ஞானப் புணையினு னீந்திச் சென்றோம். (41)

இருவினை கழிந்தோங் காமத் தெல்லையுங் கடந்தோ நாளு
நிருமல மானோம் யாங்க ணிகழ்த்திய வபரா தத்தை
யருள்கொடு பொறுத்தி நீயென் றருமறை முனிவர் யாரும்
புரவருங் காதல் கூர்ந்து பன்முறை வணங்க லுற்றார். (42)

வணங்கிய முனிவர் தம்மைப் பின்னரு மகிழ்ந்து நோக்கி
யணங்கரா வணியும் வேணி யமலனீ துரைக்கி லுற்றா
னுணங்கிய வறிவின் மேலா மந்தணீர் நும்பாற் கந்த
னுணர்ந்துயர் துருவா சற்கன் றுதவிய வரத்தான் மேவும். (43)

பதமிகுந் தனுமா தத்திற் சுக்கில பக்கத் தாரூந்
திதிபுனற் கிறைநாள் கூடிற் கதியரு டினம தாகும்
வதியுமத் தினத்தின் மேவுங் குகனெழுத் தைந்தும் வாய்த்த
விதியினு னுங்கட் கெல்லாம் விரித்துப தேசஞ் செய்வான். (44)

கேழுமறைக் கிருதியாய வைந்தெழுத் தடைவிற் கேட்டுப்
பழுதற வுணர்ந்து காமப் பரவையின் பரப்பு நீத்திட்
டழிவுறாப் பரமா னந்தப் பெரும்பத மடைவீர் நீவி
ரெழுகவென் றிசைத்துப் பின்னு மெம்பிரா னியம்ப லுற்றான். (45)

பாரிலின் றுதி யாகப் பாரிசா தவனத் தோங்குஞ்
சீரிய முழுமா ணிக்கச் சிற்சபை தெரிசித் தோர்கள்
சார்வரு மெமதா னந்தத் தாண்டவந் தரிசித்தார் போற்
றேரிலியா ரேனு மெய்தாச் சிவகதி யடைவர் திண்ணம். (46)

என்னவீ துரைத்து வாக்கா லிவ்வர மீந்தோ மிந்தத்
தன்னிகர் புனித க்ஷேத்ரந் தனிலெனச் சாற்றி யேத்து
முன்னருந் தவத்தோர்க் கெல்லாம் விடைநல்கிக் கயிலை முன்னிச்
சின்மயப் பயனு மெங்கோன் சிவகணத் தோடுஞ் சென்றான். (47)

அந்தநாண் முதலா யாவ ராயினு மமரர் நாட்டின்
பைந்தரு வனஞ்சூழ் செம்பொற் பன்மணிச் சபையை நோக்கி
வந்தனை புரிவ ராயின் மழுவலான் வரத்தான் மாயாப்
பந்தவல் வினையை நீங்கிப் பரகதி யடைவர் மாதோ. (48)

ஏழ்வகைப் பிறப்பிற் றோன்று மெவ்வுயி ரெனினுஞ் சேரிற்
றாழ்வறப் புனித மாக்குந் தருவனச் சபையின் மேன்மை
யூழ்முறை விரும்பிக் கேட்போ ரியம்புவோ ருலவா வின்பத்
தாழியின் மூழ்கி நாளு மழிவுறாப் போகந் துய்ப்பார். (49)

தும்பமா மதியில் வைகும் பூரணைத் திதியிற் கோமா
னம்பிகை யோடு மப்பே ரம்பலத் தாடன் மேவு
மம்புமத் தினத்தின் மாலைப் பொழுதினி னயந்து சேவித்
தெம்பெரு மானைப் போற்றில் விசேடமென் றியம்பு லாமால். (50)

இத்திற மாலைப் போழ்தி லிறைவனைத் தரிசித் தாராற்
பத்தியிற் கணிகை மார்தோண் முயங்கிய பழியும் வாயா
லித்துணை யெனக்கூ றுத பாவமு மிமைப்பி லேகுந்
துய்த்திடா விடத்தி லுண்ட தோடமு மிறையிற் போமால். (51)

## வேறு

அடைந்த வர்க்கருள் பாரிசா தவனத்தி லரனுறை யாலய முன்ன, ரிடந்து மேற்றுரு வாசனுக் கியதுவா னிமையவர் முதலினோ ரெவரும்,படர்ந்து சூழ்வது லோகலோ காக்கிய மெனும் பெயர் பரித்த தோர் தீர்த்த, மிடங்கொ ளப்பெருந் தீர்த்தத்தி னண்பக லெய்தி யங் கதனிடை மூழ்கி. (52)

இயன்ற வான்பொரு ளந்தணர்க்கீந்துபொன் னிவர்சடை முடித் துரு வாசன், வியந்து போற்றிய தருவனத் தீசனை விதிமுறை தரிச னம் புரியி, லயர்ந்த பாவமு மிருவினைத் தொடர்ச்சியு மகன்றிடு மல கிலா வின்பம், பயந்து மேற்கதி தருமிது சத்திய மெனப்பர னியம்பி னன் பரிவால். (53)

## வேறு

சிறந்ததரு வனமோங்குந் தேவர் போற்றுந்
திருக்களர்மா நகர்மேவுஞ் சிவனை யோர்கா
லறிந்துதரி சித்தனரா யினும்யா தொன்று
மறியாமற் றரிசித்தா ரெனினு மன்னோர்
செறிந்தகிளை யொடுமெவர்தம் வழியு ளாய
தென்புலத்தோ ரொடுமுறையிற் சிவலோ கத்தி
லுறைந்திடுவர் சத்தியஞ்சத் தியமா மிந்த
வுரைதவறெ னேர்நரகத் துறுவ ராமால். (54)

புலையரொடு பொல்லாத பதிதரேனும்
பொன்னவிர்பூந் தருவனத்திற் பொருந்துஞ் செங்கே
ழிலகுமணிப் பெருங்கோயில் வைகு முக்க
ணீசனைத்தூ ரத்தனுகி யிறைஞ்சி னூரேற்
குலவுவர்முத் தியிலிதுசத் தியமாந் தீராக்
கொடியவினைப் பாவிகளுங் கோவு மாவு
மொலிகொள்பற வையுமளியும் புழுவு மேனுந்
தரிசித்தாற் சிவலோகத் துறையு மாதோ. (55)

தோணடாதமக கரனுதவாப் பொருளொன் றுண்டோ
தொல்லுலகிற் சிவனடியார் பெருமை சோதித்
தண்டர்தொழுஞ் சிவபெருமா னறிவ தன்றி
யகிலகோ டியிலொருவ ரறியார் காள
கண்டன்மிகு பெருமைதனை யவரே யன்றிக்
கருதுவா ரிலையதனுற் கமலத் தோனிற்
றெண்டிரையிற் றுயில்வோனிற் றேவர் தம்மிற்
சிவனடியார் பெரியரெனச் செப்ப லாமால். (56)

வேறு

அநந்தமா யிரகோடிப் பிறவியிற்புண் ணியம்புரிந்தார்க் கல்லா லீசன், கனிந்துகா தலித்துருகு மிந்தமுழு மணிச்சபையின் காட்சி யெய்தா, மனந்தனு னினைப்பினுமேற் கதியளிக்கு மிச்சபையின் மகிமை யாவும், புனைந்துநா ருயிரமா முகமெனினு மனந்தனுக்கும் புகலொ ணுதால். (57)

“இளம்பருதி யொருகோடி யெனவிமைக்கு மிச்சபையின் மகிமை யீச, னளந்தறிவ தன்றியரி பிரமபுரந் தார்முதலோர்க் கறிய லாமோ, இளந்தமொழி யிவையனைத்துஞ் சத்தியஞ்சத் தியமிதனைக் கேட்போர் கற்போ, ருளங்குளிர” வுரைத்திடுவோர் யாவரா யினுங்கயிலை யுறைகு வாரால். (58)

## நதாசாரம்

வியாதர், கண்ணுவர், பரத்துவாசர், பார்க்கவர், கார்க்கியர், உபமன்னியர், பிருது, சுகோத்திரர், அகத்தியர், மாத்தியந்தனர், சதசிரர், உசிநரர், திருவர், மவுனபார்க்கவர், அத்திரி, ஏகநேத்திரர், தூலலோசனர், அங்கிராவிரதர், சங்கு முதலிய எண்ணில்லாத மகருஷிகள் பரமபதி கற்பகவனச்சபையிலே சச்சிதானந்த தாண்டவம் புரியப்போவதையுணர்ந்து, தங்கள் தங்கள் மாணுக்கர்களோடு தருவனமடைந்து, களப்பாள் வரையில் சுற்றி ஒரு கூப்பிடுதூரம் சூழ்ந்திருந்து, தங்கள் தங்கள் பெயரால் தனித்தனி சிவலிங்கமமைத்துப் பூசித்தும், பஞ்சாக்கரஞ் செபித்தும், உருத்திராக்கந் தரித்தும், விபூதி யணிந்தும், சச்சிதாநந்த நாடகம் பார்க்கவேண்டுமென்ற விருப்பத்தோடு மாதவம் புரிந்தனர். இவர்களில் சிலர் உணவு நீக்கியும், சிலர் தண்ணீர் பருகியும், சிலர் தண்ணீரி லமிழ்ந்தியும், சிலர் மேல்நோக்கியும், சிலர் சருகருந்தியும், சிலர் சாந்திராயண நோன்பியற்றியும், சிலர் சுவாசமடக்கியும், சிலர் கால்மேல் காலூன்றியும், சிலர் கால்பெருவிரலூன்றியும், சிலர் பஞ்சாக்கினி மத்தியிலிருந்தும், சிலர் யோகத்திலிருந்தும், அநேகர் ஐந்து நாளைக்கொருவேளை புசித்தும், பலர் பதினைந்து நாளைக்கொருதரம் புசித்தும், அநேகர் ஆறுமாதத்திற் கொருபொழுதுண்டும் தவம் புரிந்தனர். சிவபெருமான் ஞானாநந்தக் கூத்தாடுங் காலமுஞ் சமீபித்தது. கந்தமாதன பருவதத்திலே தவம்புரிந்துகொண்டிருந்த அறுபதினாயிர முனிவர்களும் பரமபதி கற்பக வனத்தில் ஞானாநந்த நாடகமாடுங் காலமுணர்ந்து அங்கு வந்து, விபூதி ருத்திராக்கம் புனைந்து கைலாசபதியைக் கருதிக்கொண்டிருந்தனர். இங்ஙனமிருக்குங் காலத்திலே, பாத்மகற்பம் மாசிமாசம் பௌர்ணமியில் பிரமன் தாளம்போட வாணன் குடமுழவு முழக்க, தும்புருநாரதர் யாழ் மீட்ட, நந்தி மத்தளந் தட்ட, தேவதுந்துபி முழங்க, உமாதேவியார் புன்னகை கொள்ள, விஷ்ணு புகழ, இந்திரன் ஆதிசேஷன் இவர்கள் வணங்க, பன்னிரு சூரியர் திக்குப்பாலகர் இவர்கள் துதிக்க, பதினொருருத்திரர் இறைஞ்ச வானவர் கருடர் சித்தர் கந்தருவர் கின்னரர் கிம்புருடர் தானவர் உர

கர் நிருத்தர் ஆகாசவாசர் விச்சாதரர் மோனர் உத்தரகுருவோர் இவர்கள் பன்முறை பணிய, தாராகணங்கள் பூதகணங்கள் இவர்கள் துதிக்க இலக்குமி சரஸ்வதி இந்திராணி ஊர்வசி மேனகை அரம்பை திலோத்தமை இவர்கள் புகழ, மூன்றரைக்கோடி தீர்த்தங்கள் தெய்வ நதிகள் சப்த கடல்கள் இவைகள் பல ரூபமாய் வலம்வர, முனிவர் குழாங்கள் தரிசித்தேத்த ; பிருதுவிதத்துவமாய் கந்தவிஷயமாய் வெண்ணிறமாய் பூமிமயமாய் நிவர்த்திகலையாய் சத்தியோஜாதமாய் கர்மசாதாக்கியமாய் நான்முகரூபமாய் சிருஷ்டியைத்தருகின்ற மறைப்பை யுடைய திரையக்ஷரமாகிய நகாரம், அப்புதத்துவமாய் ரசவிஷயமாய் கருநிறமாய் ஜலமயமாய் பிரதிஷ்டா கலையாய் வாமதேவமாய் கர்த்ரு சாதாக்கியமாய் விஷ்ணுரூபமாய் திதியைத் தருகின்ற மயக்கத்தையுடைய மலாக்ஷரமாகிய மகாரம். தேயுதத்துவமாய் ரூபவிஷயமாய் சிவந்த நிறமாய் அக்கினி மயமாய் வித்யாகலையாய் அகோரமாய் மூர்த்திசாதாக்கியமாய் உருத்திர சொரூபமாய் சம்மாரத்தைத் தருகின்ற ஞானசூரியப் பிரகாசத்தையுடைய பதியக்ஷரமாகிய சிகாரம், வாயுதத்துவமாய் பரிச விஷயமாய் புகைநிறமாய் காற்றுமயமாய் சாந்திகலையாய் தற்புருஷமாய் அமூர்த்தி சாதாக்கியமாய் மகேசுவர ரூபமாய் திரோபவத்தைத் தருகின்ற சத்திவடிவத்தையுடைய பரையக்ஷரமாகிய வகாரம், ஆகாயதத்துவமாய் சத்தவிஷயமாய் நீலநிறமாய் சுத்தவெளியாய் சாந்தியாதீதகலையாய் ஈசானமாய் சிவசாதாக்கியமாய் சதாசிவரூபமாய் அநுக்கிரகத்தைத் தருகின்ற சிவ வடிவத்தையுடைய சீவாக்ஷரமாகிய யகாரம் என்னும் பஞ்சாக்கரமே திருவுருவமாகவும்; பிரணவமே திருவாசிகையாகவும் நின்று டமருகக் கையாற் படைத்தலும், அபயக்கையாற் காத்தலும், மழுக்கையா லழித்தலும், ஊன்றிய காலால் மறைத்தலும், தூக்கிய காலாலருளலும் நடாத்துகின்ற ஸ்ரீசபாநாயகப்பெருமான் பாதலந்திருவடித் துணையாகவும், ஆகாயம் இடையாகவும், திக்குகள் கைகளாகவும், நக்ஷத்திரங்கள் மாலையாகவும் விளங்க; சடாபாரம் அண்டத்தின் அப்பாற் பிரகாசிக்க; சந்திரன், சூரியன், அக்கினி யென்னும் மூன்று கண்களும் கிருபாநோக்கமளிக்க; தருவனச் சபையிலே ஆயிரஞ்சூரிய ருதயப் பிரகாசம்போல் வலப்பாதத்தை யூன்றி இடப்பாதத்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER ...

தைத் தூக்கி சக்கரக்சுழலென மூந்நூற்றறுபத் தைந்து வருஷம் பிரம தாண்டவஞ் செய்தருளினார். பிரமவிஷ்ணுக்கள் இந்திராதி தேவர்கள் முதலிய யாவர்களும் சித்திரம்போன்று அசைவின்றி நின்றனர். துருவாசர் முதலிய மகருஷிகள் அன்பாலும், அறிவாலும், மனத்தாலுந் தரிசித்தேத்தினர். சபாநாயகர் பரமாநந்தத் திருநடனம் புரிந்ததனால் அத்தலத்திற்குத் திருக்களரி யென்னும் பெயருண்டாயிற்று. அத்தலம் பிறந்தோருக்கும், இறந்தோருக்கும், தரிசித்தோருக்கும், நினைத்தோருக்கும் முத்தியளிக்கும். இத்தலத்தில் ஆணவம், மாயை, காமியமென்னு மும்மலமும்; நல்வினை, தீவினை யென்னு மிருவினைப் பயனும்; குருபத்தினியை யிச்சித்த பாவமும்; பசுவை வதைத்த ஹத்தியும்; பிராமணனைக்கொன்ற பாதகமும்; ஸ்திரீயைக் கொலை செய்த தோஷமும்; சிசுவைக்கொன்ற குற்றமும்; ஒருவர் செய்த நன்றி மறந்த பாவமும் நீங்கும். சபாநாயகப்பெருமான் முனிவர்களைப் பார்த்து ஹே முனிவர்காள்! நீவீர் எம்முடைய ஆநந்த நாடகத்தைப் பார்த்தீர்களோ வென? முனிவர்கள் பன்முறை வணங்கி யெம்பெருமானே! தேவரீர் புரிந்தருளிய ஞானானந்தப் பெருங்கூத்தை யெம்போலிகள் தரிசிக்கக் கூடுமோ! எங்களறிவினுக் கியைந்த மட்டிலுந் தரிசித்தோமெனப் பன்முறை பணிந்தேத்தினர். சபாநாயகப்பெருமான் முனிவர்காள்! உங்களுக்கு மார்கழிமாதம் பூர்வபக்கஞ் சஷ்டித் திதியுஞ் சதைய நக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்தில், சுப்பிரமணியன் வேதமுடிபாகிய பஞ்சாக்கரத்தை உபதேசஞ் செய்வான்; அதனை வரன்முறையாகக் கேட்டு குற்றமற வுணர்ந்து, ஆசைக் கடற் பரப்பைக் கடந்து, பரமானந்தப் பெரும்பதம் பெறுவீர்; இன்று முதல் இச்சபையைத் தரிசித்தோர் எமது பரமானந்தப் பெருநடந் தரிசித்தவரடையும் பேற்றை யடைவர் என முனிவர் குழாங்களுக்கு விடைகொடுத்து சிவகணங்களோடு திருக்கைலாசமடைந்தனர். சபாநாயகப் பெருமான் தாண்டவமாடத்தொடங்கின தினமாகிய மாசிமாதம் பௌரணை பன்று சாயரட்சையில் தரிசிக்கில் சகல பாவங்களும் போம். இத்தலத்தில் சிவபெருமானை அறிந்தேனும் அறியாமலேனும் ஒருதரந் தரிசித்தோர் பந்துக்களோடும் பிதிர்க்களோடும் சிவ

லோகமடைவர் ; இஃது சத்தியஞ் சத்தியம், இதைப் பொய்யென்று சொல்வோர் நரகமடைவர். புலையராயிருந்தாலும், குலம் ஒழுக்கம் சமயம் முதலியன தவறினவராயிருந்தாலும் இத்தலத்தை தூரத்தில் நின்று தரிசிக்கில் முத்தியடைவர். இது சத்தியம். கொடிய பாதகர், பசு, மிருகம், பறவை, வண்டு, புழு இவைகள் தரிசித்தாலும் முத்தி யடையும். அனந்தமாயிர கோடி சென்மங்களில் புண்ணியஞ் செய்தவர் களுக்குத்தான் தருவனச் சபையின் தரிசனங் கிடைக்கும், மனம் தானாக நினைத்தாலும் முத்தியளிக்கும்.

திருச்சிற்றம்பலம்.

குறிப்பு—மாசி மாசம் பௌர்ணையன்று சாயந்திரம், சிவலிங் கப்பெருமான் தேவியார் முதலிய மூர்த்திகளுக்கு, மந்திர பூர்வமாக அபிஷேகாலங்காரங்களும் சபாநாயகப் பெருமானுக்கு விசேஷா லங்காரமுஞ் செய்து, அறுசுவை நிறைந்த நால்வகை யுணவுகளையும் நிவேதனம் புரிந்து, சந்திரசேகரப் பெருமானை இடப வாகனத்தின் மீது வீதியிலெழுந்தருளி வரப் பண்ணுவது உத்தமோத்தமமாம்.

## நான்காவது

## பஞ்சாக்கரச்சருக்கம்

திருச்சிற்றம்பலம்.

பனிமதி நிலவி னவிரொளி பரப்பும் பவளவார் சடைமுடிப் பரமன், கனகதிர் விரியும் பொற்றரு வனத்தி னூடகங் கனியங்கின் றுடி, முனிவரர் பரவக் காட்சியாங் கரித்த வரன்முறை முழுவதும் வியப்ப, நனிவிதந் துரைத்த நந்தியை நோக்கிச் சனற்குமா ரன்னிவை நவில்வான். (1)

மறைகளா றங்கம் பதக்கிர மங்கண் மனுமுதன் மிருதியா கமங்கள், வறிவுறு புராண மேழெனுங் கோடி மந்திர மனைத்துமைந் தெழுத்திற், பிறவியென் றுரைப்புக் கேட்டன னாநா விதங்களாப் பேசரு மறைகட் கிறையென விசைக்கு மவ்வெழுத் தைந்தின் மாண்மியம் விளம்புதற் கெளிதோ. (2)

ஆயினும் விதிமூ ருவத்தொடு சாங்க மாம்படி மந்திரோத் தாரந்,
தூயமா மறையா யியந்திரோத் தார மோடோற் குலத்தவர் துதிக்கு,
மேயவைந் தெழுத்தும் புகன்றிடு விதமு மந்திரத் திறையின்மான்
மியமு, மாலையின் முனிவர்க் கறுமுக னுரைக்கு மார்க்கமுங்
கூறென வுரைத்தான். (3)

உந்திநாண் மலர்மே லயன்றரு முனிவ னுரைத்தது மறுமுக
னுவப்பி, யந்தமா தவரா மோரறு பதினொ யிரார்க்கர ஞானியா லறையு,
மந்திர விதியு முறைமையு முணர்ந்து மலவிரு டொக்குமா ஞான,
நந்திவா னவனு மகிழ்வொடு முனிவனையப்புற வீதென நவின்றான். (4)

நன்குண முனிவ கேட்டியைந் தெழுத்து நவின்றிடிற் பேதமு
மோரைந், தென்பரவ் வெழுத்தின் பகுதியா லவைதா மியம்பிடு
மைந்தெழுத் தோடு, பின்பிரு மூன்று நாலிரண் டீரைந் தொருபனி
ரண்டெனப் பெரிது, மின்புற வுரைக்கு மக்கர விதமுண் டைந்
தெழுத் தாதியா விசைப்பார். (5)

கிரமமாவிருடி சந்தசு தியானந்-தெய்வவந் தனத்தொடு கிளக்கும்
வரன்முறை யிவற்றுற் பகர்வது முதல்யாம் வகுத்துரைத் திடுமெ
ழுத் திவையுங், குருதிகொப் பளிக்கு நெட்டிலைச் சுடர்வேற் குழக
னித் திறமியம் பினனுங், கிருடியர் பதினொ யிரார்க்கொரு மூகமா வறு
முகத்தாலெல வரெவர்க்கும். (6)

இன்னண முனிவ ரெனுமறு பதினொ யிரர்க்கறு முகனினி தியம்
பிப், பின்னராங் கவர்க்குச் செபித்திடும் விதியுந் தியானமும் விதியி
னூற் பேறும், பன்னின னவற்றுட் சிறிதியா னுரைப்பன் பாங்குறக்
கேட்டியென் றெவர்க்கு, முன்னுறும் பிரமன் றிருமகன் றனக்கு நந்தி
யம் பகவனும் மொழிவான். (7)

மோக்கசா தனமீரஞ் சுத்தமாம் பஞ்சாக் கரம்பிர ணவத்தொடு
மொழியி, லாக்கிய போக மோக்கசா தனமாஞ் சாந்தயாந் தத்தொடு
மன்றயி, னீக்குதற் கரிய காமிய மளிக்கு நெறியிலா வறுமையை
முழுதும், போக்குமோ ரிரண்டு சாந்தயாந் தத்தோ டகமகிழ்ந்
தன்பிலூற் புகலில், (8)

செப்பிய சாந்த யாந்தமுன் றுடனே யைந்தெழுத் தையுமுறை செபிக்கி, லொப்புறு நலனும் வசீகர மளிக்கு முணர்வினு வித்திற முரைப்போர்க், கெப்பய னரிய தாங்கவ ரகத்து ளிச்சையாம் பொரு, ளெலா மளிக்குந், தப்பறப் புகலுஞ் சாந்தயாந் தத்தின் றன்மையை யளப்பதற் கரிதால். (9)

செங்கதிர் விரிக்கும் பவளவார் சடைமேற் சிறுபிறை யிலகவா ளுரக, கங்கணங் கமலக் கரந்தொறு மிலக வபயமும் வரதமுங் காட் டிப், பொங்கிய புலித்தோ லரைமிசை யார்த்துப் பொலிவுறும் வடிவமாய்ப் புரக்கு, மங்கள யகனை நினைவது விதியா மோக்கபஞ் சாக்கர மறையில். (10)

பண்ணவ னியற்று முலகெலா மழுந்தப் படமெணி திரையெறிந் திழியுந், தண்ணதி பெருகும் வேணியுஞ் சயிலத் தையலோர் பாக முந் தவள, வண்ணமு மாகப் பரமனைக் கருதி வாய்த்தலாற் காமிய மாகு, மெண்ணரும் போகப் பயன்றரு மிறவா முத்தியு மெய்தலா மியல்பால். (11)

பூநிலா விரிக்குந் தடந்திரை யமுதப் பாகவான் பிறைச்சடை முடியுந், தேனுலாங் கமலக் கரதலத் தபய வரதமு மழகுறச் சிவனை, யானபொற் பசுந்தோட் டம்புயா தனத்தி லிருப்பதா வகமுறக்கருதி, மேன்முறை யட்டாக் கரத்தையு முரைக்கின் மிடியெலாம் வேரறக் கெடுமால். (12)

வேறு

செல்வ நல்குமெட் டிலக்குமி யொடுமணி திளைக்கும்
பல்ல ணிக்கலன் பயிலலங் காரமும் படைத்து
மல்கு வண்ணமா நம்பனை மனமுறக் கருதிச்
சொல்லி லின்பமாம் வசியபஞ் சாக்கரச் சுருதி. (13)

அட்ட மூர்த்தியா யனைத்துமாய் விளங்கிய வரனை
யிட்ட சித்தியி னிமித்தமா வின்னணங் கருதி
மட்டி லாரண மேழெனுங் கோடியா மறைகட்
கெட்டொ ணுதபஞ் சாக்கரஞ் செபித்திட வியல்பாம். (14)

வேறு

எந்திர முதலாம பரணவ மதஞ் சிருமிலத் திரேகையுண் டாக்கிச், சந்திர பீசங் கலைமுறை மாத்ரா வேட்டனம் விதியினுற் சமைத்து, மூந்துமோ ரெழுத்தான் முத்திரை யாமைந் தெழுத்தினை மூற்றுற வளைத்துத், தந்தவெந் திரத்தை மாயையால் வளைப்பிற் சத்திநல் லியந்திர மதுவாம். (15

பொற்பசுந் தகட்டி லாயினும் வங்கத் தகட்டொடு பூர்ச்சமே யெனினு, முற்பகுத் துரைத்த வியந்திரம் பொறித்து முறையினு வாகனம் பண்ணி, யற்பொடு பதினு ருமுப சாரத் தொடுமிருத் தருச்சனை புரிந்து, மற்றவை தரித்து மறையினுற் சந்தி வந்தனை செயிற் பவ மாளும். (16)

கூறிய விதியா லியந்திரத் தகடு புனைந்துளோன் குவலய முழுது, நீறுசெய் திறையிற் றரித்திடுங் கவர்வாய் நெட்டிலைச் சூலமொன் றேந்தி, யீறிலா னந்த நாடக மியற்று மீசனு மென்பது சரதம், வேறுமை யுளதோ வின்னணம் பலவு மெய்த்தவர்க் கறுமுக னுரைத்தான். ()

உரைத்தமெய்ப் பஞ்சாக் கரத்தினைப் பரமன் சந்நிதி யினுமுமைமுன்னுந், தரைக்குண்மிக் காய தெக்கணு மூர்த்தி சந்நிதி யினுமருந் தவத்தோ, ரருத்திசெய் குருவா சன்முத லெவரு மன்பொடு செபித்துவிண் புகழுந், திருக்கள ரீசன் வெளிப்பட வரங்கள் பெற்றனர் மூத்தராய்ச் சிறந்தார். (18)

ஆதலா லுணர்வின் மிக்கமா தவத்தோ யாத்தசற் குருவினை யடைந்து, மோதிய தரங்கச் சுரநதி யழைப்பான் முயன்றவ னென்னப்பல முயன்று, மேத்கு மறையு மறிவுறு வைந்தக் கரத்தையும் விதிமுறை கேட்டுத், தீதறச் செபிக்கி லொருவனுங் கவனே சிவனெனச் செப்பலாந் திண்ணம். (19)

சிவத்தினு லன்றிச சித்திபா தைந்தக் கரமறை தெரிக்குமித் தலத்திற், றவப்பெருஞ் பயனு லோருருச் செபிக்கிற் றகுமுருக் கோடியாய்த் தவிராப், பவக்கருக் களைந்து மலபரி பாகம் பண்ணி

மேற் கதியினைப் பயக்கு, முவப்பொடு மகிழ்ந்து பலவுருச் செபித்தி லதன்பய னுரைப்பவ ரிலையால். (20)

அஞ்செழுத் துபதேசம்பெறுங் கால மாதியா யாண்டுக டோறும், மஞ்சினந் தவழும் பொழிற்றிருக் களருள் வருமுரு கனுககபி டேகம், விஞ்சிய சுவையா நிவேதனம் புரிந்து விசேடமாம் பூசனை யயர்ந்து, நெஞ்சுறப் புகழ்வோர் தேவர்கோ னுகி நிச்சய முத்தரா குவரால். ()

வள்ளிமென் களபப் புணர்முலைக் குவடு தைவரு மணிநெடும் புணைத்தோள், வெள்ளிலைச் சுடர்வே லறுமுகக் கடவுண் முற்புகல் விதியுப தேசங், கொள்பவ ரெவரு முடிவில்பல் பிறவிக் குரைபுனற் பரவையை நீங்கித், தெள்ளிய ஞானப் பெருவரம் பயக்குஞ் சிதை விலா முத்தியைச் சேர்வார். (22)

திருவெண்ணீ றணிந்தோ ருருத்திர வக்கத் தெரியல்பூண் டவர் சதா சிவன்பா, லுருகுமன் புடையோ ரீங்கிவர்க் கன்றி யைந்தெழுத் தோதுத றீதாங், குருவுபதேச முறைமையி லந்தக் காத்தையுஞ் செபித் திடக் குணிப்பி, விருநிலத் தெவரு மெம்பிரான் கயிலை யெய்துவர் முத்தரா யிருப்பார். (23)

பூருவத் தெடுத்த வனந்தமாம் பிறப்பிற் புகலரு மிருதியும் பொருவி, லாரிய மறையு மியம்பிய நெறியிற் சேர்ந்துதா யவர்களா யமைந்த, சீரியர் பரம னைந்தெழுத் தினையுஞ் செபித்திடப் பெறுகுவர் செபித்தோர், பேரினை யுரைக்கி லிரிந்திடும் பூதப் பிரேதமும் பேய் களும் வெருவி. (24)

அரிமுதற் றேவ ரெவரையும் புவன மனைத்தையு மிறுதியிற் றிரித்து, விரிகதிர்ச் சூல மேந்திநின் றூடும் விமலனை யன்றிவே றுல கிற், புரிவுறுங் கடவு ளுண்டெனு மறிவில் புத்தரோ யாதியாப் புக லும், பரசம யப்புன் னெறியடைந் தோர்க்குப் பரமனைந் தெழுத்தை யும் பகரார். (25)

மனுமுதன் மிருதி யாவையு நான்கு மறைகளும் புராணமு வாறு, நனிவிதந் துரைக்கு மாகமமொருநா லேலையு முண்மையா நவிலும்,

புனிதரா யரன்பா லன்புளோர் தமக்குப் பொருவில்சற் குருமுயற் சியி ஞற், றனிமுதற் பரம னோங்கெழுத் தினையும் புகல்வது விதியெனத் தகுமால். (26)

காதலே் தாந்த சாரமாம் பஞ்சாக் கரத்தினைச் சூண்முகன் மூகிழ, வரனுப தேசஞ் செய்தனன் புரக்கு மந்தமந் திரத்தினை மறையான், முருகனே ரிருபத் தைந்தெனும் விதமாப் பணிவிடை முயன்றிடு முனிவர்க, கிருளறப் புகன்று னம்முறை பேதா பேதத்தாற் பயன் களு மெய்தும். (27)

அடிமுதற் சடில முடிபரி யந்த மக்கர ரூபமா னந்த
நடமிடு மகேசற் காதலாற் பிரம தாண்டவ மாகுமா னடனரு
சடைமுடி துளக்கிச் சச்சிதா னந்தத் தாண்டவந் தனைப்புரி நடேசன்
வடிவிலோ ரைந்து வண்ணமாங் காலை யாதியா மாலையி னளவும். (28)

காலையோர் யாம நண்பக லபரா ணியமிருட் கலந்தெழு மாலை
யேனுமிக் கால மைந்தினு மான்பாற் செந்துகிர் வெங்கன விலகுங்
கோலநற் பசும்பொன் மணியெனத் திகழுமா தலானடே சனைக்குலவு
ஞாலமும் விசும்புஞ் சங்கம மெனவே நவின்றிடு நாமமு மாமால். (29)

மிகவரம் பயக்கு முலோக்கிய தீர்த்த வாவியில் விருப்பொடு முழுகி, யங்கெகிழ்ந் தொருகாற் றிருக்கள ரீசன் றனைத்தரி சிக்கி லாங் கவர்க்குப், புகருறு மவித்தை யால்வரும் போக வாழ்க்கையு மிருவினைப் புணர்ப்புந், தகவிறு னீக்கி யரன்சிவ கதியைத் தருமிதற் கையமொன் றுளதோ. (30)

பல்லுயிர்க் குயிராம் பராபர னுருவே யைந்தெழுத் துருவம்வேற் பகவ, னல்லதீண் டொருவ ரந்தமந் திரத்தை யறிந்தியம் புநரிலை யன்பான், மெல்லியல் சிறிது மேலெழ வுணர்ந்து மதிற்கடு களவு வேல் விமலன், சொல்லின னென்பா லத்துணை யுரைத்தேன் முற்றுநான் சொற்றிட வரிதால். (31)

பாழுசால பரமன றருதல மனநதம பகாிலும பாாசா தவனங், கேழுறக் கிளர்ந்த தித்தல மிதனிற் கிளையொடும் வாசமா யுறைவோர்,

ராழிசூ ழுகிலத் தொருவரைப் பார்க்கி லாங்கவர்க் காற்றுதற் கரிதசு,
மாழ்கிய பாவம் யாவையு மொழிந்து மழ்வலா ணுலகில் வீற்றி
ருப்பார். (32)

மாகமா மதியின் மீர்கழி மதியின் வளர்திதி யாறுறி னவர்க்கு
மோகையாந் தருமத் தினமதின் முருகற் குவப்புட னித்தலத் துகந்து
பாகமா மமிர்த மைந்திஞற் பலத்தாற் பான்மது முதலிய பிறவும்
யோகமாம் பொருளான் மஞ்சன மாட்டி நிவேதனம் விதிமுறை
[யுதவி. (33)

மதுவிரி நீல வுற்பலத் தெரியல் வனைந்துவேற் குகன்பதம் வணங்கித், துதிசெயி லொருவ ராங்கவர் தமக்கெண் ணெண்கலை முழுவதுந் தோற்றுங், கதிருமிழ்ந் தவிரு முழுமணிச் சுடிகைச் சேட னுங் காஞ்சிரங் கம்பித், ததிசய முறநல் லறிவுறும் பின்பு கந்தசா லோக்கிய மணுகும். (34)

திங்களுக் கொருகான் மருவிடு முயர்கார்த் திகைவரு தினத்திலா யினும்பார், பொங்கொளி விரிக்கும் பிருகுவா ரத்தி லாயினும் புனித மென் புனலாற், செங்கனித் திரளாற் பஞ்சகவ் வியத்தாற் றெள்ளமு தைந்திஞற் சிறப்ப, வெங்கதிர் வடிவே லிறைக்கபிடேகம் விதிமுறை செய்துபின் வியப்பால். (35)

சுவையிரு மூன்றுந் தருநிவே தனங்கள் செய்துபின் றூபமே முதலா, மவையெலா முறையாற் புரிந்துதண் ணலரா லருச்சனை விதியுளி யாற்றிப், புவனமும் விசும்பும் புகழ்திருக் களரு ளறுமுகக் கடவுளைப் போற்றி, னவதலத் தெவருந் தனதனைப் போன்று நன் மலர்த் திருவொடு நயப்பார் (36)

மகவிலா தவரு மகவினைப் பெறுவார் வறியவர் திருவொடும் வாழ்வார், மிகுபெரும் போகம் வேண்டினோ ரதனை மேவுவர் கல்வியை விரும்பி, மகிழ்வுற வேண்டு மவர்க்கது மருவும் வகுத்திவை யுரைப்பதென் முன்னம், பகர்விதி முருகற் கியற்றுவோர் வடிவேற் பகவனை துருவினைப் பெறுவார். (37)

எயினர்தங் குலத்தி லேய்ந்தவன் றீயோ னெல்லையில் கொலைத் தொழி லியற்றி, யுயிரொலாஞ் செகுத்து நாள்பல கழித்தோ னொரு வனித் தலத்தினி லொருநாட், பயின்மலர்த் தொடைய லறிவுரு துணிந்து பரமனுக் கன்னவன் பாவச், செயலெலா மகன்று திருபணு யுதித்தா னித்தலப் பெருமையார் தெரிப்பார். (38)

என்றிவை யனைத்து நந்திவா னவன்று னியம்பலு மகிலமற் றெவையு, மன்றுதந் தவனல் கியமுனித் தலைவ னூர்வமீக் கொள மகிழ்ந் தனனீண், டொன்றிய காதை நவையற வுரைப்போ ருணர்த்து வோர் கேட்பவ ருலகி, லென்றும்வாழ்ந் தளவில் போகமுற் றிறுவா முத்தியு மெய்துவ ரினிதால். (39)

## கதாசாரம்

வேதமுடிபாகிய சிவசொரூபமே பஞ்ச அக்கரம். இஃது பஞ் சாக்கரம், பஞ்சாக்ஷரம், ஐந்தக்கரம், ஐந்தக்ஷரம், ஐந்தெழுத்து எனப் பெயர் பெறும். இப்பஞ்சாக்கரம் நகாரம், மகாரம், சிகாரம், வகாரம், யகாரமென வைந்தாம். நகாரம்-திரையக்ஷரம், திரோதாக்ஷரமெனவும்; மகாரம்-மாயாக்ஷரம், மலாக்ஷரமெனவும் ; சிகாரம்-பதியக்ஷரம், இறை யக்ஷரமெனவும் ; வகாரம்-பரையக்ஷரம், சத்தியக்ஷரமெனவும் ; யகா ரம்-சீவக்ஷரம், ஆவியக்ஷரமெனவுங் கூறுவர். இந்த பஞ்சாக்கர செபம் அக்ஷர பேதங்களினுல் ஐந்து, ஆறு, எட்டு, பத்து, பன்னி ரண்டு என ஐந்துவிதமுண்டு. இவ்வைந்து விதமும் பஞ்சாக்கரம் ஆதியாகச் செப்பிப்பர். சிவபெருமானுடைய கட்டளைப்படி சண்முகக் கடவுள் மார்கழி மாதம் பூர்வபக்கஞ் சஷ்டித்திதியுஞ் சதயநக்ஷத்திர முங் கூடிய சுபதினத்தில் திருக்களர் ஸ்ரீசபாநாயகர் திருச்சந்நிதியில் குருமூர்த்தமா யெழுந்தருளியிருந்து கந்தமாதன பருவத வாசிகளாகிய அறுபதினயிர முனிவர்களையும், துருவாச முனிவரையும், வியாதர் முதலிய மற்ற முனிவர்களையும் சுற்றிலும் நிறுத்திக்கொண்டு பதி னயிர முனிவர்களுக் கொருமுகமாக அறுமுகத்தாலும் ஒரே காலத்தில் முனிவர்களைப் பார்த்து ஹே முனிவர்காள் ! (1) சரீரமாகிய கோவிலி

---

அக்கரம்—அக்ஷரம், எழுத்து.

னுள் இருதயமாகிய புண்டரீகாசனத்தில் சிவபெருமான் மூன்றும் பிறை சூடிய சடாமகுடமும், சர்ப்ப கங்கணமணிந்த கைகளும், புலித் தோல் தரித்த இடையும், அபயவரதமுமுடையராய் விளங்குவதாகத் தியானித்து திரையெழுத்து, மலவெழுத்து, பதியெழுத்து, பரை யெழுத்து, சிவவெழுத்து இவ்வைந்தையு முறையே சேர்த்து மானஸ மாகச் செபிக்கின் மோக்ஷமுண்டாம்; (2) தேகமாகிய கோயிலினுள் இருதயமாகிய கமலாசனத்தில் சிவபெருமான் கங்கை நிறைந்த சடா மகுடமும், உமாதேவியார் வீற்றிருக்கின்ற இடப்பாகமும், விபூதி யினாலே உத்தூளிக்கப்பட்ட திருமேனியுமுடையராய் விளங்குவதாகக் கருதி பிரணவம், திரையெழுத்து, மலவெழுத்து, பதியெழுத்து, பரையெழுத்து, சிவவெழுத்து இவ்வாறையு முறையே சேர்த்து மானஸமாகச் செபிக்கின் போகமோக்ஷமுண்டாம்; (3) காயமாகிய ஆலயத்தினுள் இருதயமாகிய பதுமாசனத்தில் சிவபெருமான் கங்கா தேவி நிறைந்திருக்கின்ற சடாபாரமும், உமாதேவி வீற்றிருக்கின்ற வாமபாகமுமுடையராய் விளங்குவதாக நினைத்து ஸம், யம், பிரண வம், திரையக்ஷரம், மலாக்ஷரம், பதியக்ஷரம், பரையக்ஷரம், சிவாக்ஷ ரம், இவ்வெட்டையும் முறையே சேர்த்து மானதமாகச் செபிக் கின் காமியமுண்டாம்; (4) சடலமாகிய ஆலயத்துள் இருதய மாகிய பங்கயாதனத்தில் சிவபெருமான் மூன்றும்பிறை யணிந்த சடாமகுடமும், அபயவரதமு முடையராய் விளங்குவதாக எண்ணி ஸம், யம், ஸம், யம், பிரணவம், திரையெழுத்து, மலவெழுத்து, இறையெழுத்து, பரையெழுத்து, சிவவெழுத்து இப்பத்தையு முறை யே சேர்த்து மானதமாகச் செபிக்கின் வறுமை நீங்கும்; (5) உடம்பாகிய கோவிலினுள் இருதயமாகிய அம்புயாதனத்தில் சிவ பெருமான் அஷ்டலக்ஷுமியும், பலவித ரத்தினாபரணங்களுமுடைய ராய் விளங்குவதாகச் சிந்தித்து ஸம், யம், ஸம், யம், ஸம், யம், பிரண வம், திரோதாக்ஷரம், மலாக்ஷரம், இறையக்ஷரம், பரையக்ஷரம், சிவா க்ஷரம் இப்பன்னிரண்டையு முறையே சேர்த்து மானதமாகச் செபிக் கின் வசீகரமுண்டாம் எனப் பஞ்சாக்கரோபதேசமும்; தங்கத்தகடு, வெள்ளித்தகடு, பூர்ஜபத்திரம் இவற்றிலொன்றில் நடுவில் பிரணவத்

றை யெழுதிச் சுற்றிச் சதுரமாக இரேகை கீறி இதனைச்சுற்றி († டம் என்னும்) சந்திரபீஜத்தை யெழுதி அவற்றின் மேல் சுற்றிலும் († ஔ என்னும்) கலாபீஜத்தை யெழுதி அதன்மேல் சுற்றிலும் மாத்ருகை († அம் முதலிய ஐம்பத்தொரு எழுத்துக்களை) எழுதி அவற்றைச் சூழ மீட்டும் மேற்படி கலாபீஜத்தை யெழுதி அவற்றிற்கு மேல் சுற்றிலும் பிரணவஞ் சேர்ந்த பஞ்சாக்கரத்தை யெழுதி அவற்றைச் சூழ மாயாவேஷ்டனம் († இறீம் என்னும் அக்ஷரத்தை) எழுதி யமைத்து அதில் சிவபெருமானை விதிப்படி ஆவாகனம்பண்ணி பதினாறுவித உபசாரத்தோடு அருச்சனை செய்து அணிந்துகொண்டு சந்தியாவந்தன முதலியன செய்வோர் சகல பாவங்களுந் தொலைந்து சிவசொரூபத்தை யடைவர். இது சத்தியம் எனப் பஞ்சாக்கர யெந்திரோபதேசமும் செய்தருளினர்.

இவ்விதம் உபதேசிக்கப்பெற்ற துருவாசர் முதலிய மகரிஷிகள் சிவபெருமான், தேவியார், தக்ஷிணாமூர்த்தி இவர்களுடைய திருச்சந்நிதிகளிலிருந்து பஞ்சாக்கரஞ் செபித்து சிவபெருமா னெழுந்தருளி வந்து வரமளிக்கப்பெற்றனர். பஞ்சாக்கரோபதேசம் விதிப்படி கேட்டுச் செபிப்பவன் சிவபெருமானேயாவன். பஞ்சாக்கரத்தைத் திருக்களரில் ஒருரு செபிக்கின் கோடியுரு செபித்த பலனைத் தந்து புவக்கருக்களைந்து மலபரிபாகம் பண்ணி முத்தியளிக்கும். பஞ்சாக்கரோபதேசம் பெருங் காலமுதல் வருஷத்திற் கொருதரம் திருக்களர் அறுமுகக்கடவுளுக்கு அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், உபசாரம், அருச்சனை முதலிய விசேஷ பூஜை செய்து வணங்குவோர் இந்திர பதம் பெற்றுப் பின்பு முத்தியடைவர். சண்முகக் கடவுள் சொன்னபடி பஞ்சாக்கரோபதேசம் பெற்றுச் செபிப்போர் பிறவிப்பிணி நீங்கி, பரிசுத்தமாகிய ஞானமுண்டாகி, பிறவா முத்தி யடைவர். விபூதி யணியாதவர், உருத்திராக்கந் தரியாதவர், சிவபக்தி யில்லாதவர். இவர்களுக்கு பஞ்சாக்கரோபதேசஞ் செய்யலாகாது. குரு உபதேசித்த

† இக்குறியிட்ட அக்ஷரங்கட்கு சம்ஸ்கிருத அக்ஷரங்களை உபயோகிக்கலாம்.

படி பஞ்சாக்கரத்தைச் செபிப்போர் கைலாசம் பெறுவர். அநந்த சென்மங்களில் வேதமுதலியன வோதிய* தூயவர்களுக்குத்தான் பஞ்சாக்கரோபதேசங் கிடைக்கும். பஞ்சாக்கரம் செபிப்பவர் பெயரினைக் கேட்டமாத்திரத்தில் பூதப்பிரேதமும், பேய்களும் பயந்து ஓடிப்போம். சைவசமய மல்லாத பரசமயப் புன்னெறி யடைந்தவருக்குப் பஞ்சாக்கரத்தைச் சொல்லலாகாது. சிவபக்தி யுள்ளவர்களுக்கு குருதானே பஞ்சாக்கரத்தை உபதேசிக்கலாமென்பது விதியேயாம். சிவபெருமான் பஞ்சாக்கரத்தைச் சண்முகருக்குபதேசித்தனர். சண்முகக்கடவுள் தன்னை வழிபட்ட முனிவர்களுக்கு இருபத்தைந்து விதமுபதேசித்தனர். பஞ்சாக்கரமே திருவுருவமாக்கொண்ட சபாநாயகப் பெருமானுடைய சொரூபம் காலையில் பசுவின் பால்போலவும், முதல் யாமத்தில் பவளம்போலவும், இரண்டாம் யாமமாகிய உச்சியில் அக்கினி போலவும், மூன்றாஞ்சாமமாகிய அபராணியத்தில் பசிய பொன்போலவும், நான்காஞ்சாமமாகிய மாலையில் இரத்தினம்போலவும் பிரகாசிக்கும். பஞ்சாக்கரத்தின் சொரூபம் அறுமுகப் பெருமானுக்குத்தான் தெரியும். திருக்களரியில் வசிப்போர் சகல பாவங்களும் நீங்கி முத்தியடைவர். மார்கழி மாசி இம்மாதங்களில் பூர்வபக்கஞ் சஷ்டித்திதியில் சண்முகக் கடவுளுக்கு எள்நெய், (பால் தயிர் நெய் கோசலம் கோமயம் * என்பன கூடிய) பஞ்சகவ்வியம், அரிசிமாவு, நெல்லிமுள்ளித்தூள், உளுந்துமாவு, பயறுமாவு, கடலைமாவு, கோதுமைமாவு, கஸ்தூரிமஞ்சள்தூள், பால், தயிர், தேன், நெய், சர்க்கரை, (பால் தயிர் நெய் தேன் சர்க்கரை என்பன கூடிய) இரசபஞ்சாமிர்தம், (பால் தயிர் நெய் தேன் சர்க்கரை வாழைப்பழம் மாம்பழம் பலாப்பழம் திராக்ஷப்பழம் என்பன கூடிய) பல பஞ்சாமிர்தம், எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, கொழிஞ்சிப்பழச்சாறு, பம்பிளிமாஷிச்சுளை, மாதுளம்பழச்சாறு, விளாம்பழச்சத்து, தமர்த்தம் பழச்சாறு, பலாசசுளை, கருப்பஞ்சாறு, இளநீர், அன்னம், குங்குமப்பூ கோரோசனை கஸ்தூரி பச்சைக்கர்ப்பூரம் புனுகு சவ்வாது

பால் ஐந்து பங்கு, தயிர் மூன்றுபங்கு, நெய் இரண்டுபங்கு. கோசலம் ஒருபங்கு கோமயம் சிறிதுகொண்டது பஞ்சகவ்வியம்.

பனன்ீா என்பன கூடிய) சந்தனக்குழம்பு,பன்னீர், தாராபாத்திரஜலம், பத்திரஜலம், சிருங்கஜலம், இரத்தினஜலம், தருப்பைஜலம், சங்கஜலம் ஸ்நபனஜலம் என்பவற்றால் மந்திரபூர்வமாக அபிஷேகஞ்செய்து மெல்லிய வஸ்திரத்தினால் மெதுவாக ஒத்தி ஈரத்தைப்போக்கி விபூதி யபிஷேகஞ்செய்து; அப்படியே வைத்து காவிவஸ்திரம், உருத்திராக்க மாலை,நீலோற்பல மலர்மாலை இவைகள் சாத்தி; சுத்தான்னம், (பருப்புப் பொங்கல் சர்க்கரைப்பொங்கல் மிளகோதனம் புளியோதனம் தயிரோ தனம் கடுகோதனம் எள்ளோதனம் உளுந்தோதனம் என்பனவாகிய) சித்திரான்ன வகைகள், (மோதகம் பிட்டு அப்பம் வடை தேன்குழல் அதிரசம் இட்டலி முதலிய) பணிகார வகைகள், (பருப்பு பொரியல் கூட்டு பச்சடி கிச்சடி பிட்டுளை கடும்பிட்டுளை இடாங்கர் கோசுமலி அவியல் வறுகல்தாளித்தம் பச்சி சொடி பொடி சட்ணி சாம்பார் மோர்க்குழம்பு இரசம் பாயசம் அப்பளம் முதலிய) கறியமுதுகள், (வாழைப்பழம் மாம் பழம் பலாப்பழம்என்பனவாகிய)முக்கனிகள்,சர்க்கரை,தேங்காய்க்கீறு, நெய்,காய்ச்சுப்பால், (ஏலம் சுக்கு சர்க்கரை யிட்ட ஜலமாகிய)பானகம், (ஏலம் சந்தனம் பச்சைக்கர்ப்பூரம் பாதிரிப்பூ செங்கழுநீர்ப்பூ இவை யிடப்பெற்ற ஜலமாகிய)பானீயம்,வெற்றிலை பாக்கு, (ஏலம் இலவங்கம் பச்சைக்கர்ப்பூரம் சாதிக்காய் தக்கோலமென்பவற்றின் பொடியைப் பன்னீரோடுகூட்டிச்செய்த பஞ்சவாச குளிகையாகிய)முகவாசம் என்ப வற்றை நிவேதனம்புரிந்து; தூபம், தீபம், அலங்காரதீபம், நாகதீபம், இடபதீபம், கஜதீபம், புருஷதீபம், நக்ஷத்திர தீபம், பூரணகும்பதீபம், ஈசானதீபம், தற்புருஷதீபம், அகோரதீபம், வாமதேவதீபம், சத்தி யோஜாததீபம், கண்ணாடி, குடை, சாமரம்,விசிறி, சுருட்டி என்பவற்று லுபசரித்து; அருச்சித்து ; கர்ப்பூரார்த்திபண்ணி வணங்கித் துதிப்போ ருக்கு அறுபத்துநாலு கலைக்கியானமும், ஆதிசேஷன் அதிசயிக்கும்படி யான நல்லறிவுந் தோன்றும்; முடிவில் சுப்பிரமண்ய ருலகத்தை யடை வர். மாதந்தோறும் வருங்கார்த்திகை நக்ஷத்திரத்திலேனும், வியாழக் கிழமையிலேனும் அறுமுகக்கடவுளுக்கு பரிசுத்தமாகிய ஜலம்,கனிவர்க் கங்கள், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்த முதலியவைகளால் மந்திரபூர்வ மாக அபிஷேகஞ்செய்து; கைப்பு, புளிப்பு, தித்திப்பு,துவர்ப்பு,கார்ப்பு,

உவர்ப்பு என்னும் அறுசுவை யுடையனவாய் உண்ணப்படுவது, தின்னப்படுவது, நக்கப்படுவது, பருகப்படுவது என்பனவாகிய நால்வகை யுணவுகளையும் நிவேதனம் புரிந்து; தூபதீப முதலிய உபசாரஞ்செய்து; அருச்சனைபண்ணி வணங்கித் துதிப்போர் கல்வி, செல்வம், மகவு, ஞான முதலியவைகளை யடைந்து அந்தத்தில் சுப்பிரமணிய சொரூபம் பெறுவர்.

திருச்சிற்றம்பலம்.

---

குறிப்பு.—மார்கழி மாசம் பூர்வபக்கஞ் சஷ்டித்திதியுஞ் சதைய நக்ஷத்திரமுங்கூடிய தினத்தில் சண்முகக் கடவுளுக்கும் துருவாசமுனிவருக்கும் விதிப்படி அபிஷேகாதிகள் செய்வித்து, துருவாசரைச் சண்முகப்பெருமான் சந்நிதானத்திற்கெழுந்தருளப்பண்ணி சண்முகக் கடவுளுக்குக் கருப்பூரார்த்தி செய்து அக்கடவுளின்மீது சாத்தியிருக்கும் பரிவட்டங்களில் ஒன்றை யெடுத்துத் துருவாசருக்குச் சாத்தி கர்ப்பூரார்த்தி செய்து, திரும்ப அறுமுகக்கடவுளின்மீதிருக்கும் பரிவட்டங்களிலொன்றை யெடுத்து ஓதுவாருக்குக் கட்டி காளாஞ்சி கொடுத்து, தலபுராணம் பஞ்சாக்கரச் சருக்கம் ஆறு முதல் பதினெட்டுவரையிலுள்ள பதின்மூன்று செய்யுட்களையும் ஓதச்செய்து, அறுமுகப்பெருமானுக்கும் துருவாச முனிவருக்கும் ஒரேகாலத்தில் கர்ப்பூரார்த்தி செய்து, மயில் வாகனத்தில் சுப்பிரமணியக் கடவுளையும், படிச்சட்டத்தில் துருவாச முனிவரையும் வீதியிலெழுந்தருளிவரச் செய்வது உத்தமோத்தமமாம். மாசி மாசம் பூர்வபக்கஞ் சஷ்டியில் சண்முகக்கடவுளுக்கு விதிப்படி அபிஷேகாதிகள் செய்வித்து மயில்வாகனத்தின்மீது அப்பெருமானை வீதியிலெழுந்தருளிவரச்செய்வது மிக்க விசேஷமாம். கார்த்திகை நக்ஷத்திரத்திலும், வியாழக்கிழமையிலும் சண்முகப்பெருமானுக்கு விதிப்படி அபிஷேகாதிகளெல்லாஞ் செய்வித்து, அப்பெருமானைப் பிரகாரத்தில் எழுந்தருளி வரச்செய்வது மிகுந்த விசேஷமாம்.

## ஐந்தாவது
## மாலாதாரகச் சருக்கம்.

திருச்சிற்றம்பலம்.

முருகவிழ் துளவத் தெரியன்மா யவனும் பிரமனு முறைமுறை பரவுந், தருவனத் தானுக் கொலியலை வேடன் முனுணரா தருமன் சாத்த, வருண்மிகு பூசை யாகியாங் கவன்முன் மன்னவ னுந்திற மடிகே, ளுரையெனு மலரோன் றருமகன் கேட்ப நந்தியம் பகவனீ துரைப்பான். (1)

பகருமித் தலத்தின் முழுமணிச் சபையின் பான்மையைப் பரி வுறக் கேட்பி, னகலும்வல் வினையும் பிறவியும் வாய்மை யாதலா லவற்றினை யுனக்குப், புகலுவன் கேட்டி முன்னமோர் காலத் தவனி யிற் புயன்மழை வறந்து, மிகுபயிர் சிறிது மின்றிமா நதியின் வெண் டிரைப் புனலுமஃ கியதால். (2)

### வேறு

இலகு மாதரும் பால்குறைந் தனவுண விகந்து
பலவி லங்கொடு பறவையுங் குறைந்தன படிகு
ழலையி னீர்மையுங் குறைந்தன வமரர்கட் காற்றுங்
குலவு பூசனை குறைந்தன குறைந்தன தருமம். (3)

ஆற்ற ரும்பசி நோயினுன் மன்பதை யனைத்துங்
கூற்று வற்குண வாயின வுயிரெலாங் குலைந்த
போற்று போகமு மிருவகை யறங்களும் புவனத்
தூற்று வான்புன லில்லையே யெங்குன முளவாம். (4)

உன்னு வான்புன லொன்பது வருடமா வுதவா
தின்ன வாறெலாம் பல்லுயிர் முழுவது மிரங்க
வன்ன காலையின் மன்றசை மாதின மருங்குந்
துன்னு கானவ ரெழுந்தனர் கொலைத்தொழில் சூழ்வோர். (5)

### வேறு

எழுந்து நான்மறை யாளர்த மில்லெலாஞ்
செழும்பொ ருட்கவர்ந் தம்புரி தீமையை

விழைந்தி யற்றியு மேதினி மாந்தர்க
ளழுங்க வேசில நாட்டிரிந் தாரரோ (6)

ஆய காலையி லித்தலத் தாலயம்
போயுலைந்து பொறியழற் போந்தகட்
சீய மும்புலி யுந்திரள் வேழமு
மேய கானக மாகி விளங்குமால். (7)

செல்வி லங்கும் படிசினை யோங்கியே
பல்வி லங்கும் பறவையும் பம்பலா
லல்வி ருட்செறி யிவ்வனத் தாழிசூழ்
தொல்வி ரும்புவி மானவர் துன்னிடார். (8)

இங்க ணிவ்வனத் தெய்தினன் முற்புகல்
வெங்கொ லைத்தொழில் வில்லெயி னர்க்குளோர்
செங்கண் வேட்டுவன் றீமை திருத்துவோன்
றங்கு யிர்க்குச் சமனெனத் தோன்றினான். (9)

உடுபபு மெல்விர லானுட லோம்புவோ
னெடுத்த வெஞ்சிலை யிற்றொடை யேற்றிமேல்
விடுக்கும் வாளியி னான்மிரு கங்களை
யடுக்கல் போலக் குவிக்கின்ற வாற்றலான். (10)

மேவி யோர்பக லன்னவன் வெவ்விலங்
காவி கொன்று புலவுண வாசையான்
மாவி லம்பொடு மிக்க வானுயர்
காவி னூடு கரந்துறைந் தானரோ. (11)

கரந்த வேடுவன் கண்ணுறுங் காட்சியிற்
புரிந்து தான்புனை வானப் புனத்திடை
நிரந்த நாண்மலர் கொய்து நிரையளி
பரிந்துமாலை பலபல வீக்கியே. (12)

மாலை யிற்கொடு வந்து மடிந்ததொல்
லாலை யத்தில்லைத் தானவன் சேழுற

5

ஞால மேவ மறைந்தது நன்குன
தேல வாங்க ணிலிங்க யிருந்ததால். (13)

ஆங்கு முஞ்சிவ லிங்கத் தண்ணிமுடிக்
கீங்கி வன்றரு மாலை யிலையந்தது
பாங்கில் வேட னறிந்திலன் பண்புறத்
தீங்கி லாநல் வினைப்பயன் செய்ததால். (14)

போது போக்கத் தொடுத்திடும் பூமலர்க்
கோதை யைப்பின் கொணர்ந்து கிராதனு
மீது றப்புனைந் தோர்புன மேவியே
காத லோடு கரந்திருந் தானரோ. (15)

வெம்பு னத்தினில் வேறு கரந்துவி
லம்பி ஞன்மரை பன்றி யழுங்குமா
னிம்ப ரோடு முயல்பல கொன்றிவை
நம்பு றக்கொணர்ந் தேகுடி னண்ணினன். (16)

வாச மாலை யரன்முடி வாய்த்தது
மீச னாலய மென்பது மோர்கிலா
னாச மின்றி யுயிர்தொறு நண்ணிய
வாசி லெந்தை பெயரு மறிகிலான். (17)

புரிவ தென்றும் பிறர்மனைப் போகமே
தெரிவ தென்று முடற்குறுஞ் செய்கையே
பரிவ தென்றும் பழிதரும் பாவமே
திரிவ தென்றுமா சேர்வுறுங் கானமே. (18)

கேணர்வ தென்று மறையவர் கொள்பொரு
ளுணர்வ தென்றும் புலாலி னுணவையே
புணர்வ தென்றுங் கொடுவினைப் புன்மையே
யணிவ தென்றுங் கொலைத்தொழி லாண்மையே. (19)

இன்ன வாறுகி ராத னியற்றியே
முன்னை நல்வினை யின்பயன் முற்றலாற்

பன்னு நூறு பருவமும் பார்மிசைத்
துன்னி யிவ்வுட னீத்தனன் றூய்மையால். (20)

மலங்கி வீந்த வனசரன் றன்னைமேல்
லலங்கல் வேய்ந்த வறப்பய னாலான்
கலிங்க தேசத்திற் காவல னாய்ப்பிறந்
திலங்க நல்லரு ளீந்தன னன்பினால். (21)

## வேறு

கற்பகப்பூந் தருவனத்தின் காரணமோ நான்மறையுங் கருதொ ணாத, சிற்பரமாஞ் சிவலிங்கத் தின்பரிசோ வித்தலத்திற் சிறந்த மேலா, மற்புதமோ வித்திறமென் றறிந்திலேன் மாலயனு மமரர் கோனும், பற்பலவா மிமையவரு மறிகுவரோ சிவனருளின் பான் மைதானே. (22)

முன்னமறி யாதமலன் சிவலிங்கத் திருமுடியின் முருகு நாறு, மென்மலர்மா லிகைவேய்ந்த வறப்பயனா லான்கருணை விளைப்ப வேட, னின்னலுறுங் கொடும்பாவ வினையகன்று கலிங்கநாட் டிறைமை பூண்ட, மன்னவன்றன் குலத்துதித்து மாலாதா ரகனெனும்பேர் புனைந்தான் மாதோ. (23)

அளிமுரலு மலர்மாலை முன்னமரன் றிருமுடியி லணிந்த வாற்றும் விளிவுறும்முற் பிறப்பதனில் வேட்டுவனாய்ப் பிறந்துகொலை யிழைத்த வாறுங், குளிர்மலர்மா லிகையுனரா தான்முடியி லணிந்ததனாற் கொடிய பாவம், விளிவுறமன் னவனாய்வந் துதித்ததுவு முணர்ந்த னன்மேல் விளைவு மோர்வான். (24)

நீதிமனு முதலான மிருதிகளுஞ் சுருதிகளு நெறியி னோர்ந்தா னிதிமனு முறைமையென வரசுரிமைத் திறம்புரிந்தா னருளிற் றூயோன், மாதொருபா கனையிரவு நன்பகலு மறவாமன் மனத்து ளோர்வான், யாதுமா லுளமகிழ நல்லறமல் லாதுபிற வியற்றி டானால். (25)

கறைமிடற்றெம் பெருமானுக் காலயமு மணிக்கொடிநீள் கணித் தேரு, நறைமிகிழ்நந் தனவனமு நளினமலர் வாவிகளு நாளு மாக்கிக், குறைவில்சிவ னடியார்கள் வேண்டுவன பலவுதவிக்கொடிது நீக்கி, யுறுசுலிங்க நாடளிக்கு மாலாதா ரகன்சின்னு ளொழுகும் வேலை, (26)

நலந்தருமக் கினிகருப்பன் விசாலாக்க னற்றரும கீர்த்தி நாடு, மலங்கிருதி யெனநால்வர் மாலாதா ரகன்றவத்தா லான்பா லன்புங், குலந்திறம்பா வொழுக்கமுநல் லறிவுமறத் திறந்தவருத் குணமு மெய்தி, யிலங்கவுதித் தனர்முறையாற் றந்தையினு மளியமேரீன வியம்ப லாமால். (27)

தனையரொரு நால்வரிமுன் னவன்றனக்கு மணிமகுடந் தரித்து மேனாள், வினையகற்றி யருள்பாரி சாதவனத் தான்கோயின் மிடித்த னேக்கிப், புனைதன்முயன் றதுகரந்து கங்கைநதிப் புனலாடப் போவான் போன்று, நனிபொருளெண் கோடிகொணர்ந் தவ்வாசன் றருவனத்தி னண்ணி னானால். (28)

எய்தியடைந் தோர்க்கருளுந் திருக்களரு ளடவியெலா மிறுத்து நூறித், தூய்யதம னியத்தகட்டாற் பொதிந்தமுழு மணிச்சபையுஞ் சுடர்கு லாவுந், தெய்வவிமா னமுமதிலுங் கோபுரமு மண்டபமுஞ் சிறப்ப மேனு, ளுய்யமய னியற்றியதி னுன்மடங்காம் படியமைத்தா னுரவுத் தோளான். (29)

வகுத்தமுழு மணிக்கோயில் புனிதமுறும் வினைபுரிந்து மறை கள் யாவும், பகுத்துணரு மறிவாளர் தமையழைத்து விதிமுறை யாற் பதிட்டை பண்ணி, மிகப்பரமன் றனக்கியைந்த பூசனையன் பாலியற்றி விழைந்து நாளு, மகத்திருணீத் துணர்வுதரு மமலன் மகிழ் பணிவிடைக ளாற்றினானால். (30)

முனைனவனுக் காசனியற் றிம்பூசை யரிபிரமன் முதலோ ரேனும்; பன்னலரி தெளிதற்பலரும் பரிகளதோ வின்னன பணிக ளாற்றி, மன்னுமறை யவர்களொடுந் தருவனத்தில் வதிதரக்

வாஞன் போக்கிப், பின்னர்மழ விடைப்பாக னனுக்கிரகத் தான முத்தி பெற்ருனன்றே. (31)

உணராம லான்முடியிற் றனக்கணியத் தாமைமுற்த வொலி யல் சூட்டித், தணவாத கொலைபுரிந்த வேட்டுவன்முத் தியையடைந் தான் றகவி ஞேடு, மணநாறு மலரிலதாய்த் தொழுதுசிவ பெருமானை மகிழ்ந்து நாளும், பணிவார்கள் பெறும்பயனுக் களவுளதோ வனந்த னுக்கும் பகரொ ணதால். (32)

துயர்புரியுங் கொலைவேட னுணராம லொருபகற்ருன் ருெடுத்த தோதை, யயனிறைஞ்சு சிவன்முடியி லுறவவன்பே றிதுவானு லன்பு நீத்தும், பயன்விழைந்துங் குலமுறையி னுயர்ச்சியைவேண் டியும்பலரும் பணியு மேன்மைச், செயனினைந்துஞ் சிவபூசை யாற்று வோர் பெறும்பயன்யான் றெரிக்கற் பாற்ருே. (33)

ஊறுசெயும் வேட்டுவனுக் கிப்பயனீந் தனனன்பா லொருமை யோடும், வேறுசிவ னறம்புரியிற் சிவன்றரும்பேற் றினையெம்மால் விளம்ப லாமோ, தேறுமுனி வரமற்ருேர் யாவருமிக் காதைதனைத் தெரியக் கேட்கிற், பேறுதருந் திருக்கயிலை யெய்துவர்பின் முத்தியை யும் பெறுவர் மாதோ. (34)

வேறு

நந்தி யீச னயந்திவை யாவையுஞ்
சிந்தை கூர மகிழ்வொடு செப்பலும்
புந்தி மீதுறக் கேட்டுப் புனைமலர்
வந்த நான்முகன் மைந்த னியம்புவான்.

காய்ந்து முப்புரஞ் செற்றவன் காதலா
லேய்ந்த வித்தலத் தின்னு மடைந்துமேல்
வாய்ந்த பேறு மருவின ராயிடி
னாய்ந்து ரைத்தி யெனுவரைந் தானரோ.

ஈது கேட்டரு ணந்தி யியம்புவா
னாதி யாய தருவனத் தாங்கடை

வேத நீக்கி யிருப்பவர்க் கெல்லையப்
போத னேனும் புகன்றிட வல்லனே. (37)

ஆயி னுஞ்சிறி தோதுவ னூர்வமாய்த்
தூய மாதவ கேளெனச் சொல்லலுந்
தாயி லன்புடை யோயவை சாற்றென
மேய மாமுனி கூற விளம்புவான். (38)

## வேறு

பொன்னிலங் காவல் பூண்ட புரந்தரன் முதலா மற்றை
விண்மணி மவுலி வானோ ரனைவரும் வியாத னாதி
நன்முனி வரரு மேனோ ணற்றரு வனத்தி னண்ணி
நின்மலன் றிருத்தாள் போற்றி நித்தலும் பணிந்து பின்னர் (39)

## வேறு

மண்டி வான்றட வும்பணைக் கற்பக வனநன்
கெண்டி சைக்கட்கு ரோசமைந் துட்பட விலகும்
புண்ட ரீகமா புரமயி ராபத புரமட்
டுண்டர் மாதவர் யாவரு மேவின ரதன்பால் (40)

அங்கண் மேவியே யான்றிரு வாலய மனந்த
மங்கு செய்திய மயன்புனை ந் தானென வகுத்துச்
செங்கண் மாலயன் றேடருஞ் சிவன்றிரு விலிங்கந்
தங்க ளுமைத்தா.,லியற்றினர் தனித்தனி தவத்தோர். (41)

அவ்வி லிங்கங்க ளனைத்தையு மாலயந் தோறுஞ்
சைவ நூன்முறை பதிட்டைசெய் தவரவர் தகவாற்
செவ்வி நாண்மலர் தூய்த்தொழு தாங்கவர் தீய
வெவ்வி னைப்பவம் வீட்டினர் வீடுபெற் றுயர்ந்தார். (42)

இந்த வாறுமுன் முனிவரர் வானவ ரெவரு
மந்த நற்கதி யெய்தின ரித்தலத் தமர்ந்த
முந்து தீர்த்தத்தின் மூழ்கிமேற் கதிபெற்ற முதலோர்
சிந்து வின்மணு விலும்பல ரவரையார் தெரிப்பார். (43)

எனப்பு கன்றரு ணர்ந்தியம் பகலனை யிறைஞ்சி
யனைத்து நீயுணர்ந் தாயுனக் கறிவதற் கரிதா
நினைப்ப தொன்றிலை யவையுநீ விளம்பென நிகரில்
சனற்கு மாரமா முனிசொல நந்தியுஞ் சாற்றும். (44)

## தீர்த்தநாமம்.

### வேறு

அற்புதமா யிமையவரு முனிவரரு மாலயனு மன்பா லேத்தத், தற்பரனு னந்தநா டகம்புரியு முழுமணிப்பொற் சபையின் சார்பிற், சுற்றுறவே யுர் குண்டத்தி னளவேனும் புனல்காணிற் றொல்லை ஞால, முற்றபல தீர்த்தத்தின் மேலான தீர்த்தமென வுரைக்கலாமால். (45)

தருவனத்தி லரன்கோயிற் சன்னிதியிற் றிருவூசன் றவத்தாற் செய்த, பொருவரும்லோக் கியதீர்த்த முளததனிற் றினம்மூழ்கிற் போகம் வீடு, மருளுமதின் மூழ்குதற்கு விசேடதினம் விதிபாத மய னத்தோடு, கிரணமருத் தோதயஞ்சங் கிராந்திகவி மதியெனுமிக் கிழமை யாமால். (46)

ஈண்டுரைத்த தினங்களிலட ...... மூழ்கு யிட்டமுறும் பொருள்க ளேனும் நீண்டபுவி யோதனந்தா னியமேனு முதவிலவர் நிமலராவார், வேண்டுமவர் வாவியத னிடைமூழ்கிப் பிண்டமுடன் விரும்பு நல்லான், மாண்டதிலோ தகம்வழங்கிற் றென்புலத்தோ ரின்பமுற்று மகிழ்வார் மன்னோ. (47)

உயர்பிரம தீர்த்தமென வீசனுக்குத் தென்றிசையி லுளதத் தீர்த்தத், தியன்மறையோர் பலர்மூழ்கி முத்திபெற்று ரீசனுக்கு மேல்பா லென்றும், பயிலுமுருத் திரதீர்த்தங் கற்பாந்தத் துருத்திரர்கள் பலரு மூழ்கி, நயனுறுமத் தீர்த்தத்தின் மூழ்கிலருத் திரலோக நண்ணு வாமால். (48)

### வேறு

ஆணவருத் திரதீர்த்தத் ததனின் மாசி
யாமதியி லிரவிபெழு மளவின் மூழ்கி
ஞானமருள் பரமனுக்கு மறையோர் கட்கு
நற்கலிங்க மிரண்டுதவி நம்பன் றுளிற்

றேனிமிரு மலரிலைதூய்த் தொழுது தூபந்
தீபமுத லுபசாரஞ் செய்வா ராயிற்
போனபவத் துறுவினையு நீங்கி நாநா
போகமுமுற் றானுலகம் புகுவர் மாதோ. (49)

மொழியுமுருத் திரதீர்த்தந் தன்னி லோது
முறைமூழ்கி யெம்பெருமான் முளரித் தாளில்
வழுவினறு மலரிலைதூய்த் தொழுது தூப
மணித்தீப முதலியற்ற மாட்டா ராயிற்
பழுதின்மறை முழுதுமுணர்ந் தறியா ஞானப்
பராபரனுக் கப்பரிசாற் பணிந்து பூசித்
தழிவில்பதம் பெறுவோரை மகிழ்ந்து போற்றி
லான்வெளிப்பட் டவர்க்குமுத்தி யளிப்ப னன்றே. (50)

பிரமனுக்கு வடதிசையி லுளது மேவிப்
படிந்தோர்க்கு மெய்ஞ்ஞானம், பயக்கு மாற்றாற்
றிருஞான தீர்த்தமெனும் பெயரா மந்தத்
தீர்த்தத்திற் கார்த்திகையா தித்த வாரத்
திரவியெழுங் காலையினின் மூழ்கி மேலோர்க்
கினியநறும் பாற்குடமீந் திட்டா ராயி
னரியகுட்ட நோய்முதலா மனைத்து நோயு
மகன்றுசிவன் சாலோக மடைவா ரன்றே. (51)

போதமீந் திடும்வாவி தன்னின் மூழ்கிப்
பொற்சபையி லீசனுக்கும் புவன மீன்ற
மாதினுக்கும் விதிமுறையாற் பூசை யாற்றில்
வாய்த்தபெரும் போகமெலா மளிப்ப ராமீண்
டோதியுவா வியின்மாசித் திங்கண் மேவு
மோங்குசிவ நிசியினில்வந் தொருகான் மூழ்கிற்
பூதலத்தி லெவரேனு நிமல னென்றே
புகல்வதல்லான் மனிதரெனப் புகலொ ணாதால். (52)

சிவநிசியின் ஞானவா வியினீ ராடிச்
  சேரிரவிற் றுயினீக்கிச் செழுமென் போதா
லவிர்கயிலைப் பெருமானை யாமந் தோறு
  மருச்சனைசெய் திரவியெழு மளவின் மீண்டும்
பவமாள வதின்மூழ்கிச் செம்பி னாற்செய்
  பாத்திரந்தண் ணிறைத்தியன்ற பசும்பொ னோடுந்
தவிராமந் திரமறையோர்க் கீந்து நீடுந்
  தருவனத்திற் கனகமணிச் சபையைச் சார்ந்து. (53)

ஆனந்த நடஞ்செய் தருளுங் கோமா
  னடிக்கமலந் தனைத்தரிசித் தன்பி னோடு
ஞானந்த ஞற்றுதித்தா லவர்க டம்மை
  நம்பன்மகிழ்ந் திடும்பசும்பொ னச்சி னோர்தாந்
தேனுண்டு மதுகரங்கள் கீதம் பாடுந்
  திருக்களரீ சனுக்கினிதிற் றிகழ்கண் ணுடி
தானல்கி லளகைநகர் புரக்கும் வேந்தன்
  றனைப்போன்மா நிதிபெறுவர் சரத மாமால. (54)

வேறு

திரண்டளிகள் வரிபாடுந் திருக்களரீ சனைப்பணியச் செல்கு வோமென், றிரண்டடிசென் றுலவர்க்கோ ரயமேத பலனுளதாம் யாவ ரேனும், விரைந்தொருமூன் றடிசென்றாற் சிவலோகம் பெறு வர்முற்று மேவிப் போந்தோர், பொருந்துபல னுரைக்கடங்கா தயன் றனக்கும் வரையறுத்துப் புகலலாமோ. (55)

பங்குனித்திங் களின்மருவு பவுரணையிற் கௌவியத்தாற் பாலாற் றேனாற், றிங்கள்புனை வேணியனுக் கபிடேக நன்பகலிற் செய்து மேன்மேற், பொங்கியெழுந் தார்வமிகக் கனிந்துருகி விழிவழிநீர் பொழிய மூன்றாந், தங்கரணம் புனிதமுறப் பன்முறைபோற் றிப்பணிந்து சாற்றுங் காலை. (56)

விடையிவருந் தருவனத்தின் மேவுசிவ னிலிங்கமதின் மேன் மேற் றேன்றாஞ், சடையுமா வரியுமுயர் தண்டினொடு குண்டி

லையுந தாங்கி முத்தி, யடையுமருந் தவர்கடமைக் காணலாந் தரி சனத்தா லகலாப் பாவந், தொடருமெழு வகைப்பவமுந் தொலைந் தலகி லெவரேனுஞ் சுத்தராவார். (57)

அற்றவருக் கருள்புரியுந் திருக்களரீ சனைப்பணிய வன்பான் மேவு, மற்றொருவ ருடன்றமது காரியத்தாற் பத்தியின்றி மருவிக் காண்ட, லுற்றவருஞ் சிவலோக பதம்பெறுவ ரளவிலற முளுற்றி னோரே, பெற்றிடுவ ரித்தலத்திற் சிவலிங்க தரிசனந்தான் பிறர்க் குண் டாமோ. (58)

இன்னனபன் னியவினைத்து மதிகாக சியப்பொருளா மிதனை மேலோய், நின்மலனுக் கன்புமிகு பத்தியும்வாய் மையுநின்பா னிகழ் தலாலே, முன்னியுரைத் தனனீச னினையென்று மிருக்கு முதன் மொழியு நூலிற், சொன்னபொருள் பிரமாண மிலையெனவு மிசைப்ப வர்க்குச் சொல்ல றீதாம் (59)

உரைத்தல்பழு தெனப்புகலு மங்கவர்கேட் டுண்மையுறா ரதனு லோவா, தருத்தியில்பா தகமடையு மவர்க்கடையும் பாதகம்போ லன்னோர்க் குன்னி, விரித்துமொழி பவர்க்கடையு மாணுக்கன் பிழை குரவன் மேற்றூங் திண்ணங், கருத்திலயிர்த் திடலதனுற் சிவனரு ளெய் திடுமவர்க்கே கழறல் வேண்டும். (60)

வேறு

இப்பெருங் காதைப் பெருமையுங் கேட்போர் முறைமையு மெமக் குமேல் விதியாற், செப்பிய குரவன் சொற்பரி சேயான் செப்பின னீயுமித் திறத்தாற், றப்பற வுரைத்து விளம்புதி யெவர்க்குஞ் சராசர முழுவதுந் தானு, மொப்பிலா வொருவன் றிருக்கதை கேட்போ ரொருமையோ டெழுபிறப் பொழிவார். (61)

வேறு

பத்தியின்றி யுணவினுக்காக் கிருமியெறி சிறகாளி பறவை யேனுஞ், சித்திதருந் திருக்களரீ சனைமுக்கால் வலம்வந்தாற் றேவர் தானு, முத்திதனை யேயடையு மையுறலென் றயன்பயந்த முனிவன்

டகடபச, சத்தியஞ்சத் தியமிதுசத் தியமென்றோ னந்தியெனுந் தவத்தின் மேலோன். (62)

அளிபறவை கிருமியொடு மறியாமலுண வினுக்கா வமலன்றன்னை,•வளையமுக்கால் வலம்வரினுஞ் சிவலோக மெய்துமென்றால் வானோர் போற்று, மொளிகொடரு வனப்பெருமை யிப்பரிசென் றுரைக்கவதேறோ வுலவா வின்பக், களிதருமிக் காதைதனைக் கேட்பவர்கற் போர்பகர்வோர் கயிலை சேர்வார். (63)

## கதாசாரம்

முன்னொரு காலத்திலே யொன்பது வருஷம் மழையின்மையால் உலகமெங்கும் பெரும் பஞ்சமுண்டாகி உயிர்களெல்லாம் பரிதபித்தன. தருமங்களெல்லாங் குறைந்தன். யாகாதிகளெல்லாமழிந்தன. தேவ பூசனை யொழிந்தன. இப்படி நிகழுங்காலத்திலே ஸ்ரீ பாரிசாதவனே சருடைய கோவிலிடிந்து திருவுருவங்கள் மறைந்து யானை,கரடி, புலி, சிங்க முதலிய துஷ்ட மிருகங்கள் வசிக்கும் கானகமாயின. அக்காலத்தில் "கள், காமம், கொலை,களவு, பொய்" என்னும் பஞ்சமாபாதகங்கள் குடிகொண்ட எண்ணிறந்த வேடர்கள் வேட்டையாடித் திரிந்தார்கள். அவர்களிலொருவன் பாரிசாத வனத்தையடைந்துஅங்குபுஷ்பித்திருந்த புஷ்பங்களைக்கொய்துதான் அணிந்துகொள்ளபலவிதமாலைகள்,தொடுத்தனன். தொடுத்து முடிந்தவுடன் "பூர்வபுண்ணியங் கைகூடியதால்", சிவலிங்க மறைந்திருப்பது தெரியாதவனாய் அந்தத் தானத்தில் வைத்தனன். அந்த மாலைகள் சிவலிங்கத்திருமுடியில் சாத்தியதாயிற்று. அவ்வேடன் அங்கு சிவாலயமிருந்ததும், அவ்வாலயம் சிதைந்ததும் சிவலிங்க மறைந்திருப்பதும், தான் வைத்த மாலைகள் அவ்விலிங்கத்தின் முடியிலிருப்பதும் அறியாமல் அம்மாலைகளை எடுத்துத் தானணிந்துகொண்டு வேட்டைக்குச் சென்றான். இவ்வேடன் பிறன்மனை நயத்தல், கட்குடித்தல், கொலைபுரிதல், திருடல், புலாலுண்ணல், பொய்யுரைத்தல் முதலிய அதிபாதகங்களைச் செய்துகொண்டு நூறு வருஷம் பூமியிலிருந்து உயிர்துறந்தான். இவன் வைத்தமாலைகள் இவ்விலிங்கப்பெருமான்மீது பட்ட புண்ணியத்தினால், மறுசென்மம்

கலிங்கதேசத்தில் "பூர்வவுணர்ச்சியோடு" இராஜகுமாரனுகப் பிறந்து மாலாதாரகனெனும் பெயர்பெற்று அரசனுயினன். இவ்வரசன் தான் பூர்வ சென்மத்தில் வேடனுகவிருந்ததும், அதிபாதகங்கள் புரிந்ததும், பாரிசாத வனத்திற் புகுந்ததும், அங்கு மலர்ந்திருந்த புஷ்பங்களைக் கொய்ததும், அவற்றை மாலைகளாகத்தொடுத்ததும், அம்மாலைகளையறியாமல்சிவலிங்கமிருக்குந்தானத்தில்வைத்ததும், அந்தமாலைகள் சிவலிங்கப்பெருமான் திருமுடியில் பட்டதும், அந்தப் புண்ணியத்தினுல்இராஜகுமாரனுகப் பிறந்ததும், மாலை வைத்ததனுல் மாலாதாரகனெனும் பெயர் பெற்றதுமுணர்ந்து தன்னுடைய நகரத்தில் சிவபெருமானுக்கு ஆலயம், துஜத்தம்பம், மஹாரதம், நந்தனவனம், வாவிகள் முதலியன அமைத்து நித்தியநைமித்திகங்களை * வழுவின்றி நடத்துவதோடு சிவனடியார்கள் வேண்டுவன கொடுத்துக்கொண்டு மனு நீதி முறைப்படி அரசு புரிந்தனன். இவ்விதம் அரசு புரியுநாளிலே அக்கினிக்கருப்பன், விசாலாக்கன், தருமகீர்த்தி, அலங்கிருதி யென்னும் நான்கு புத்திரர்களைப் பெற்ருன். அவர்களிலே மூத்தவனுக்குத் தன் அரசைக்கொடுத்து தான் காசியாத்திரை போகிறவன்போல் எட்டுக் கோடி திரவியமெடுத்துக்கொண்டு பாரிசாத வனத்தை யடைந்து காட்டைக் களைந்து பசியபொன்னினுல் சிற்சபை, விமானம், மதில், கோபுரம், மண்டபங்கள் முதலியன அமைத்து வேதோத்தமர்களை வரவழைத்து விதிப்படி பிரதிஷ்டை புரிந்து பூசனை, திருவிழா முதலியன செய்வித்துக்கொண்டிருந்து முத்தி பெற்ருன்.

ஓர் காலத்தில் இந்திராதி யெல்லாத் தேவர்களும், வியாதாாதி யெல்லா முனிவர்களும் தெற்கே செந்தாமரைக்கண் முதல் வடக்கே திருக்கோட்டூர் வரையில் திருக்களரைச்சுற்றி யெட்டுத்திக்கிலும் ஐந்து கூப்பிடு தூரஞ் சூழ்ந்திருந்து ஸ்ரீ பாரிசாத வனேசப்பெருமானைப் பூசித்ததுமன்னியில் எண்ணிறந்த சிவாலயங்களமைத்து தங்கள் தங்கள் பெயரால் தனித்தனி சிவலிங்கப் பிரதிஷ்டை புரிந்து பூசித்து முத்தி பெற்ருர்கள். திருக்களரிப் பெருமானைத் தரிசிக்க

* நித்திய நைமித்திகம்-பூசனையுந்திருவிழாவும்.

இரண்டடி சென்றால் அசுவமேதபலனை யடைவர்; மூன்றடி நடந்தால் சிவலோகம் பெறுவர்; முற்றுஞ் சென்று தரிசித்தோர் அடையும் பேற்றுக்களவில்லை. பங்குனிமாசம் பௌர்ணையன்று மத்தியானத்தில் சிவபெருமானுக்கு விதிப்படி அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், உபசாரம், அருச்சனை முதலியன செய்து வணங்கித் துதிக்கில் * சிவலிங்கப்பெருமான்மீது அத்தலத்தில் முத்தியடைந்தவர்களைக் காணலாம் சகல பாவங்களும் போம். திருக்களரிப்பெருமானைத் தரிசிக்கப் போகிறவர்களோடு சொந்தக் காரியமாகப் போய்த் தரிசித்தவர்களும் சிவலோக மடைவார்கள். அளவில்லாத தருமங்களைச் செய்தவர்களுக்குத்தான் திருக்களரிச் சிவலிங்க தரிசனங் கிடைக்கும். புழு, வண்டு, பறவை முதலியன உணவினுக்காகத் திருக்களரிப்பெருமானை மூன்றுதரம் வலம்வந்தாலும் முத்தியடையும். இது சத்தியம், சத்தியம், சத்தியம்.

திருச்சிற்றம்பலம்.

---

* இவ்விடத்திலிருக்க வேண்டிய விஷயங்கள் தீர்த்தமான்மியச சருக்கக் கதாசாரத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பு—பங்குனி மாசம் பௌர்ணையன்று மத்தியானத்தில் சிவலிங்கப்பெருமானுக்கு விதிப்படி அபிஷேகாதிகள் செய்வித்து இராத்திரிக்குச் சந்திரசேகரப் பெருமானை இடபவாகனத்தின்மீது வீதியில் எழுந்தருளி வரச்செய்வது மிக்க விசேஷமாம்.

# ஆறாவது

## மகாரதன் புத்திரப்பேற்றுச் சருக்கம்

திருச்சிற்றம்பலம்.

இன்னங் கனக தருவனத்தி லெய்தி யிறைவர் கதிபெற்றோர்
தன்மை யுரையென் றயன்பயந்த சனற்கு மார முனிகேட்ப
மின்னும் பவளத் தொளிததும்பும் வேணிப் பெருமான் விரைக்கமலப்
பொன்னங் கழற்றா ளிணைகருதி நந்தி யீச னிவைபுகன்றான். (1)

### வேறு

தவப்பயனி லாமனித ராயினுந்தற் பரன்சரிதை தன்னைக்கேட்கி, லவித்தையினு லிறுமாந்து பாசவலை யிடையகப்பட் டழுங்கா வண்ணம், புவிக்குளர னடியாரின் மேலாகிச் சிவகதியிற் புகுவார் நாளுஞ், செவிக்கமுதா மிக்காதை யுண்மையுறக் கேட்டியெனுச் செப்ப லுற்றான். (2)

### வேறு

பானலுந்தமிழ் சிறந்தது மேலறு பதுநான்
கான நல்விளை யாட்டினைக் கூடலி லமலன்
றானு வப்புடன் புரிந்திட வுயர்ந்தது தலைமை
நானி லத்தினு மிகுந்தது பாண்டிநன் னூடு. (3)

அந்த நாட்டினை மனுமுறை நாடொறு மளிப்போன்
வெந்தி றற்சிலை மகாரத னெனும்பெயர் வேந்தன்
சிந்து ரம்பரி தேரொடுந் தானையிற் சிறந்தோன்
முந்தும் வென்றியி லிவனிக ருளர்கொலோ மொழியில். (4)

சேறியு மின்னுயி ரோம்பலிற் செங்கண்மா லொப்பா
னறிவி லாயிரம் பஃறலைச் சேடனை யனையா
னெறியி னீந்திடு மீகையிற் றருவினை நிகர்ப்பான்
மறுவி னீதியின் மனுவெனத் தகுவனம் மன்னன். (5)

சைவ நூனெறித் தகைமைசான் றறவன்ற தனைப்போன்
மையின் மாநிதித் தலைவனல் லறத்திறம் வழாதோன்
பொய்யுந் தீமையும் புன்மையுங் கீழ்மையும் போக்கி
மெய்யு நன்மையு மொழுக்கமு மேற்கொளும் விறலோன். (6)

அன்ன காவல னரும்பெறற் புதல்வாற் றழுங்கிப்
பன்னு மோர்பதி னாயிரம் வருடமாப் பரிவுற்
றின்னல் கூர்ந்துத னமைச்சனுந் தன்மகிழ்த் திலையமீ
தென்ன காரண மெனத்தனி புலம்பலுற் றியம்பும். (7)

தேவர் பூசனை முறைமையிற் றிரிந்ததோ சிவனு
ரேவ லாளர்தா மின்னலுற் றார்கொலோ விகழாத்
தாவில் வேதிய ரறப்புறங் குறைந்ததோ தகவான்
மேவு நற்குடி யிறைமுறை பிழைத்ததோ விளம்பில். (8)

இனைய செய்தியி லெப்பிழை யுலகில்யா மிழைத்தோ
மனைய தீதென விளம்புதி யமைச்சனீ யெனலு
நினைவின் மேல்வரும் வினையெலாஞ் சூழ்ச்சியா னிகழ்த்துந்
துனியில் கேள்விய னரசனைத் தொழுதிது சொல்வான். (9)

ஐய நீமனு முறையளித் தாயறந் திறம்புஞ்
செய்கை யிற்சிறி தாயினும் புரிந்திலை திறத்தா
லெய்த முன்னைநா ளியற்றிய புண்ணிய மிகத்தி
லுய்ய நல்லற மியைந்திடு மதலையா யுதிக்கும். (10)

ஆய வாற்றினன் மகப்பெறும் புண்ணிய* மதனை
நீயி யற்றிலை முற்பவத் தளப்பரு நிதியாற்
றூய தானமற் றியாவையு மாற்றினை தொன்று
மேய வப்பய னுனுதித் தனையுல கிறையாய். (11)

நயங்கு நன்மணித் திரள்களுந் தமனியக் குவையு
முயர்ந்த தொல்குல மகளிரு மறுவகை யுறுப்பு
மியைந்த செல்வமு மெய்தினை மகப்பெற வின்னு
முயன்றி லாயற மினியஃ தியற்றுதன் முறைமையாம். (12)

## வேறு

எனவெடுத் துரைக்குந் தன்ம கீர்த்தியை யினிதி னோக்கி
யினிமகப் பெறுதற் கேய்ந்த நல்லற மிசைப்பா யென்னப்
பனிமதிக் கவிகை வேந்தன் பகர்தலும் பரிவான் மன்னன்
றனதடி வணங்கி மேலா மந்திரத் தலைவன் சொல்வான். (13)

பூந்திரை விரிக்குந் தெய்வப் பொன்னிநன் னாட்டிற் போத
மீந்திடும் பாரிசாத வனமுள ததனி லெய்தின்
மாந்தர்வா னவர்க ளாவார் மதிபுனை மகேச னோடு
மேந்தெழிற் றலமத் தானத் திணைபிறி தில்லை மன்னே (14)

அந்தநற் றலத்தி னீசென் றனந்த நட்ன மாடு
மிந்துசே கரனுக் கேற்ற வபிடேக மினிதி னாற்றி
மந்திர விதியான் மிக்க நிவேதனம் புரிந்து மாறில்
சிந்தைநைந் துருகி யன்பாற் றிருந்தவே பூசை செய்து. (15)

அலகின்மா தவர்கள் போற்று மந்நக ரதனி லாய்ந்த
புலமிகு மறைவல் லோர்க்குப் புரிவொடுந் தான நல்கிற்
பலநனி யுளதா மந்தப் பலத்தினா லுனக்குப் பார்மேற்
றலைமைசான் றறிவிற் றூய தனையரு முளரா மன்னே. (16)

புதல்வரைப் பெறுவ தொன்றோ புரிசடை முடியிற் பொன்னு
ரிதழியும் பிறையும் வேய்ந்த வெம்பிரான் வெளிப்பட் டடியார்க்கு
மதிசய மளிக்கு மேலாம் வரமுமாங் களிப்ப னீதென்
மதியினா லுணர்ந்து கூறு மாற்றமன் றதனுங் கேட்டி. (17)

புனைமணி வயிரத் தோளாய் முன்னர்யான் புதல்வ ரின்றி
மனனுறுந் துயரால் வாடு மெல்லையின் மன்றக ளாய்ந்த
வினைவருந் தவத்தின் மிக்கோ னிரையிதழ்க் கமலத் தண்ண
லனையவன் சுமந்தென் றோது மரும்பெயர் முனிவன் வந்தான். (18)

பாரத கண்டந் தன்னின் மகிழ்வொடும் பரமன் வைகுந்
பெரியதலங்கள் பேசி வகைதமாச் செப்பு வாசப்

பேரொழிற் றலங்கள் யாவுஞ் சரித்தவப் பெரியோன் வந்தெ
ஞரஞர் நோக்கி யென்னே வாருலங் கோடி யென்றான்.
என்றவ னுரைப்பக் கேட்டாங் கிப்பரி சியம்பி னேற்கு
மன்றலுங் கமலப் புத்தே ணிகர்த்திடு மறைவ லாள
னன்றெனக் கியம்பி ஞனித் திறமெலா மதனைக் கேளாச்
சென்றனன் பாரி சாதத் தெய்வமா நகரி னுற்றேன். (20)
உற்றியான் சுமந்து மேனு ஞரைத்திடும் படியே யாற்றிப்
பெற்றனென் மகப்பே றென்னும் பெருவா மதனைப் பேணி
யிற்றைநா ளளவு நீகேட் டிலையென வியம்பி லேன்யான்
பற்றறக் கேளா முன்னம் பகர்ந்திடி லுண்மை யாமோ. (21)

. வேறு

மாதவ மியற்றல் பூசனை புரிதன் மாமறை மந்திரஞ் செபித்த, றீதக றெய்வ நதியொடு தீர்த்த மாடுதல் சிறப்புறுந் தான, மீதனல் லொழுக்க மாற்றிட லுணர்த வின்னன யாவையு மியல்பான், மேதக வுரைக்கு முண்மையா லன்றிப் பயன்றரா வெனமறை விளம்பும். (22)

சீலமொடு கனக மிந்தன மிவற்றிற் றெய்வமு மிலமறை யனைத்து, மலகில்பல் லெழுத்தா வியன்றதே யன்றி யதிற்பய னிலை யென வறையுங், கலர்தமக் கவர்கள் கருதிய படித்தாங் கண்குறும் பயனுறு ததனு, னலனுறு மொருமை காரண முலகி னல்லறங் கட கெலா நுவிலில். (23)

அனந்தகா லமுநன் மந்திர மொருமை யகன்றவ ராயினு மன்ற யின், மனங்கவர் பயனுங் கவர்பெறா சின்னுண் மருவரு முண்மை யான் மகிழ்ந்து, நினைந்தியம் பினரா லளப்பரும் பயன்க ணிகழ்ந்திடு மாதலா னிருப, நனந்தலை யுலகிற் றெய்வமு மறையு முண்மையாற் பயனெலா நல்கும். (24)

இன்னண முரைத்த பொருளலா லொருமை யாய்மைய தெண்ணிநீ யியற்றி, லன்னநல் லறமும் புதல்வரும் பயனு மடைந்திடு மாரு மென் றமைசசன், றன்னமர் காத லொடும்பகன் றிலங்கக் ககவன

விலையெனத் தாளப், பன்மணிமவுலிப் பார்த்திபன் றரும கீர்த்தி
டை மகிழ்ந்தனன் பரிவால். (25)

மகிழ்ந்துநல் லமைச்சனெனும்தரு வனந்தான் மருவுதற் கியைந்
துமா நிதியு, மிகுந்தனன் பொருளும் பலபல கொணர்ந்து நால்வகைச்
சேனையு மேவப், புகுந்தனன் விரைவிற் றும்பிர நதியிற் போந்துபொங்
கலைப்புனன் மூழ்கி,யகங்களிந் தளவி றனமீந் தப்பாற் போயின னரச
ரின் மிக்கான். (26)

சென்றவன் கருப்பா ரணியமுங் கடந்து சிறந்ததீத் திகிரியிற்
சிவணி, யொன்றிய நிதிகண் மறையவர்க் குதவி யோதன மறுசுவை
யோடு, மன்றுவே தியர்கள் பலர்தமக் கினிதி னளித்தறம் பலபல வாற்
றிப், பொன்றிக ழெயில்சூழ் மதுரைமா நகரிற் போந்தனன் புரவலன்
பரிவால். (27)

கூடலின் மருவிக் கொடுவினை யகற்றுங் குலவுபொற் றமரை,ந் தடநீ
ராடியன் றரனுர் மண்சுமந் திணைத்த வருங்கரை யோங்கிய நதியிற்
பீடுறப் படிந்து சுந்தர நடன மியற்றிய பிரான்பதம் வணங்கி
யீடினற் றன மளவற வுதவிக் கந்தமால் வரையிடை யெழுந்தான். ()

கந்தமால் வரையிற் போந்துபின் பிடப கிரியினிற் காவல னெய்தி
யந்தர கங்கை யெனும்பெய ருடைய தீர்த்தத்தில் விதிமுறை யாடி
முந்துறு தான மறையவர்க் குதவி முதன்மையாந் திரிசிரேச் சுரத்தில்
வந்திப வனமுற் றும்பிரா ரணிய மாநகர் கடந்தனன் மாதோ. (29)

கடந்துசெல் வடிவேற் காவலன் பீம வனத்தொடு கல்வடா ரணிய,
மடர்ந்திடும் பலாச வனத்தொடு முயர்ந்த வக்கினீச் சுரமருந் தவர்
கண், மிடைந்திடுஞ் சந்த்ர ரேகைவான் மகிழுஞ் சிரக்கண்டேச்
சுரம்லர் விரியுந், தடம்பயி லன்னேச் சுரமுயர் வசிட்டேச் சுரமெ
னும் பதியெலாந் தணந்தான். (30)

தணந்துபி னரிவ ராகவாக் கியமுந் தண்பயில் காசிகா வனமு
மணங்கமழ் வில்வ வனமுயர் வேத்ர வனத்தொடு விகற்பகா ரதமு
மிணங்கிய நயனப் பிரதமும் புகழுந் திருவிரா மீச்சுர மிவற்றோ
டணங்கறும் பிரம ரேச்சுர மயூர நாதமா நகருமுற றகன்றான். (31)

அப்பதி யனைத்துங் கடந்துசெல் பொழுது மந்நகர் தோறுமவ் வரசன், செப்பிய செல்வ மியாந்தற குணத்தோற சிவனையு முமையை யுந் திறத்தா, லொப்பில்பூ சனைசெய் தன்றியாங் ககலா னன்னவ னவையெலா மொருவி, விப்பிரர் குலவு முனிநதிக் கரையின் மேவி னன் ... னா விழைவால். (32)

முனிநதிக் கரையி லெய்தியந் நதியின் முறைமையான் மூழ்கி யாங் கியைந்த, பனிமதிச் சடையோன் மகிழுயிராப தேச்சுர னகரினைப் பரவித், தனிமுதற் பரனோ டுமையையும் விதியாற் றக்கபூ சனைபுரிந் தரசன், முனமுறத் தொழுது பாரிசா தவன மாநகர் மருவினன் வணங்கி. (33)

தருவன மருவி மகாரதன் பரிவாற் றனயரைப் பெறுவது விரும்பி யருளொடு முனிசெ யுலோக்கிய மெனுந்தீர்த் தத்திடை மூழ்கியப் புனலாற, றெறிவருந் தேவர் மகிழ்தருப் பணமுஞ் செய்துபின் றிலோதகம் பிதிர்கட், குரிமையின் வழங்கிப் பிண்டமும் வகுத்தாங் கந்தணர்க் கனமுத லுதவி. (34)

தென்புலத் தவர்க்கத் திறத்தினன் மகிழ்ச்சி செய்துபின் மகே சனைத் தெரிசித், தன்புற வணங்கப் போதரு நெறியி லரன்றிருச் சந் நிதி யணுகி, மன்பெருந் தவங்கள் புரியுமார்க் கண்டன் மூறைபயின் றிருந்தன னவனைத், தன்றிரு முடியால் வணங்கின னரசன் றவ முனிக் கலைவனு மகிழ்ந்தான். (35)

மகிழ்ந்துமா தவனு மிறைவனுக் காசி வழங்கிநீ யிவண்வரும் வழியா, துகந்துறை யெனலு மிவன்கருத் தமைதி யுரைத்தலு முயர் முனி கேட்டு, மிகும்புக ழரசன் மனத்தினை யுணர்ந்து விரதமொன் றுரைப்பனவ் விரதந், தகும்பரி சியற்றி லருமக வளிக்கு மெனச் சொலிப் பின்னருஞ் சாற்றும். (36)

உலகினி லிசைபெற் றோங்கிய தீர்த்த முலோக்கிய தீர்த்தமாங் குவப்பாய்ப், புலரியின் மூழ்கி மனிவியி னொடுநீ தீர்த்தமேற் கரை யினிற் பொருந்தி, யிலகிய கனக பாத்திர மதனிற் சருக்கரை பழ

ரெடா வின்பா, னலனுறக் கலந்திட் டடிசிலோர் பாதி நிவேதித்து நம்பனுக் கன்பால். (37)

மற்றொரு பாதி யோடுபூ சணிக்காய் பாகிலை வளத்தினுக் கியைந்த, நற்பொருளமைத்து மறையவர் தமக்கு நல்கிநான் பரனருள் மிகவும், பெற்றிட வேண்டு மெனமுறை பாவிப் பின்னுகன் றனக்கபிடேக, முற்றவா றயர்ந்து நிவேதனம் புரிந்து மறையவர்க் கோதனமுதவி. (38)

## வேறு

விடமுமிழ் தாரை வெள்வேல் வேந்தநீ யின்ன வாற்றான்
முடிவுற விரத மாற்றின் முக்கண்மா முதல்வற் காளாய்ப்
படிபுகழ் குணமுந் தூய வொழுக்கமு மருவிப் பாங்காம்
வடிவுறு சிறுவர் தம்மை யெம்பிரான் மகிழ்ந்து நல்கும். (39)

தானமுந் தவமு நோன்பும் சுற்றமுந் திரமு மீசற்
கானபூ சனையு மிந்த நற்றலத் தாற்றி னோரேல்
மேன்மையாம் பதங்க ளெல்லாம் விரைவினி லவர்க்கு மேவும்
நானுவல் விரத மின்னே நயந்துநீ புரிதி யென்றான். (40)

மிருகண்ட முனிவன் மைந்த னின்னன் விளம்பக் கேட்டு
புரவலன் மனைவி யோடு முலோக்கியப் புனலின் மூழ்கி
யுரியபா லடிசி லட்டாங் கிலக்கம்பூ சணிக்கா யோடு
பரவுதக் கனைய டைக்காய் பலபல மறையோர்க் கீந்தான். (41)

மீண்டுமவ் வரசன் றன்ம கீர்த்தியோ டினிதின் வெவ்வே
றுண்டுபஃ றான நல்கி யானந்த நடேசற் கன்பின்
வேண்டுறுமு பூசை செய்து மறையவர் விளம்பு மாசி
பூண்டுவே யிறைவன் சின்னுட் டருவனத் துறையும் போழ்தில். (42)

மல்கிரு ளொக்கும் வெய்யோ னெனக்கதிர் வயங்க வெல்லாப்
பல்விலக் கணமு மேய்ந்த பாலரோ ரிருவர் தம்மை
வெல்படை யிறைவன் றேவி பயந்தன ணமகிழ்ந்து வேந்த
னெல்லையிற் றிரங்க னல்கி ராடின னுவகை பூண்டான். (43)

தண்புனல் படிந்து வேந்தன் சதுர்மறை யவர்க்குத தான
மெண்பயி லியுத மான நிதியொடுத் தீச னார்க்கும்
பண்பினா லபிடே கங்க ணிவேதனம் பரிவி னாற்றிக்
கண்கவர் மணிகள் வேய்ந்த கலன்பல வுதவிப் பின்னும். (44)

காமர்வெண் டானை மாலைக் கவிகையோ ரிரண்டும் வீசுஞ்
சாமரை யிரண்டு நல்கித் தமனிய நியுத மீந்து
தேமலி பாரி சாத வனத்தான் றிருத்தா ளுன்னித்
தாமவேற் றடக்கை வேந்தன் றலத்தினை வியப்ப தானான். (45)

வயங்கெழிற் புதல்வர்க் கேய்ந்த மங்கல வினைக ளாற்றி
வியந்திடு மரசன் பின்னர் மேவுமோர் பதினொ ருநாட்
டயங்குமுன் பிறந்த சேய்க்குச் சிவதத்த னெனும்பேர் சாத்தி
யியைந்திடு தேவ தத்த னெனும்பெய ரிளையோற் கீந்தான். (46)

வேதியர் புதிய நாம வினைமுதற் கருமமெல்லாந்
தீதற முடிப்பப் பாலர் திருமுக நோக்கி மன்னன்
மாதவந் தருமஞ் செல்வ மாட்சி முழுதும் பெற்றேன்
யாதெனக் கரிய தென்னா மகிழ்ந்தன னின்பங் கூர்ந்தான். (47)

இன்புறு மரசர் கோமா னிறைவனுக் கியைந்த பூசை
யன்பினாற் புரிந்து தானா ளரும்பெற னூட்டி லேந்தார்
வன்கலிற் சூலந் தீட்டி மகேசனுக் குதவி மாலா
லென்புநெக் குருக வேத்திப் பன்முறை யிறைஞ்சி னானே. (48)

பலமுறை வணங்கி யேத்திப் பரமனை விடைகொண் டப்பாற்
புலமிகு மார்க்கண் டன்பாற் போந்தடி பணிந்து போற்றி
யலகின்மா தவர்கண் மற்றோர் பலரையும் விடைகொண்
டலனுறு பாண்டி நாட்டின் மகாரத னண்ண லுற்றான். (49)

அரும்பெறற் றவத்தாற் பெற்ற பாலர்நல் லமைச்ச ரோடும்
பெருங்கடற் றானை சூழ் மகாரதப் பெயரின் வேந்தன்
றிருந்திய மனத்தை யீசன் பாலுற விருத்தித் தேறல்
பொருந்திய மலர்க ளுறுந் தன்றிரு நாட்டிற் புக்கான். (50)

மகவினை வேண்டி நோற்று மகாரதன் பெறுமா போல
மிகுபுகழ்ப் பாரி சாத வனத்திடை மேவி மேலாந்
தொகுமறை விரதம் பூசை தூயநல் லறங்கள் சின்னாட்
டகவொடும் புரியில் வல்லோர் சார்வரும் பயன்கள் சாரும். (51)

வேண்டிரைப் புவனத் தோங்கு மித்தல மன்றி வேறு
மெண்டகு மவற்றிற் றான மந்திர மீசற் கேற்ற
தொண்டுறும் பூசை தூய விரதங்க டொலைவில் பன்னாட்
கொண்டியற் றிடினும் போகப் பயன்மறு பவத்திற் கூட்டும். (52)

ஆதலா லுலகின் மேலா மித்தல மதனை வேதப்
போதனும் புகழு நாளும் புண்டரீ கக்கண் மாலுங்
காதலாற் றுதிக்கு மற்றைக் கடவுளர் கருதுந் தோறுந்
தீதகல் பாரி சாத வனமெனத் தெரிப்பர் திண்ணம். (53)

மகாரதன் மகவு வேண்டி வான்றவ மிழைத்த காதை
பகாரமாய்ப் பகர்வோர் கேட்போர் பயன்வகுத் துரைப்போ ரன்னோர்
தகாநெறி தவிர்ந்து நோற்ற தவத்தினைப் புரிவோர் யாரு
மகாவரு மழலைத் தீஞ்சொ லன்மகப் பெறுவர் மாதோ. (54)

நல்லறத் துறையு ளாய நவமணி மன்ற நாநாப்
பல்பெரும் போக மோக்கம் பயக்குமோர் கணத்தின் பாதிச்
செல்பொழு தேனு மிந்தத் திருநகர் வைகிற் றீய
வல்லல்போ மனுக வொண்ணு மனோரத மனைத்து நல்கும். (55)

இத்தல மான்மி யத்தை யொருதரங் கேட்கில் யார்க்கும்
பத்தியுஞ் சிவனுக் கன்பும் புனிதமும் பயக்கு மூவா
முத்தியு மளிக்குங் கோடி சனனத்தின் முயன்ற பாவ
மெத்தனை யெனினு நீங்கு மெய்துதற் கரிய துண்டோ. (56)

உயர்ந்ததீர்த் தங்க ளோடித் தலத்தினை யொருகாற் சூழ்ந்தா
லியைந்தபூ வலம்வந் தாற்போன் றெய்திடும் பயன்க ளீறில்
பயன்றரு பகிரண் டத்திற் றலமெலாம் பணிந்து பார்மே
லியங்கிய தீர்த்தம் யாவு மாடிய பலனு மெய்தும். (57)

ஆயவித் தலத்திற் செம்பொன் முட்டையி னளவை யேனு
மீயிலோர் சுவண மேரு வுதவிய பலன்வந் தெய்துந்
தூயன மொருவர்க் கீந்தாற் கோடிநான் மறையோர் தூய்த்து
மேயநற் பலமாஞ் செய்யுந் தருமமு மினைய வாமால். (58)

வான்றவ மீசற் கீந்த பூசனை மகிழுந் தான
மேன்றவிச் செயல்க ளெல்லா மித்தலத் தியற்றி னோரே
லான்றதோர் கோடி யாக விருத்தியா யடையும் போகஞ்
சான்றவ ருருவக்கு மேலா முத்தியு மளிக்குஞ் சால்பால். (59)

இன்னன வியம்பி மேலா மித்தல மதனி லெய்து
நன்முனி வரர்கள் யாருஞ் சிவனரு ணயந்தோர் நாளு
மன்னிய சிவனுக் கன்பாய் வழிபடுந் திறத்தோர் நாளுந்
தன்னிகர் ருருத்தி ராக்க மாலையுந் தரிக்குந் தூயோர். (60)

அனையநன் முனிவர் நாளு மத்தலத் தமர்ந்தோ ரெம்மா
லினையவென் றுரைக்க லாகா ரித்தலப் பெருமை யிந்தப்
புனையுரை கேட்போர்க் குள்ளம் புனிதமாம் பவமுந் தூய்தா
நனிபுரி கருமந் தூய்தா ஞானமு நண்ண லாமால். (61)

எனப்பல வினைத்து நந்தி யீசனுங் கியம்பக் கேட்டுச்
சனற்குமா ரன்மு னோர்வ மீக்கொளத் தகவு பூண்டு
மனக்கினி யுளதோ துன்ப மிலையென மகிழ்ந்து நம்பன்
றனக்கிணை யாய நந்தி தாண்மலர் வணங்கி னானல். (62)

## வேறு

நந்தி யீசனு மயன்றரு சனற்குமா ரனுநயந் துரையாடி
முந்து சங்கையாற் பயனுறப் புகன்றது முதுமறை யொருநான்கு
மந்த மில்புரா ணங்களு மிருதியு மகனுறத் தொழற்காய
விந்த மாக்கதை மான்மிய மளவறுத் தியம்புதற் கரிதாமால். (63)

இனைய மாக்கதை யுரைப்பவர் கேட்பவ ரீங்கிவர் தமையேத்திக்
கனிவு கூர்ந்தருள் சிறப்பவர் யாவருங் கயிலைமால் வரைமேவித்

துனியி லைம்பெரும பூதமு மாமுதற் சுரர்களும் பிறத்தோன்றி
யனலு லாவிய காலைப்பு மழிவில்பே ரின்பவீ டடைவாரால். (64)

## கதாசாரம்

என்னாட்டினுஞ் சிறந்தது பாண்டிவளநாடு. அந்நாட்டில் மதுரையில் சிவபெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல் புரிந்தனர். அந்த நாட்டை ஓர் காலத்தில் மஹாரத பாண்டியனென்னுமோர் அரசன் ஆண்டான். அவ்வரசன் தேர், யானை, குதிரை, காலாள் என்னும் நால்வகைச் சேனைகளை யுடையவன். இவன் உயிர்களைக் காப்பதில் விஷ்ணுவையும், அறிவில் ஆதிசேஷனையும், ஈகையில் கற்பகத் தருவையும், நீதியில் மனுவையும், செல்வத்தில் குபேரனையும், நெறியில் சைவசமயத்தையும் ஒப்பானவன். "இருக்கு எசுர் சாமம் அதர்வணம்" என்னும் வேதங்களோதுவார்க் குணவளித்தல், "சைவம் வாமம் காளாமுகம் மாவிரதம் பாசுபதம் சைவம்" என்னும் அறு சமயத்தார்க் குண்டியுதவல், பசுவுக்குப் புல்லளித்தல், நோயாளிகளுக்கிடமமைத்தல், சிறையிலிருப்போர்களுக் கன்னங் கொடுத்தல், பிச்சை யிடல், தின்பண்டங் கொடுத்தல், அநாதைகளுக்கன்னம் போடல், மருத்துவச்சி வைத்துப் பிரசவங்கள் பார்த்தல், குழந்தைகளை வளர்த்தல், குழந்தைகளுக்குப் பாலூட்டல், அநாதப்பிணங்களைச் சுடுதல், அநாதைகளுக்கு வஸ்திரங்கொடுத்தல், சுண்ணும்பு கொடுத்தல், நோய்க்கு மருந்துகொடுத்தல், வண்ணான் வைத்து வஸ்திரங்கள் தோய்த்துக் கொடுத்தல், நாவிதன் வைத்து க்ஷவரஞ் செய்வித்தல், பெண்களுக்குக் கண்ணாடி கொடுத்தல், பெண்களுக்குக் காதோலை கொடுத்தல், கண்ணோய்க்கு மருந்துதவல், தலைக்கெண்ணெய் வார்த்தல், பெண்போகம் புரிவித்தல், பிறர்துன்பம் நீக்கல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல், மடங் கட்டுவித்தல், குளம் வெட்டுவித்தல், மரங்கள் வைத்து வளர்த்து நிழலுண்டாக்கல், பசு தன் தினைவு போக்கிக் கொள்ள மந்தையில் கல் நாட்டுவித்தல், மிருகங்களுக் குணவு கொடுத்தல், பொலிகாளை விடுதல், விலைகொடுத் துயிர்காத்தல், கன்னிகையை இறைமகக் கொடுத்தல், கோவிற் கட்டுவித்தல், சுமைதாங்கி

கட்டுவித்தல், சாலை போடுவித்தல், நந்தனவனம் வைத்தல் முதலிய தருமங்கள் தவறுதவன். அன்னிதானம், "பசு பூமி எள் பொன் வெள்ளி வெல்லம் நெல் உப்பு நெய் வஸ்திரம்" இப்பத்துங் கொடுப்பதாகிய தசதானம், "தீபம் புத்தகம் மணி தண்டம் வஸ்திரம் தண்ணீர்" இவ்வாறுங் கொடுப்பதாகிய ஷட்தானம் முதலிய தானங்களளிப்பவன். பொய், தீமை, புன்மை, கீழ்மை இவற்றைப் போக்கினவன். உண்மை, நன்மை, ஒழுக்கம் இவைகள் மேற்கொண்டவன். இவ்வரசன் தனக்குப் பதினாயிரவருஷம் புத்திரப்பேறின்மையால் தனது மந்திரியாகிய தன்மகீர்த்தியைப் பார்த்து எனக்குப் புத்திரோற்பத்தி யில்லாமற் போனது யாது காரணம்? தேவபூசனை குறைந்ததோ? சிவனடியார்களுக்குத் துன்பமுண்டாயிற்றோ? தருமங்கள் குறைந்ததோ? அதிக வரி வாங்கப்பட்டதோ? இக்குற்றங்களிலே எக்குற்றம் யான் செய்தேன். அதைச் சொல்லவேண்டுமென்றான். தன்மகீர்த்தி அரசனை வணங்கி அரசே! தாங்கள் யாதொரு குற்றமும் செய்யவில்லை. முதல் சென்மத்தில் செய்த புண்ணியமே மறுசென்மத்தில் மகவாபுதிக்கும். தாங்கள் முன் சென்மத்தில் மகப்பேறுக்குரிய புண்ணியஞ் செய்யாமையால் மகப்பேறுண்டாகவில்லை. அளவிலாத திரவியம் தானமளித்தமையால் இராஜாவாகப் பிறந்து இரத்தினக் குவைகளையும், பொற்குவைகளையும், குலமகளிரையும், (அமைச்சு, அரண், குடி, கூழ், நட்பு, படையென்னும்) அறுவகை யுறுப்புகளையும் பெற்றீர்கள்; இனி மகப்பேற்றுக்குரிய புண்ணியஞ் செய்தால் மகப்பேறுண்டாகுமென்றான். அரசன் தன்மகீர்த்தியைப் பார்த்து மகப்பேற்றுக்குரிய தருமங்களைச் சொல்லென்றான். தன்மகீர்த்தி அரசனைத் தொழுது அரசே! தெய்வத்தன்மை பொருந்திய காவிரி நதி பாயும் சோழவள நாட்டிலே, பாரிசாதவனமென்று ஓர் சிவதலமிருக்கின்றது. அத்தலத்திலே சபாநாயகப் பெருமான் திருவாச முனிவருக்காக ஆநந்தத்தாண்டவமாடியருளினர். அத்தலத்திற்கிணையான தலம் உலகிலில்லை. அங்கு தரிசிக்கப்போகு மனிதர்கள் தேவர்களேயாவர். தாங்கள் மனையாளோடு அத்தலத்திற்குச் சென்று, சந்நிதியிலிருக்கிற திருவாச தீர்த்தத்தில் மூழ்கி, சிவபெருமானுக்கு விதிப்படி அபிஷே

களை செய்வித்து, பிராமணோத்தமர்களுக்குத் தானமளிக்கில் விசேஷ பலனும் அப்பலனால் மகப்பேறுமுண்டாகும், சிவபெருமான் வெளிப்பட்டு வேண்டிய வரமளிப்பர். இஃது நானாகச் சொன்ன தன்று, நான் மகப்பேறில்லாமல் வியாகுலப்பட்டுக்கொண்டிருந்தேன், அக்காலத்திலே சுமந்து முனிவரென்பவர் சிவதல யாத்திரை செய்து என் கிரகத்துக்கு வந்தார். நான் அவரை வரவேற்று உபசரித்தேன். அவர் என் முகத்தைப் பார்த்து உனக்கு என்ன வியாகுலமென்றார். நான் எனக்கு மகப்பேறில்லாத வியாகுலந்தவிர வேறொன்று மில்லை யென்றேன். அத்தபோநிதி என்மேல் கிருபை கூர்ந்து சோழ வள நாட்டிலே பாரிசாதவனமென்று ஒரு சிவதலமிருக்கிறது. நீ உன் மனையாளோடு அத்தலத்திற்குப் போய் அங்கு சந்நிதியிலே யிருக்கிற துருவாச தீர்த்தத்திலே மூழ்கி சிவபெருமானுக்கு விதிப் படி அபிஷேகாதிகள் செய்வித்து வேதோத்தமர்களுக்குத் தான மளித்தால் மகப்பேறுண்டாகுமென்றார்; நான் அந்தப்படியே செய்து மகப்பேற்றை யடைந்தேன். தாங்கள் இதுவரையில் என்னைக் கேட் காமையால் நான் சொல்லவில்லை, கேட்காதிருக்கும்போது சொன்னால் அஃது உண்மையாகத் தோன்றாது ; தவம் புரிதல், பூசை செய்தல், பஞ்சாக்கரஞ்செபித்தல், யாத்திரைபோதல், தானமளித்தல், நல் லொழுக்கமுணர்தல் இவையெல்லாம் நம்பினாலன்றிப் பயன்தரா; கல்லிலும், செம்பிலும், கட்டையிலும் தெய்வமிருக்குமா ? தெய்வம் இல்லவே யில்லை ; வேதங்களெல்லாம் பலவெழுத்தா லெழுதியது அதில் பிரயோசனமில்லை யென்று நினைப்பவர்களுக்கு அவர்கள் கருதியபடியே தோன்றும். கொஞ்சங்கூட பயனுண்டாகாது ; ஒருமை யாக நம்பினால் எல்லாப் பிரயோசனங்களுமுண்டாகும்; நல்ல மந்திரங் களை ஒருமையில்லாமல் அநேக காலஞ்செபித்தாலும் சிறிது பயன்கூட உண்டாகா, உண்மையாக நம்பி சிறிதுகாலஞ் செபித்தாலும் அளத்தற் கரிய பயனுண்டாகும் ; தெய்வமு மந்திரமும் உண்மையாக நம்பினால் எல்லாவிதப் பேற்றையு மெளிதிலளிக்கும் ; ஆதலால், இப்போது நான் சொல்லியவற்றையெல்லாம் உண்மையாக நம்பிச் செய்தால் மகப்பேறுண்டாகுமென்றான்.மஹாரத பாண்டியன் சந்தோஷமடைந்து

வேண்டிய திரவியமெடுத்துக்கொண்டு தன்ம கீர்த்தியோடு கசம், ரதம், துரகம், பதாதி யென்னும் நால்வகைச் சேனைகள் சூழப் புறப்பட்டு தாமிரபருணி நதியை யடைந்து அந்நதியில் மூழ்கி அளவற்ற அந்த ணோத்தமர்களுக்குத் தானமளித்து அங்கிருந்து கருப்பாரணியம், தீர்த்தி கிரி, மதுரை, கந்தமால்வரை, இடபகிரி, திரிசிரேச்சுரம், இபவனம், ஆமிராரணியம், பீமவனம், வடாரணியம், பலாசவனம், அக்கினீச்சுரம், சந்த்ரரேகை, சிரகண்டேச்சுரம், அன்னேச்சுரம், வசிட்டேச்சுரம், அரிவராகவாக்கியம், காசிகாவனம், வில்வவனம், வேத்ரவனம், விகற் புகழூதம், மயூரம், நயனப்பிரதம், திருவிராமீச்சுரம், பிரமரேச்சுரம், அயிராபதேச்சுரம் முதலிய தலங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள புண்ணிய தீர்த்தங்களிலே மூழ்கி எண்ணிக்கையில்லாத விப்பிரோத்த மர்களுக்கு (கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்பபு, துவர்ப்பு, கார்ப்பு என்னும் அறுசுவை நிறைந்த) அன்னதானம், (சந்தனம், புஷ்பம், வெற்றிலை பாக்கு என்பவற்றோடு கூடிய) சுவர்ணதானம் முதலியன கொடுத்து சிவபெருமானுக்கு விதிப்படி பூசனை புரிவித்து பாரிசாத வனத்தை யடைந்தான். இவ்விதம் பாரிசாதவனமடைந்த மஹாரத பாண்டியன் அங்கு சந்நிதியிலிருக்கிற துருவாச தீர்த்தத்தில் மூழ்கி தேவதருப்பணஞ் செய்து, பிதிர்களுக்கு எள் நீர் வார்த்துப் பிண்டம் போட்டு அந்தணோத்தமர்களுக்கு அறுசுவை நிறைந்த நால்வகையுணவு களையும் அவரவர் பிரீதிப்படி யளித்து, சுவர்ணதானஞ்செய்து சிவ பெருமானைத் தரிசிக்கச் சென்றனன். இங்ஙனம் போகும்போது சிவபெருமானுடைய திருச்சந்நிதானத்திலே தவம்புரிந்துகொண்டு வேதமோதிய மார்க்கண்டேய முனிவரைக் கண்டு அவருடைய திரு வடிகளிலே விழுந்து நமஸ்கரித்தான். மார்க்கண்டேய முனிவர் மஹா ரத பாண்டியனை ஆசீர்வதித்து நீ இங்குவந்த காரணம் யாதென? வினவினர். மஹாரத பாண்டியன் வணங்கி சுவாமீ! எனக்குப் புத்தி ரப்பேறில்லை, அஃதை விரும்பி இங்கு வந்தேனென்றான். மார்க்கண் டேயர் மஹாரத பாண்டியனைப் பார்த்து நீ மனையாளோடு காலையில் துருவாச தீர்த்தத்தில் மூழ்கி அந்தத் தீர்த்தத்தின் மேல் கரையிலிரு ந்து தங்கப்பாத்திரத்தில் வாழைப்பழம், சர்க்கரை, பசுவின்பால் இம்

மூன்றையுங் கலந்து வைத்து பாதியைச் சிவபெருமானுக்கு நிவேதனம் புரிந்து மற்றப்பாதியோடு பூசணிக்காய், வெற்றிலைபாக்கு, தக்ஷிணை இவைகள் வைத்து வேதோத்தமர்களுக்குக் கொடுத்து நான் சிவபெருமானுடைய திருவருளைப் பெறவேண்டுமென வணங்கி ஆசீர்வதிக்கப்பெற்று சிவபெருமானுக்கு விதிப்படி அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், உபசாரம், அருச்சனை முதலியன செய்வித்து மறையோருக்கன்ன மளிப்பாயாகில் சிவபக்தியும், நற்குணமும், நல்லொழுக்கமும், சிறந்த அழகும் பொருந்திய புதல்வரை சபாநாயகப் பெருமானளிப்பார்; தனம், தருமம், தவம், விரதம், செபம், பூசை இவைகள் இத்தலத்தில் செய்யின் எல்லாவிதப்பேறு மெளிதிலுண்டாகுமென்றார். இவ்விதம் மார்க்கண்டேயர் சொல்லக்கேட்ட மஹாரத பாண்டியன் காலையில் மனையாளோடு துருவாசதீர்த்தத்தில் மூழ்கி அத்தீர்த்தத்தின் மேல்கரையில் சிவலிங்கப்பெருமானுடைய திருச்சந்நிதியிலிருந்து பசுவின்பால், வாழைப்பழம், சர்க்கரை இம்மூன்றையுங் கலந்து தங்கப்பாத்திரத்தில் வைத்து பாதியைச் சிவபெருமானுக்கு நிவேதனம் பண்ணி மற்றப் பாதியோடு இலட்சம் பூசணிக்காய், வெற்றிலை பாக்கு, தக்ஷிணை இவைகள் வைத்து இலக்ஷம் பிராமணோத்தமர்களுக்குக் கொடுத்து அவர்களுடைய திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்து அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று சிவபெருமானுக்கு விதிப்படி பூசனை செய்வித்துக்கொண்டு பாரிசாதவனத்திலேயே சில காலமிருந்தனன். இப்படியிருக்கிற காலத்திலே அவ்வரசனுடைய மனைவி கற்பவதியாகி பத்தாவதுமாதம் இரண்டு புதல்வர்களைப் பெற்றாள். மஹாரத பாண்டியன் ஸ்நானஞ் செய்து அந்தணர்களுக்கு இலக்ஷம் பொன் தானமளித்து சிவபெருமானுக்கு விதிப்படி அபிஷேகாதிகள் செய்வித்து கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மாகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பனவாகிய ஒன்பது வகை இரத்தினங்களாலும் அமைத்த பலவித ஆபரணங்கள், இரண்டு முத்துமாலைகள், இலக்ஷம் பொன் இவைகள் கொடுத்து சபாநாயகப் பெருமானுடைய குஞ்சிதபாதத்தைத் தியானித்து மகிழ்ச்சி யடைந்தான்.

பின்பு புதல்வருக்குச் செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாஞ் செய்து பதினோராநாள் மூத்தவனுக்குச் சிவதத்தனென்றும் இளையவனுக்குத் தேவதத்தனென்றும் பெயரிட்டு சிவபெருமானுக்கு விதிப்படி பூசனை புரிவித்துத் தன்னுடைய நாட்டில் ஐந்தூர் தானமளித்து (கற்களிலே சூலமெழுதி அதன்கீழ் அந்தக் கிராமங்களின் பெயர்களையும் எல்லைகளையுங் கண்டு சோழநாட்டில் பாரிசாதவனத்திலே திருக்கோயில்கொண்டு விளங்காநின்ற ஸ்ரீபாரிசாதவனேஸ்வரருக்குத் தானமளித்தேனென்றெழுதி அந்தக் கிராமங்களில் புதைக்கச் செய்து) சிவபெருமானை என்பு நெக்குநெக்குருக மயிர் சிலிர்ப்ப ஆநந்த அருவி பொழிய ஏத்தித் துதித்து பின்பு மார்க்கண்டேயர் முதலிய மாதவர்களையும் வேதியர்களையும் தொழுது விடைபெற்றுக்கொண்டு தன் புதல்வர்களோடு அமைச்சர்களும் நால்வகைச் சேனைகளும் சூழ பாண்டிநாடு சென்றான். இத்தலத்தில், தவம், செபம், தானம், தருமம், பூசை இவைகள் செய்தால் அவற்றின் பலன்களை இந்தச் சென்மத்திலேயே எளிதிலடையலாம்; மற்றத் தலங்களில் செய்தால் மறு சென்மத்திலே தான் சித்தியாகும். உலகிலுள்ள தலங்களில் இந்தத் தலந்தான் சிறந்த தலம்; இதைப் பிரமவிஷ்ணுக்களும் துதிப்பர். மஹாரத பாண்டியனுடைய சரித்த்தைச் சொல்பவரும் கேட்பவரும் மகப்பேற்றை யுடைவர். பாரிசாதவனத்தில் நான்கு நிமிஷம் வசித்தால் போக மோக்ஷங்களுண்டாம்; இரண்டு நிமிஷம் வசித்தால் அல்லலெல்லாம் நீங்கும் நினைத்தவை சித்தியாகும். இத்தல மான்மியத்தை ஒருதரம் கேட்கில் பக்தியும் முத்தியுமுண்டாம்; கோடி சென்மத்தில் செய்த பாவம் போம். இத்தலத்தைத் தீர்த்தங்களோடு ஒருதரஞ் சுற்றிவந்தால்பூமியை வலம் வந்த பலனையும் சர்வ தீர்த்தங்களில் மூழ்கிய பலனையுமடைவர். இத்தலத்தில் ஒரு முட்டையளவு பொன் தானஞ்செய்தவர் மேருமலையளவு பொன் தானஞ்செய்த பலனையடைவர். இங்கு ஒருவருக்கு அன்னம் போட்டால் கோடி மறையோருக்களித்த பலனுண்டாகும். இந்தத் தலத்தில் தவம், செபம், தானம், தருமம்,பூசை இவைகள் செய்யின் ஒன்று கோடியாகும்.

திருச்சிற்றம்பலம்.

குறிப்பு.—புத்திரோற்பத்தியைக் கருதியவர்கள் இத்தலத்தில் வேம்பும் அரசும் வைத்து வளர்த்து விவாகம் புரிவித்தல், நாகப்பிர திஷ்டை செய்வித்தல், விநாயக விக்கிரக பூஜை செய்தல், விநாயக விக்கிரக தானஞ் செய்தல், சுப்பிரமணிய விக்கிரக பூஜை செய்தல், சுப்பிர மண்ய விக்கிரக தானங்கொடுத்தல், (அபரபக்கம் பிரதமை முதல் "கோழிமுட்டையளவு" பதினாலுகவள மன்னத்தினின்று தினமொவ்வொரு கவளமாகக் குறைத்துப் புசித்து அமாவாசையில் உபவாச மிருந்து பூர்வபக்கம் பிரதமை முதல் ஒருகவள மன்னத்தினின்று தினமொவ்வொரு கவளமாகப் பௌர்ணிமிவரையில் கூட்டிப் புசித்து முடிப்பதும்; அல்லது பூர்வபக்கம் பிரதமை முதல் ஒரு கவள மன்னத்திலிருந்து தினமொவ்வொரு கவளமாகப் பௌர்ணிவரையில் கூட்டியும் அபரபக்கம் பிரதமை முதல் தினமொவ்வொரு கவளமாகக் குறைத்தும் புசித்து அமாவாசையிலுபவாசமிருந்து முடிப்பதுமாகிய) சாந்திராயண விரத மனுஷ்டித்தல், புறங்கை கட்டிக்கொண்டு வாயாலுண்ணல், சிரங்கையரிசி பொங்கி யுண்ணல், இடது கையாற் புசித்தல், மெழுகிய நிலத்திலன்னமிட்டுப் புசித்தல், அரசு பிரதக்ஷிணஞ் செய்தல், கோவிலுக்குள் ஓரிடத்தில் மூன்று கல்லால் அடுப்பு வைத்து விட்டுப் போய் குழந்தை பிறந்தவுடன் வந்து அவ்வடுப்பைக் கலைத்து விடல், குழந்தை பிறந்தால் தேவியார் திருச்சந்நிதியில் தொட்டிலும் பிள்ளையும் வைப்பதாய் பிரார்த்தித்துக்கொண்டுபோய் குழந்தை பிறந்தவுடன் அவ்விதஞ் செய்தல் முதலிய நோன்புகளியற்றில் எளிதில் மகப்பேறுண்டாம.

## ஏழாவது

## தீர்த்தமான்மியச் சருக்கம்

திருச்சிற்றம்பலம்

தவம்புரி சனற்கு மாரன் றருவனத் தகைமை யெல்லா
நவின்றன னந்தி யீச னவிலலு நயந்து கேட்டுப்
பவங்கெட மகிழும் போழ்திற் பாங்கரி னிருந்த சூத
னுவந்திடு சனற்கு மாரற் கின்னன வுரைக்க லுற்றான். (1)

தருவனத் தியல்புந் தீர்த்தத் தன்மையுஞ் சாற்று ஞானத்
திருநடம் பரமன் மேனாட் செய்தது நந்தி யீசன்
பரிவொடு முரைப்பக் கேட்டா யாயினும் பண்பால் யானும்
புரிவுற வுரைப்ப னென்னாப் பின்னரும் புகல்வ தானான். (2)

அத்தலப் பெருமை யெல்லா நந்திமா தவனுக் கல்லா
லெத்தலத் தினிலும் பாங்கா வியம்புதற் கொருவ ருண்டோ
வித்துணை யெனவத் தானத் தியல்பெலா மிசைக்க மாட்டேன்
பத்தியாற் சிறிது தீர்த்தப் பரிசினை யுரைப்பே னென்றான். (3)

என்றவ னுரைத்த லோடு மீரேழு புவியு மீந்த
மன்றலங் கமலப் புத்தே டருமுனி மகிழ்ச்சி பொங்கித்
துன்றிய தவத்தின் மிக்க சூதனைத் துதித்து நோக்கி
யின்றெனக் குரைப்பா யென்னச் சூதனு மியம்ப லுற்றான். (4)

### வேறு

தங்கொளி விளங்கும் பாரிசா தவனத் தெம்பிரான் [illegible] முன்னர், மங்கலப்படிவ மாயது நாளு மன்னிய நல்லறக் கடவு, டிங்களிற் றயங்குந் திருமுக மலரச் சிறந்தினி திருப்பதோர் தீர்த்த, மங்கண்வா னமரர் யாவருந் துதிக்கு முலோக்கிய மதன்பெயரறையில். (5)

அப்பெருந் தீர்த்த தனனின்பா ஞாலத் தெய்திய மன்பனை ந்து, மெப்பொழு துவந்து மூழ்கினும் போகத் தோடுவீட் டின்ப

மும் பயக்கு, மிப்பரி சுடைய தாயினுங் கால விசேடமுண் டெண்ணிய பலன்க, டப்பறத் தருவ தவையிவை யெனவே சாற்றுவன் கேட்டிமா தவத்தோய். (6)

தேளில்வா னிரவி யெய்திய மதியிற் றினகரன் பெயருடைத் தினத்திற், கோளறும் புனித வான்றிரு மெழுக்குந் தூர்வையுங் கரத் திடைக் கொணர்ந்து, மூளுமன் பெழக்கா யத்திரி மறையை மொழிந்துலோக் கியப்புனன் மூழ்கி, ஞளுமெப் பவத்து மியற்றிய பாவ மகற்றிமேற் கதியினை நல்கும். (7)

மூன்புகன் மதியிற் றிங்கள்வா ரத்தி னன்பக லிடைமுனி தீர்த் தத், தன்புற மருவிச் சோமமந் திரமுச் சரித்துநீ ராடிநீ றணிந்து, பொன்புனை யுருத்தி ராக்கமா லிகையப் பூண்டுபஞ்சாக்கர மறையை, நன்பொருள் விதிநூன் முறையினுற் செபித்து நம்பனைத் துதியினு னவின்று. (8)

உளபொருட் கியன்ற தக்கனை யடைகா யிருதுகி லொருதுகி லேனு,மளப்பிலா னந்த நாடகம் புரியு மமலனுக் கீதென மறையோர், கொளக்கொடுத் தீசன் றனக்குமம் பிகைக்கு மியன்றவான் பொருளி னுற் குளிரத்,திளைத்தபி டேக மாட்டியா யிரமிந் தீவர மலர்த்தொடை (9)

அறுசுவை யடிசி னிவேதன மாற்றி யானந்த நாடக மாடுங், கறை மிடற் றெந்தை பூங்கழல் வணங்கிக் காதர வாதரம் பெருக, முறை முறை பரவின் மறிதிரைப் புவன முழுவது முடிபுனைந் தளித்து, மறு விலபல் போக ராகர்ந்துபி னெவர்க்கு மருவரு முத்தியில் வாழ்வார்.(10)

மொழியுமத் தினத்தி லீசனுக் கபிடே கந்நிவே தனம்விதி முறையால், வழுவறப் புரியி லவர்க்கொரு கோடி சிவநிசிப் பெரும் பயன் மருவு, மழுவலா னடியார்க் கனம்புன லடைகாய் வழங்கிலத் தினத்திலோர் கோடி, விழுமியோர்க் களித்த பலனுறு மீது சத்தியஞ் சத்தியம் விளம்பில். (11)

சூரபியி னறுநெய் யாயினு மெள்ளின் றயிலமே யாயினுஞ் சொரிந்து, மருவுறு லேந்தா லொருதிரி யிணக்கி மீணங்கமழ் திருக் களர் மகேசற், கிருளற விமைப்ப விருசுட ரேனு மொருசுட ராயினு மேற்றிற், பானரு ளுறுவ ரவர்பிதிர் மரபிற் கோடிமன் னுயிர் பெறும் பதவி. (12)

வருதகர் மதியிற் பௌர்ணைத் திதியி லிரவியின் மந்திரஞ் செபித் துப், பொருவிலந் தெழுத்தும் புகன்றான் றனக்குத் தென்றிசை மருங்கில்வான் புகழு, முருகனு லயத்தி லாடகத் தான முதுமறை யவர்களுக் குதவிப், புரிவினு லயில்வே லிறைவனுக் கபிடே கஞ் செய்து புதுமலர் புனைந்து. (13)

இன்னமு தனைய வாலமா யடிசில் விதிமுறை நிவேதன மியற்றி நன்னறும் தூப முதலுப சாரத் தொடுநயந் தருச்சனை செய்து, துன் னியாங் கவன்றாள் போற்றிடிற் றனையர் மாதர்மற் றுறும்பொரு ளோடு, முன்னரும் போக நுகர்ந்துபின் பிறவா மொழிதரு முத்தியே பெறுவார். (14)

பாதுகஞ் செருப்புக் கவிகைசாந் தாற்றி பரமனுக் குவப்புறப் பாவித் தீதகல் சிவநே சருக்களிப் பவர்பின் சனனமு மரணமு மகல்வா ராதவன் விடையில் வந்துறு மதியி லிந்துவு மிரவியு மணுகு மேதகு தினத்தி லிருவினை கடியு முருத்திர தீர்த்தத்தின் மேவி. (15)

சொல்லுமந் திரத்தின் முதன்மையா வுரைக்குந் தூமக்கினே ருத் திர மென்னு, நல்லதொன் மறையை நவின்றுநீ ராடி நகைமதித் கண்ணிநம் பனுக்கும், வல்லிய முரித்தோன் றனதடி யவர்க்கும் வெண்ணிறக் கோவினை வழங்கிற், பல்வினைப் பிறவி தீர்ந் துருத்திரர் கள் பதவியிற் செல்குவர் பரிங்கா. (16)

ஆவினை யளிக்க வியன்றிடா தாயி லப்பெருந் தீர்த்தத்தி லாடிக், கோவினை வழங்க வாங்கதோ திலையேற் கொடுத்திட வாக்ஞென் றறைந்து, மேவிடா தென்னில் வாரகனிற் பாதி யீந்திட வெண்ணிறப் பசுவொன், றீவதற் கிணையாப் பயன்றருஞ் சுரபி யுலகமு மெய்தலா மினிதின். (17)

மாசியாந் திங்க ளொடுபுரட் டாதி யாடிமார் கழியெனு மதியி, லீசனுக் கிடபம் பிதிர்களுட் குவகை யெய்திட விதிமுறை யீந்தோர், வீசிய விடையின் மெய்ம்மயி ரொன்றுக் குகமொரு கோடியா மிருநா, ளூசமில் கயிலைப் பெரும்பத மடைந்து நம்பனுக் கன்பரா யிருப்பார்.()

விதந்துரைத் திடுமார் கழித்திரு மதியி னடேசனுக் கருமறை விதியாற், பொதிந்திடு நறைமென் சந்தனக் குழம்பா னனியபி டேகமும் புரியின், மதம்படு கபோலக் கரியுரி போர்த்த மழுவலான் மகிழ்ந்துதான் மருவி, வதிந்திடுங் கயிலைப் பெரும்பத மருளி முத்தியு மன்பினல் வழங்கும். (19)

ஞானவா வியினின் மாகமா மதியி னண்ணிய பரணிநாண் மருவிப், பானுவின் புதல்வ னருமறை மொழிந்து படிந்துவேய்ப் பாத்திர மெனினு, மானவேத் திரத்தாற் செய்கல மெனினு மட்கல மாயினு மமைத்து, மேனிறைத் துழுந்து மூவிரு குறுணி விமலனுக் குவகை யால் வழங்கி. (20)

பொருந்திய பொருளாற் றருவனத் திறைக்கு மலைமக டனக்கு நன் புனித, வருந்தவர் பணிய நடம்பயின் மகேசன் றனக்குமர்ச்சனை யயர்ந்து, சுரும்பருண் டுவக்குஞ் சண்பக நறும்பூத் தொடுத்தணிந் திடினமன் றூரக்கும், பெரும்பயம் பிணியற் றிரவியு மதியு முளபகல் விருத்தியைப் பெறுவர். (21)

குறையிலா தமைந்த நாடொறு முன்னர்க் கூறிய தீர்த்தத்தின் மூழ்கி, யறுசுவைப் பொருளான் மகாளயஞ் சிராத்த மாற்றிடி லளப் பருஞ் செல்வஞ், செறிவுறு மந்நாட் டிலோதகம் பிண்டம் விசேட மாச் செய்திடிற் கயையை, யுறுபய னினுமோர் கோடியின் மடங் காப் பிதிரரோ டுயர்கதி யடைவார். (22)

சிவநிசி விரத முண்டிருந்த திருந்து கன்னலின் சாறுசெந் தேற, லவியொடு நறும்பா னனியபி டேகஞ் செய்தம லன்றனக் கந்நாட், புவியிடை விளைந்த தானியப் பொருளை மனையறம் பூண்டரன் பொற்றூட், குவுகைபெற் றுயர்ந்தோர்க் குதவிலோர் கோடி குலத் தொடுங் கயிலையி லுறைவார். (23)

சாத்திரம் பயின்றோ ராதுல ரநாதர் சான்றவர் தாமொருமூன்று, நேத்திரத் தமல னடியவ ராயி னிகரிலித் தலத்திலாங் கவர்க்குக், கேத்திரந் தனதா னியத்துடன் சமைத்த கிருகமீந் திடினிதி கிளர்ந்து, பூத்திடுஞ் செல்வ மணிமுடி யரச ராகியிப் பூதலம் புரப்பார். (24)

நிமலன்மெய் யடியார்க் கித்தல மதனி னிகரிலா நன்கலை யளிப்போ, ரமலனு ளுலக மெய்திவீற் றிருப்பா ராய்ந்தபைந் தேறலுண் டறுகாற் றமரவண் டிமிரு நறுமல ரவிழு நந்தன வனம்வகுத் தவர்ஞர், முமையவள் கணவன் றனெனப் படும்வே றுவமையாங் கவர்க் கிலை யுலகில். (25)

கோழுமலர் கமழுந் திருக்களர் மருங்கிற் குரோசமைந் துட்படக் குறுகிச், செழுநிழற் பந்தர் வைத்தவர் வாவித் தீம்புன னல்கி னோர் சிறப்பாற், றொழுமதி யுலகிற் றெள்ளமு தருந்திச் சுரர்களாய் வாழ்குவர் தொலைப், பழமறை புகழு மித்தலப் பெருமை யுரைப் பவர் யாவரோ பரிசால். (26)

மாதொரு பாக னமர்திருக் களருண் மறுவறு தானமீந் திடு வோர், மேதினி முழுதும் புரப்பர்நற் புனித ராகுவர் வேறுவேறெடுத் தாங், கோதினு மடங்கா தித்தலப் பெருமை யெமக்குரைப் பரிதெனா வுணர்வாற், சூதமா முனிவ னிவையெலாஞ் சனற்குமாரற்கு மகிழ் வுறச் சொன்னான். (27)

மாமறைக் கிழவன் றருமுனி சூத மாதவன் மாற்றிய வனைத்துங், காமுற வுவந்து கேட்டலு மகிழ்ந்து காதர வாதரம் பெருகி, யூர்முறை யுணர்ந்து திருக்களர்ப் புராணத் தொன்மையு மாங்கதன் சிறப்பு, நீமொழிந் தருளென் றருந்தவன் கேட்பச் சூதனுங் கேளென நிகழ்த் தும். (28)

மறைதெரி வியாதன் முதலிய முனிவ ரோதிய மூவறு வகையா வறைதரு புராணங் களிற்பவு டியமென் றுங்கொரு புராணமுண் டதனிற், செறியுமுத் தரகாண் டத்தினோர் சரிற் கேத்திர கண்டத்தின்

சேர்ந்து, பிறிவருங் காதை முதற்றரு வனத்தை விதந்துதான் பேசிய வாறும். (29)

பாரிசா தவன வரவெனுங் கதையும் பண்ணவர் பணிந்திடப் பரமன், சீரிய நடனஞ் செய்திடு மாறு முத்திபஞ் சாக்கரச் சிறப்புந், தேர்வுறு விதமுந் தெரித்திடு மாறுந் தீம்புனற் றீர்த்தநா மத்தின், காரண மொழியு மகாரதன் றவத்தாற் காதலர் தமைப்பெறு மாறும்.

ஏய்ந்தவிச் சருக்க மாறு முன் னந்தி யீசனிற் கியம்பிய வீற்றில், வாய்ந்தவிக் காதை யான்புக றீர்த்த மான்மியச் சருக்கமேழ் வகையா, மாய்ந்தவிச் சருக்க மப்பெருங் காண்டத் தாதியி லருபதோ டிருபான், வேய்ந்தவேழ் சருக்க மாதியா வுரைக்குந் தகையதிக் கதையென விரிப்பார். (31)

இன்னநற் காதை யொருமுறை முழுதுங் கேட்கல ராயினு மித னிற், பன்னுமோர் சருக்க மாயினு மதனிற் பாதியா யினுமொரு பாட, லென்னினு மாங்கோர் பதமுமை யேனும் பதத்தினி லோ ரெழுத் தேனு, முன்னுறக் கேட்போ ரளப்பரும் போக நுகர்ந்துபின் முத்தியை யடைவார் (32)

இந்நநற் கதையை மகிழ்ந்து புத்தகத்தி லெழுதினோ ரதனிலோ ரெழுத்துக், கந்தமில் கோடி யுகமரி பிரமர் புகழ்திருக் கயிலையை யடைவார், முந்துறும் புராண முழுவது மளந்த முறையினிற் றீட்டி யாங் களிப்ப, வந்துறும் பலனு மிதனிலே டொன்று வண்ரந்தடி யார்கட்கு வழங்கில். (33)

கொலைபுரிந் திடினும் பிறர்மனைப் போக நுகரினுங் குரவரைப் புரவா, தலைதுயர் செயினு மயலவர் பொருளைக் கவரினு மதியினை யகற்று, புலைமது வினிதி னருந்தினும் பகராப் பொய்ம்மொழி யுரைக்கினு மொருகா, லுலகெலாம் புகழு மிக்கதை யுரைக்கி லனைவ யகன் றுயர்கதி யுறுவார். (34)

எனவிவை யனைத்து மளவுறு புராண மியம்பினுஞ் சூதமா முனிவ னளைவிரி கமல நறுமல ரமளி நான்முகத் தெம்பிரா னல்குந்

துனியறு சனற்கு மாரமா முனிக்குச் சொல்லினன் சூழுறக் கேட்டே
யினியமா தவங்கள் புரிசனற் குமார னெய்தரு முத்தியையடைந்தான்.

### வேறு

வானவர் வாழ்க முத்தீ மறையவர் மகிழ்ந்து வாழ்க
வானின மிகவும் வாழ்க வலைபுனல் சொரிக நாளுந்
தேனிமி ரலங்கல் வேந்தன் செழுமணிக் குடைமீ தோங்க
நானிலத் திலகுஞ் சைவ நன்னெறி சிறக்க மாதோ. (36)

## கதாசாரம்

திருக்களரி யெல்லைக்குள் ஒரு சிறிய குழியில் நீரிருந்தாலும், அஃதுலகத்திலுள்ள தீர்த்தங்க ளெல்லாவற்றிலு மேலான தீர்த்த மாகும்

1. ஆலயத்தின் கீழ்பால் கீழவீதிக்கு மேல்பால் (சந்நிதியில்) ஓர் தீர்த்தமிருக்கிறது. அஃது துருவாசருண்டுபண்ணியது. துருவாச தீர்த்தம், லோகாலோக்கிய தீர்த்தம், உலோக்கிய தீர்த்தம், முனி தீர்த்தம், திருக்குள தீர்த்தமென்னும் பெயர்களை யுடையது. இதில் தினம் மூழ்குவோர் போகங்கள் யாவுமடைவர். சித்திரை மாசப் பிறப்பின் முன்னெட்டு நாழிகையும் பின்னெட்டு நாழிகையும்கொண்ட காலமாகிய சித்திரை விஷு,ஐப்பசி மாசப்பிறப்பிற்கு முன்னெட்டு நாழிகையும் பின்னெட்டு நாழிகையுங் கொண்ட காலமாகிய ஐப்பசி விஷு, ஆடிமாசம் பிறத்தற்குமுன் பதினாறு நாழிகை கொண்ட காலமாகிய தக்ஷிணாயனம், தைமாசம் பிறந்தபின் பதினாறு நாழிகை கொண்ட காலமாகிய உத்தராயணம் (சங்கராந்தி), வைகாசி ஆவணி கார்த்திகை மாசி இந்த மாதங்கள் பிறத்தலின் முன் பதினாறு நாழிகை கொண்ட காலமாகிய விஷ்ணுபதி, ஆனி புரட்டாசி மார்கழி பங்குனி இம்மாதங்கள்பிறந்தபின்பதினாறுநாழிகைகொண்ட காலமாகியஷடசீதிமுகம்,சூரியன்-இராகு கேதுக்களால் பீடை யடையுங்காலமாகிய சூரிய கிரகணந் தொடங்காலம், சந்திரன்-இராகு கேதுக்களால் பீடை யடையுங் காலமாகிய சந்திர கிரகணம் விடுங்காலம், சந்திர சூரியர்

கூடுங் காலமாகிய அமாவாசை, மார்கழி மாசம் பூர்வபக்கஞ் சஷ்டியும் சதையமும் விதிபாதமுங் கூடுங்காலமாகிய மஹாவிதிபாதம், தைமாதம் ஞாயிற்றுக்கிழமையும் அமாவாசையும் திருவோணமும் விதிபாதமுங் கூடுங்காலமாகிய அர்த்தோதயம், தைமாசம் திங்கட்கிழமையும் அமாவாசையும்திருவோணமும் விதிபாதமுங் கூடுங்காலமாகிய மஹோதயம் இப் புண்ணிய காலங்களிலே மூழ்கி தனக்கிஷ்டமான பொருளேனும், பூமியேனும், தனமேனும், தானியமேனுந், தானஞ்செய்வோர் சிவபெருமானேயாவார். பிண்டம் போட்டு பசுதானங்கொடுத்து எள்நீர்வார்க்கின் பிதிர்க்கள் மகிழ்ச்சியடைவர். கார்த்திகை மாசம் ஞாயிற்றுக்கிழமையில் பசுவின் சாணத்தினால் பிள்ளையாரமைத்து அறுகு சூட்டி பாக்கு வெற்றிலை, வாழைப்பழம், தேங்காய்மூடி இவைகள் வைத்து தூபதீபங் காட்டி காயத்திரி செபம் செய்து அப்பிள்ளையாரைக் கையிற்கொண்டு மூழ்குவோர் சகல பாவங்களும் நீங்கி முத்தியடைவர். கார்த்திகை மாதம் திங்கட்கிழமை மத்தியானத்தில் சோமமந்திரஞ்செபித்து மூழ்கி விபூதி யணிந்து, உருத்திராக்கந்தரித்து, பஞ்சாக்கரஞ் செபித்து, சிவபெருமானைத்துதித்து, வஸ்திரம் வெற்றிலைபாக்கு தக்ஷிணை இவைகளை ஈது சிவபெருமானுக்கென மறையோருக்களித்து; சிவபெருமானுக்கும் தேவியாருக்கும் விதிப்படி அபிஷேகஞ்செய்து, ஆயிரங்குவளை மலர்மாலை சாத்தி, அறுசுவை யடிசில் நிவேதனம் புரிந்து, தூபதீப முதலிய உபசாரஞ் செய்து, அருச்சனைபண்ணி அன்பும் அச்சமும் பெருக வணங்கித் துதிப்போர் அரசனாகி யுலகமெங்குஞ் செங்கோல் செலுத்தி எல்லாப் போகங்களையு மனுபவித்து முத்தியடைவர். கார்த்திகை மாசம் திங்கட்கிழமையில் சிவபெருமானுக்கு விதிப்படி அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், உபசாரம், அருச்சனை இவைகள் செய்து வணங்குவோர் கோடி சிவராத்திரி விரத மனுஷ்டித்த பலனை யடைவர். அன்றைய தினம் ஒரு சிவனடியார்க்கு அன்னம் தண்ணீர் வெற்றிலை பாக்கு இவை கொடுக்கில் கோடி சிவனடியார்க்களித்த பலனுண்டாமிது சத்தியம் சத்தியம். அன்று சிவபெருமான் தேவியார் இவர்களுடைய திருச்சந்நிதிகளில் பசு நெய் அல்லது எள் நெய்யில் ஐந்துநூலால் திரிபோட்டு ஒரு விளக்கு ஏற்றுவோர் சிவபெருமானுடைய திருவரு

ளைப் பெறுவர். அவர் பிதிர் மரபில் கோடியுயிர் பதவி யடைபும். சித்திரை மாசம் பௌரணையில் சூரிய மந்திரஞ் செபித்து மூழ்கி, விபூதி ருத்திராக்க மணிந்து, பஞ்சாக்கரஞ் செபித்து, சபாநாயகப் பெருமான் சந்நிதியில் சண்முகப் பெருமானுக்கு எதிரில் ஸ்வர்ண தானங் கொடுத்து, சண்முகக் கடவுளுக்கு விதிப்படி அபிஷேகஞ் செய்து, புதிய மலர்மாலை சாத்தி, அறுசுவை அன்னம் நிவேதனம் புரிந்து, தூபமுதலிய உபசாரஞ் செய்து, அருச்சனை பண்ணி வணங்குவோர் சகல போகங்களையும் அனுபவித்து, பிறவா முத்தி யடைவர். அறுசுவை நிறைந்த நால்வகை யுணவுகள், கனிவர்க்கங்கள், கௌபீனம், வஸ்திரம், பட்டைப்பை, உருத்திராக்கம், குடை, விசிறி, செருப்பு, பாதுகம், ஆசனப்பலகை, இரத்தினக்கம்பளம், மான்றோல், புலித்தோல், திருவோடு, சாஸ்திரப் புத்தகங்கள் என்பவைகளில் தன் சத்திக்கியன்றதைச் சிவனடியாருக்குக் கொடுப்போர் செனனமரணம் நீங்குவர்.

2. ஆலயத்தின் தென்புறம் தெற்கு வீதிக்கு வடபுறம் நடுவில் ஓர் தீர்த்த மிருக்கிறது. அஃது பிரமதேவருண்டுபண்ணியது; பிரம தீர்த்தம், சிந்தாமணி தீர்த்தமென்னும் பெயர்களை யுடையது. இதில் தினம் மூழ்குவோர் விரும்பியதை யடைவர். எண்ணிறந்த முனிவர்கள் மூழ்கி முத்திபெற்றார்கள்.

3. கோவிலின் மேல்பக்கம் மேலவீதிக்குக் கீழ்பக்கம் மத்தியில் ஓர் தீர்த்தமிருக்கிறது. அஃது பதினொரு ருத்திரர்கள் உண்டாக்கியது; உருத்திர தீர்த்தம், கமலவாவியென்னும் பெயர்களையுடையது. இதில் கற்பாந்தத்தில் அநேக உருத்திரர்கள் மூழ்கி உருத்திரலோக மடைந்தார்கள். தின மூழ்குவோர் போக மோக்ஷங்களை யடைவர். மாசிமாசம் (சூரிய) உதயத்தில் ஸ்நானஞ்செய்து, பிராமணோத்தமர்களுக்கு வஸ்திர தானங் கொடுத்து, பரமேஸ்வரனுக்கு விதிப்படி அபிஷேகஞ் செய்து, புதிய வஸ்திரமும் புஷ்பமாலையுஞ்சாத்தி, அறுசுவையன்ன நிவேதனம்புரிந்து, தூபதீபமுதலான உபசாரஞ்செய்து, அருச்சனை செய்து வணங்குவோர் ஜென்ம ஜென்மங்கள்தோறுஞ் செய்த சகல பாவங்களும் நீங்கி நானாவிதமான போகங்களை யனுபவித்து சிவலோகம் புகுவர். பரமபதிக்கு அபிஷேகாதிகள் செய்யமுடியாதவர்

கள் அந்தத் தீர்த்தத்தில் மூழ்கி சிவனடியார்களை வணங்கித் துதிக்கில் அவர்கள்முன் பரமேஸ்வரன் தோன்றி முத்தியளிப்பர். வைகாசி மாசம் அமாவாசியில் துமக்கினே ருத்திரமந்திரஞ் செபித்து மூழ்கி சிவ பெருமானுக்கும் சிவப்பிராமணர்களுக்கும் வெண்ணிறப்பசு, வெண் ணிற விடபம், ஒருவராகன், அரைவராகன் என்பவற்றுள் தன் சக்திக் கியன்றதைக் கொடுப்போர் பசுலோக மடைவர். ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி, இம்மாதங்களில் பிதிர்க்களை யுத்தேசித்து சிவபெரு மானுக்கு இடபங்கொடுப்போர் அவ்விடபத்தின்மேல் எத்தனை மயிர்க ளிருக்கின்றனவோ அத்தனை கோடியுகம் கைலாசத்தில் சிவபெருமா னுக்கு அன்பராயிருப்பர். என்று வந்தாய்? என்ன வேண்டும்? என்று கேட்டருளுகின்ற சபாநாயகப்பெருமானுக்கு மார்கழி மாசம் திருவா திரை நக்ஷத்திரத்தில் சந்தனக்குழம்பு முதலான அபிஷேகாதிகள் விதிப்படி செய்வோர் கைலாசஞ் சென்று முத்தியடைவர்.

4. கோவிலுக்கு வடபக்கம் வடக்குவீதிக்குத் தென்பக்கம் நடு வில் ஓர் தீர்த்தமிருக்கிறது. அஃது திருஞான தீர்த்தம், ஞானவாவி, ஞானதீர்த்த மென்னும் பெயர்களை யுடையது. இதில் தினம் மூழ்கு வோர் ஞானமடைவர். கார்த்திகை மாசம் ஞாயிற்றுக்கிழமை (சூரிய) உதயத்தில் மூழ்கி பாற்குடந் தானங் கொடுப்போர் குஷ்ட முதலிய சகல ரோய்களும் நீங்கிச் சிவலோகமடைவர். ஞானதீர்த்தத்தில் மூழ்கி சிவபெருமானையும் தேவியாரையும் விதிப்படி பூசிப்போர் சகல போகங்களையும் பெறுவர். மாசிமாசம் பரணி நக்ஷத்திரத்தில் இயமன் மந்திரஞ் செபித்து ஞானதீர்த்தத்தில் மூழ்கி மூங்கிற்கூடை, பிரப்பங் கூடை, மண்பாத்திரம் என்பவற்றுளொன்றில் ஆறு மரக்கால் உளுந்து போட்டு சிவப்பிரீதியாகத் தானஞ்செய்து சிவலிங்கப்பெருமான் தேவி யார் சபாநாயகப்பெருமான் இவர்களுக்கு ஆராதனைசெய்து, சண்பகப் பூமாலை சாத்தி வணங்கித் துதிப்போர் இயமபயம் நீங்கிச் சந்திர சூரிய ருள்ளளவும் விருத்தியைப் பெறுவர். மாசிமாசம்அபரபக்கம் சதுர்த்தசி இரவில் வருங்காலமாகிய சிவராத்திரி புண்ணியகாலத்திலே திருஞான தீர்த்தத்திலே மூழ்குவோர் சிவபெருமானே யாவர். சிவராத்திரியிலே ஞானவாவியிலே மூழ்கி நித்திரை செய்யாமல் யாமந்தோறும் விதிப்படி

சிவபெருமானைப் பூசனை புரிந்து, மறுநாளுதயத்தில் மேற்படி தீர்த்தத் திலே மூழ்கி செப்புப்பாத்திரம் நிறையத் தண்ணீர் மொண்டு, அத னோடு தன் சக்திக்கியன்ற பொன் வைத்துத் தானங்கொடுத்து, சிற் சபையில் நின்று அபயகரத்தால் வாவென்று கூப்பிட்டு வீசிய கரத் தால் குஞ்சிதபாத நிழலிலிருவென்று காண்பிக்கின்ற சபாநாயகப் பெருமானுடைய குஞ்சிதபாத மலரைத் தரிசித்துத் துதிபண்ணுவோ ரைச் சபாநாயகப்பெருமான் கிருபையோடு பார்த்து மகிழ்வர். சிவராத் திரியிலே சிவபெருமானுக்கு பால்,நெய்,தேன், கருப்பஞ்சாறு முதலிய அபிஷேகாதிகள் செய்து மறுநாள் காலையில் தானியதானஞ்செய்வோர் கோடிபிதிர்க்களோடு கைலாசத்தில் வசிப்பர். செல்வத்தை விரும்பிய வர்கள் சிவபெருமானுக்குக் கண்ணாடி கொடுக்கில் குபேர செல் வத்தைப் பெறுவர். இது சத்தியம். திருஞான தீர்த்தத்தில் புரட் டாசி மாசம் அபரபக்கம் பிரதமை முதல் பூர்வபக்கஞ் சதுர்த்திவரையி லுள்ள நாட்களில் மூழ்கி அறுசுவைப் பொருளால் மஹாளயம் சிராத் தம் செய்திடில் அளத்தற்கரிய செல்வமுண்டாம். மேற்படி நாட்களில் அந்தத் தீர்த்தக்கரையில் பிண்டம்போட்டு எள்நீர் வார்க்கில் கயாவில் செய்த பலனிலும் கோடிமடங்கு அதிகமாகிய பலனைப் பெற்று பிதிர்க்களோடு முத்தி யடைவர். சாத்திரம் படித்தவராயும், தரித்திரராயும், ஆதரவில்லாதவ ராயும், அறிஞராயு முள்ள சிவனடியார்களுக்கு பூமி, தனம், தானியம், வீடு இவைகள் கொடுப் போர் நிறைசெல்வம் பெற்று அரசராகிப் பூமியை யாள்வர். சிவனடியாருக்கு வஸ்திரம் கொடுப்போர் சிவலோகத்தில் இருப்பர். நந்தவனம் வைப்போர் சிவபெருமானேயாவர். திருக்களரியைச் சுற்றி ஐந்து கூப்பிடு தூரத்திற்குள் நிழலுண்டாக்குவோர், குளம வெட்டு வோர் இவர்கள் சந்திரலோகஞ் சென்று தேவர்களாய் வாழ்வார்கள். திருக்களரியில் தானங்கள் கொடுப்போர் உலகதலை யாள்வர். திருக் களரிப்புராணம் பதினெண் புராணங்களி லொன்றாகிய பவுடிகபுரா ணத்திலே, உத்தரகாண்டத்திலே, க்ஷேத்திரகண்டத்திலே எண்பதா வது சருக்கமுதல் எண்பத்தேழாவது சருக்கம் வரையில் அனுகூலச் சருக்கம், பாரிசாதவனச்சருக்கம், நிருத்தச்சருக்கம், புஞ்சூரக்காச் சருக்

கம், மாலாதாரகச் சருக்கம், மஹாரதன் புத்திரப் பேற்றுச் சருக்கம் தீர்த்த மான்மியச்சருக்கம் என ஏழு சருக்கங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முதல் ஆறு சருக்கம் திருநந்தி தேவராலும், ஏழாவது தீர்த்தமான்மியச்சருக்கம் சூதமுனிவராலும் சனற்குமார முனிவருக்குச் சொல்லியது. இப்புராணத்தைப் புத்தகத்தி லெழுதினோர் கைலாசமடைவர். திருச்சிற்றம்பலம்.

குறிப்பு.—மாசப்பிறப்பு, அமாவாசை, விதிபாதம், கிரகணம், அர்த்தோதயம், மஹோதயம், கார்த்திகை மாசம் ஞாயிற்றுக்கிழமை உதயம், கார்த்திகை மாசம் திங்கட்கிழமை மத்தியானம் இப்புண்ணிய காலங்களில் துருவாசதீர்த்த மேல்கரையில் பந்தற்போட்டு சிவலிங்கப் பெருமான் முதலிய மூர்த்திகளுக்கு விதிப்படி அபிஷேகாதிகள் செய்து சந்திரசேகரப் பெருமானை இடபவாகனத்தின்மீது மேற்படி பந்தலுக்கெழுந்தருளச் செய்து அஸ்ததேவரை விதிப்படி தீர்த்தமாட்டுவித்து இராத்திரிக்கு மண்டகப்படி செய்து அப்பெருமானைக் கோவிலுக்கெழுந்தருளப் பண்ணுவது உத்தமோத்தமமாம்.

மாசி மாசம் உதயம், வைகாசி மாசம் அமாவாசை இந்தப் புண்ணிய காலங்களில் உருத்திரதீர்த்த மேல்கரையில் பந்தற்போட்டு சிவலிங்கப் பெருமான் முதலிய மூர்த்திகளுக்கு விதிப்படி அபிஷேகாதிகள் செய்து சந்திரசேகரப் பெருமானை இடபவாகனத்தின்மீது ஷை பந்தருக் கெழுந்தருளப்பண்ணி அஸ்த தேவரை விதிப்படி தீர்த்தமாட்டுவித்து இராத்திரிக்கு மண்டகப்படி செய்து சந்திரசேகரப் பெருமானைக் கோவிலுக்கெழுந்தருளச் செய்வது உத்தமமாம்.

கார்த்திகை மாசம் ஞாயிற்றுக்கிழமை உதயம், மாசிமாசம் பரணி நக்ஷத்திரத்தன்று மத்தியானம், சிவராத்திரியின் மறுநாள் உதயம் இப்புண்ணிய காலங்களில் திருஞான தீர்த்தம் வடகரையில் பந்தற்போட்டுச் சிவலிங்கப்பெருமான் முதலிய மூர்த்திகளுக்கு விதிப்படி அபிஷேகாதிகள் செய்து சந்திரசேகரரை இடபவாகனத்தின்மீது அப்பந்தலுக் கெழுந்தருளச்செய்து அஸ்ததேவரை விதிப்படி தீர்த்தமாடச் செய்து இராத்திரிக்கு மண்டகப்படி பண்ணி சந்திரசேகர மூர்த்தியைக் கோவிலுக்கெழுந்தருளப் பண்ணுவது மிக்க விசேடமாம்.

# திருக்களர்த் தேவாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளியது.

பண்—சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

நீருளாரகயலவாவிசூழ்பொழினீண்டமாவயலீண்டுமாமதில்
தேரினார்மறுகில்விழாமல்குதிருக்களருள்
ஊருளாரிடுபிச்சைபேணுமொருவனேயொளிர்செஞ்சடைம்மதி
யாறினறவனேயடைந்தார்க்கருளாயே. (1)

தோளின்மேலொளிநீறுதாங்கியதொண்டர்வந்தடிபோற்றிமிண்டிய*
தாளினார்வளருந்தவமல்குதிருக்களருள்
வேளினேர்விசையற்கருள்புரிவித்தகாவிரும்பும்மடியாரை
ஆளுகந்தவனேயடைந்தார்க்கருளாயே. (2)

பாடவல்லநன்மைந்தரோடுபனிமலர்பலகொண்டுபோற்றிசெய்
சேடர்வாழ்பொழில்சூழ்செழுமாடத்திருக்களருள
நீடவல்லநிமலனேயடிநிரைகழல்சிலம்பார்க்கமாநடம்
ஆடவல்லவனேயடைந்தார்க்கருளாயே. (3)

அம்பினேர்தடங் கண்ணினாருடனுடவர் பயின்மாடமாளிகைச்*
செம்பொனார்பொழில் சூழ்ந்தழகாயதிருக்களருள்
என்புபூண்டதோர்மேனி யெம்மிறைவாவிணையடிபோற்றி நின்றவர்க்
கன்புசெய்தவனேயடைந்தார்க் கருளாயே. (4)

கொங்குலாமலர்ச்சோலைவண்டினங் கிண்டிமாமதுவுண்டிசைசெயத்
தெங்குபைங்கமுகம்புடைசூழ்ந்த திருக்களருள்
மங்கைதன்னொடுங்கூடிய மணவாளனேபிணைகொண்டொர்கைத்தல
தங்கையிற்படையாயடைந்தார்க்கருளாயே. (5)

கோலமாமயிலாலக்கொண்டல்கள்சேர்பொழிற்குலவும்வயலிடைச்
சேலிளங்கயலார்புனல்சூழ்ந்ததிருக்களருள்

---

* போற்றமிண்டிய என்றும் பாடம்.

நீலமேவியகண்டனே திமிர்புன்சடைப் பெருமானெனப்பொலி
ஆலநீழலுளாயடைந்தார்க்கருளாயே. (6)

தம்பலம்மறியாதவர் மதிருங்கு † மால்வரை யாலழலெழத்
தின்பலங்கெடுத்தாய்திகழ்கின்றதிருக்களருள்
வம்பலர்மலர்தூவிநின்னடி ‡ வானவர்தொழக் கூத்துகந்தபேர்
அம்பலத்துறைவாயடைந்தார்க்கருளாயே. (7)

குன்றடுத்த * நன்மாளிகைக்கொடிமாடநீடுயர்கோபுரங்கண்மேல்
சென்றடுத்துயர் † வான்மதிதோயுந்திருக்களருள்
நின்றடுத்துயர் ‡ மால்வரைத்திரடோளினாலெடுத்தான் றனீண்முடி
அன்றடர்த்துகந்தாயடைந்தார்க்கருளாயே. (8)

பண்ணியாழ்பயில்கின்றமங்கையர்பாடலாடலொடாரவாழ்பதி
தெண்ணிலாமதியம்பொழில்சேருந்திருக்களருள்
உண்ணிலாவியவொருவனே § யிருவர்க்குநின்கழல்காட்சியாரழல
அண்ணலாயவெம்மானடைந்தார்க்கருளாயே. (9)

பாக்கியம்பலசெய்தபத்தர்கள்பாட்டொடும்பலபணிகள்பேணிய
தீக்கியல்குணத்தார்சிறந்தாருந்திருக்களருள்
வாக்கினான்மறையோதினாயமண்டேரர்சொல்லியசொ,
ஆக்கினின்றவனேயடைந்தார்க்கருளாயே. (10)

இந்துவந்தெழுமாடவீதியெழில்கொள்காழிநகர்க்கவுணியன
செந்துநேர்மொழியாரவர்சேருந்திருக்களருள்
அந்தியன்னதோர்மேனியானையமரர்தம்பெருமானை ஞானசம
பந்தன்சொல்லிவைபத்தும்பாடத்தவமாமே. (11)

திருச்சிற்றம்பலம்

---

யாதவரெயிருங்கு என்றும் பாடம். ‡ வம்புலாமலர் தூவிநின்றடி என்றும் பாடம்.

குன்றெடுத்தன என்றும் பாடம். † சென்றெடுத்துயர் என்றும் பாடம். ‡ நின்றெடுத்துயர் என்றும் பாடம். § உண்ணிலாயவரு வனே என்றும் பாடம்.

## திருக்ஷேத்திரக்கோவை

### திருநாவுக்கரசு நாயனார் திருவாய்மலர்ந்தருளியது

### திருத்தாண்டகம்

மண்ணிப் படிக் கரை வாழ்கொளிபுத்தூர்
வக்கரை மந்தாரம் வாரணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி
விளமர் விராடபுரம் வேட்களத்தும்
பெண்ணையருட்டுறை தண்பெண்ணாகடம்
பிரப்பில் பெரும்புலியூர் பெருவேளூரும்
கண்ணைகளர்க்காறை கழிப்பாலையுங்
கயிலாய நாதனையே காணலாமே.

## திருப்பதிகக்கோவை

கடைமுடியே யோணகாந்தன் றளிகோட் டூரவை
கன்மாடக் கோயிலிடை யாறுபழை யாறை
வடதளிநற் றினைநகரங் கோணமா மலைசீர்
வன்னியூர் கருவிலிய னேகதங்கா வதநல்
விடமேவு கடிக்குளநற் றிருக்களரென் றிவைகட்
கிரும்பதிக மொவ்வொன்றென் றிசைத்திடுக விப்பாற்
குடவாயில் புனவாயி றாங்கானை மாடங்
கோழம்ப மவளிவணல் லூர்கோலக் காவே.

## திருப்பதிக்கோவை

மேலாகும வளமாகா வீரம்பெரு வேளூர்
மிளிர்தலையா லங்காடு குடவாயில் சேறை
நாலூர்ம யானங்கடு வாய்க்கரைப் புத்தூர்
நவிலுமிரும் பூளைதிரு வரதைப்பெரும் டாழி

மூதூரு மவளிவணல லூர்பாது நயமம
வாழ்வெண்ணி பூவனூர் பாதாளீச் சரநீர்ச்
சேலூருந் திருக்களர்சிற் றேமமுசாத் தானந்
திருவிடும்பா வனத்தோடு சேர்ந்தகடிக் குளமே.

## பெரிய புராணம்

### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் புராணம்

மற்றவ்வூர் தொழுதேத்தி மகிழ்ந்து பாடி
மாலயனுக் கரியபிரான் மருவுந் தானம்
பற்பலவுஞ் சென்று பணிந்தேத்திப் பாடிப்
பரவுதிருத் தொண்டர்குழாம் பாங்கி னெய்தக்
கற்றவர்வாழ் தண்டலைநீ ணெறியுள் ளிட்ட
கனகமதிற் றிருக்களருங் கருதார் வேள்வி
செற்றவர்சேர் பதிபிறவுஞ் சென்று போற்றித்
திருமறைக்காட் டதன்மருங்கு சேர்ந்தா ரன்றே.

பொன்னிவளந் தருநாடு புக்கு மிக்க
பொருவில்சீர்த் திருத்தொண்டர் குழாத்தி னோடு
பன்னகப்பூ ணணிந்தவர்தங் கோயி லேறும்
பத்தருடன் பதியுள்ளோர் போற்றச் சென்று
கன்னிமதிற் றிருக்களரும் போற்றிக் கண்டங்
கறையணிந்தார் பாதாளீச் சரமும் பாடி
மன்னணைந்த பதிபிறவும் பணிந்து போற்றி
முள்ளிவாய்க் கரையணைந்தார் முந்நூன் மார்பர்.

திருச்சிற்றம்பலம்

# தேவியார் திருவிளையாடல்

## (கர்ணபரம்பரை)

திருச்சிற்றம்பலம்.

ஓர் காலத்திலே யித்தலத்திலே ஆதிசைவராகிய குருக்களொருவ ரிருந்தார். அவர் சிவபெருமானைப் பூசிக்குஞ் சமயத்திலே பிறரை நோக்கல், பிறரைத்தீண்டல், பிறரோடு பேசல், இருமல், தும்மல், மூக்கு நீர் சிந்தல், மூக்குத்தூளிடல், சிரித்தல், பாக்குவெற்றிலை யுண்ணல், விபூதி ருத்திராக்க மணியாதிருத்தல், அவசரமாகச் செய்தல், அலக்ஷிய மாகச் செய்தல், ஒரு கையாற் செய்தல், கடமைக்குச் செய்தல், சுற் றத்தை நினைத்தல், மனதை வேறிடத்தில் விடுத்தல்; மந்திரலோபங் கிரியாலோபஞ் செய்தல், இடம்பமாகச்செய்தல், வரும்படியை விரும்பிச் செய்தல், அபிஷேக திரவியங்களைப் புசித்தல், அபிஷேக திரவியங் களை மறைத்தல் முதலிய குற்றங்களைக் கனவிலுங் கருதார். இவ ருக்கு நீண்ட காலம் மகப்பேறில்லாதிருந்து தேவியார் திருவருளால் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை ஒருநாள் சாயந்திரம் கோவிலுக்குச் சென்று அங்கு தந்தை பூசை செய்துகொண்டிருந்ததால் தேவியார் திருச்சந்நிதியிலே ஒரு பக்கத்தில் படுத்து நித்திரை செய் தது. பூசகர் அர்த்தயாமஞ் செய்தபின்பு குழந்தை தூங்குவதை மறந்துகோவிலைத் திருக்காப்பிட்டுவிட்டு வீட்டுக்குச் சென்றார். அங்குக் குழந்தையைக் காணாமையால் தேடித்திகைத்து நிற்கையில் குழந்தை கோவிலுள் தூங்கும் ஞாபகம் அவருக்கு வந்தது. திருக்காப்பிட்ட கோவிலைத் திறக்கக்கூடாமையால் அவர் இராத்திரி முழுதும் நித்திரை யின்றித் தேவியாரைத் தியானித்துக்கொண்டிருந்தார். இவர் மறுநாளுதயத்தில் சந்தியாவந்தன முடித்துக்கொண்டு திருக் காப்பு நீக்கிக் கோவிலுக்குட் சென்று தேவியார் திருக்கோவிலைத் திற ந்து பார்த்தார். அங்கு அப்பெண் குழந்தை ஆண்குழந்தையா யிருந் தது. பூசகர் அவ்வாண்மகவைக் கண்டவுடன் தேவியார் திருவருளை வியந்து ஆநந்தபரவசமடைந்து அன்றுமுதல் பன்மடங்கதிகமாக அன் பும் அச்சமும் பெருகப் பூசனைபுரிந்துகொண்டிருந்து சிவபதமடைந்தார்.

மற்றொரு காலத்திலே பலான தலங்களுக்குப் பலான வூர்களிலிருந்து பால்முதலிய அபிஷேகதிரவியங்கள் கட்டிக்கொண்டுபோகும் எண்ணிறந்த காவடிகள் தன்னை மறந்து இத்தலத்திற்கு வந்து அபிஷேகமாகும் வழக்கமாயிருந்தன. அக்காலத்திலே நாள்தோறும் எண்ணிலடங்காத ஜனத்திரள்கள் இங்கு வந்தன. சிலர் அபிஷேகாதிகள் செய்தனர், சிலர் அர்ச்சனை செய்தனர், சிலர் தூபமிட்டனர், சிலர் தீபங்களிட்டனர், சிலர் மாவிளக்கிட்டனர், சிலர் நமஸ்கரித்தனர், சிலர் பிரதக்ஷிணம் வந்தனர், சிலர் அங்கப் பிரதக்ஷிணஞ் செய்தனர். சிலர் தேவாரம் பாடினர், சிலர் திருவாசக மோதினர், சிலர் திருவிசைப்பாப் பாடினர், சிலர் திருப்பல்லாண்டு கூறினர், சிலர் சிமநாமாவளி சொல்லினர், சிலர் சிவகீர்த்தனம் பாடினர், சிலர் சிவசிவ வென்றார், சிலர் அரஹரவென்றார், சிலர் சிவநாமம் பலவுச்சரித்தார், சிலர் பஞ்சாக்கரஞ்செபித்தார், சிலா ஆநந்தக்கூத்தாடினர், பலர் தீர்த்தங்களாடினர், சிலர் பேய்க்கூத்தாடினர், கர்ப்பூரங் குப்பல்குப்பலா யெரிந்தன. வேதாளபூதப் பிரேதங்கள் பறந்தன, குஷ்டமுதலிய கொடிய ரோகங்கள் தொலைந்தன. நினைத்தவைகளெல்லா முடிந்தன. இவ்வித வைபவம் நடக்கும் நாளிலே விசுவநாதபுரத்திலிருந்த வேளாளனொருவன் வந்து பலசரக்கு வியாபாரஞ் செய்துகொண்டிருந்தான். இவன் (அக்காலத்திலே வேதாரணியத்திலே விளைந்த வெண்மையாகிய) கல்லுப்பைக் கர்ப்பூரத்தோடு சேர்த்து பொட்டணங்கள் கட்டி விற்றான். இவ்விதம் விற்ற குற்றத்திற்காக (அக்கல்லுப்பு வெடிப்பதுபோல் பளீர் பளீர் என்று குத்தாநின்ற) நீங்குத்தலாகிய கொடிய ரோகத்தினிடத்திலகப்பட்டு. அந்நோய்க்காற்றாதவனாய் ஹே அமுதவல்லி! உப்புக்கல்லைக் கர்ப்பூரமென்று விற்றனடி பாவீ! ஐயையோ! ஐயையோ!! குத்துதே: குத்துதே!! எனப் புலம்பிக்கொண்டும், தலையிலடித்துக்கொண்டும், அடிக்கடி மூர்ச்சையாகி விழுந்துகொண்டும் சிலகாலமிருந்து வுயிர் துறந்தான்.

பின்னொரு காலத்திலே இத்தலத்திலேஓதல், திருயாலைக்கட்டல், அறைச்சாமானைவைத்துக்கொடுத்தல், மெய்காவல் காத்தல் இந்நான்கு

பூவலையும பாரத்துக்கொண்டு ஓர் வேளாளனிருந்தான். அந்நாளிலே தேவியார் கோவிலுக்குள்ளிருந்த திருவாபரணங்கள் காணாமற்போயிற்று. சிறிதுநாட்கழித்து அவ்வேளாளன் திருஞானதீர்த்தங் கீழ்கரையிலே நந்தனவனம்போட்டுத் தண்ணீரிறைத்துக்கொண்டிருந்தான். இவ்விதமிருக்குங் காலத்திலே இவ்வூரில் சுப்பிரமணியர் வரப்பிரசாதியாயிருந்த ஒருவருடைய கனவிலே தேவியார் பிராமணப் பெண்போலத் தோன்றி என்னுடைய திருவாபரணங்களைக் கவர்ந்த குற்றந்தீர நந்தனவனம் போட்டுத் தண்ணீர் இறைக்கிறான், அவனுடைய வம்சம் சிறிது நாளில் நாசமாகுமென்று சொல்லி மறைந்தருளினார். அவ்விதமே சிறிது காலத்திற்குள் அவ்வேளாளனுடைய வம்சமழிந்து போயிறறு.

கோவில் குடியானவனாகிய ஓர் பள்ளன் தனனுடைய வறுமை நீங்கவேண்டுமென்று தினந்தோறும் தேவியாரைத் தோத்திரம் பண்ணிக்கொண்டிருந்தான். இப்படியிருக்கு நாளிலோர் நாளிரவில் அப்பள்ளன் கனவில் தேவியார் பிராமணச்சிறுமிபோலத் தோன்றி வேங்கூர் மூட்டுத்திடலில் பொன் பணமிருக்கிறது எடுத்துக்கொள்ளென்று சொல்லி மறைந்தருளினா. அப்பள்ளன் மறுநாட்காலையில் அங்கு போய்ப் பார்த்து பணமிருக்கக்கண்டு ஆனந்த மகிழ்ச்சியடைந்து அதனை எடுத்துவந்து தன்னிடம் குடிகொண்டிருந்த வறுமையைப் போக்கினான்.

இத்தலத்திலே யிருந்த வேளாளப் பெண்ணொருத்தி கோவிலுக்குச் சொந்தமாய் தன் வீட்டுக்கெதிரிலே உருத்திர தீர்த்தக்கரையிலே யிருந்த இருப்பை மரத்திலிருந்து விழுந்த கொட்டைகளைப் பொறுக்கிச் சேர்த்து (நல்லூர் வாணிய வீட்டில் கொண்டுபோய்க் கொடுத்து எள்நெய் வாங்கிவரக் கருதி)வைத்திருந்தாள். ஒருநாளிரவில் அப்பெண் கனவில் தேவியார் பிராமணப்பெண்போலத் தோன்றி எங்களகத்திலே எரியுந் தீபங்களை அமர்த்த உத்தேசித்திருக்கிறாயே அவ்விதம் நினைக்கலாமா வெனக் கேட்டு மறைந்தருளினார். மறுநாளுதயத்தில் அவ்வேளாளப்பெண் அவ்விருப்பைக்கொட்டைகளைக் கொண்டுபோய்க் கோயிலதிகாரியிடம் ஒப்புவித்தாள்.

இத்தலத்திலே ஒரு சமயம் பரிசாரகனுயிருந்த ஒரு பிராமணன் கோவில் எண்ணெய்ச்சட்டியைத் தன் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போய்ச் சொந்த வுபயோகப்படுத்திக்கொண்டிருந்தான். இப்படியிருக்குங்காலத்திலே யொருநாளிரவில் அப்பிராமணன் மனைவியின் கனவில் தேவியார் பிராமணப்பெண்போலத் தோன்றி எங்களகத்து எண்ணெய்ச் சட்டியை யெடுத்துவந்து நீங்கள் சொந்த வுபயோகப்படுத்திக் கொள்ளுகிறீர்களே? சட்டி தேய்ந்துபோகுமே? எங்களுக்கு யார் வாங்கிக்கொடுப்பார்? என்று சொல்லி மறைந்தருளினுர். பரிசாரகன் மனைவி தேவியார் சொன்னதை யலட்சியமாக நினைத்து மறுநாள் அச் சட்டியை அடுபபில்வைத்து வற்றல் வறுக்க எண்ணெயை யூற்றினுள். அவ்வெண்ணெய் தானே சிதறி அப்பிராமணப் பெண்ணின் தேகமெங்கும் பட்டுக் கொப்புளமுண்டாயிற்று. இவ்விஷயங்களை அப்பரிசாரகன் அறிந்து அச்சட்டியைக் கொண்டுபோய்க் கோவிலில் வைத்துவிட்டான்.

இத்தலத்திலே பூஜைசெய்யும் பூசகராகிய குருக்கள் ஒருநாளிரவில் அர்த்தயாமஞ்செய்த பின்பு சிவபெருமான் தேவியார் முதலிய மூர்த்திகளுக்குச் சாத்தியிருந்த புஷ்பமாலைகளைத் தன் வீட்டிற்கு விருந்தாக வந்திருக்கும் தன் மைத்துனிக்குக் கொடுக்கும்பொருட்டு எடுத்துக்கொண்டுவந்து வைத்துவிட்டுச் சாப்பிட்டார். இவர் சாப்பிட்டுக் கையலம்பியவுடன் சுவரில் சாய்ந்திருந்தார். அப்போது அவருக்கு நித்திரை யுண்டாயிற்று. அச்சமயத்தில அவருடைய கனவில் தேவியார் அவர் மைத்துனியைப்போல தோன்றி எங்களுக்குச் சாத்தியிருந்த மாலைகளைக் காலையில் எடுத்துக்கொள்ளக்கூடாதா இப்போதே எடுக்கலாமா வெனக்கேட்டு மறைந்தருளினுர். குருக்கள் உடனே விழித்து அப்புஷ்பமாலைகளை யெடுத்துக்கொண்டுபோய் எறிந்துவிட்டார்.

இவ்வூரிலே பிள்ளையார்தோப்பு என்னுமிடத்திலே ஒரு தடாகமிருக்கிறது. அத்தடாகத்தின் மேல்கரையில் ஒரு நந்தனவனமிருக்கிறது. அந்நந்தவனத்திலுள்ள புஷ்பங்களை நாளடைவிலே ஒரு கள்ளப் பெண் எடுத்து அணிந்துகொண்டாள். இப்படி நடக்குங் காலத்திலே யொருநாளிரவில் அப்பெண் கனவில் தேவியார் பார்ப்பாரப் பெண்

போலத் தோன்றி எங்களுடைய நந்தனவனத்திலே யுள்ள புஷ்பங்களை நீ திருட்டுத்தனமாய் எடுத்து அணிந்துகொள்ளலாமா, வெனக் கேட்டு மறைந்தருளினர். அன்று முதல் அப்பெண் அந்நந்தன வனத்திற்குப் போவதை விட்டுவிட்டாள்.

திருச்சிற்றம்பலம்.

---

## வீரசேகரஞானதேசிகர்திருப்பணி

திருச்சிற்றம்பலம்

கடல் சூழ்ந்த வுலகத்திலே, சிவபெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல் புரிந்த பாண்டிவளநாட்டிலே, புதுவயல் நகரத்திலே, நகரம் (இருப்பக்குடிக்கோவில்) வணிகர் மரபிலே வெ. அருணசலச் செட்டியார் என்பவ ரொருவரிருந்தார். அவர் நாள்தோறும் அந்நக ரத்திற்குச் சமீபத்திலேயுள்ள சாக்கிக்கோட்டை யென்னும் வீரவன க்ஷேத்திரத்துக்குப் போய் ஸ்ரீ வீரசேகரப்பெருமானைத் தரிசித்துக் கொண்டு வருவார். இவ்வாறொழுகுங்காலத்திலே, அவ்வீரசேகரப் பெருமானுடைய திருவருளால் அவ்வருணசலச் செட்டியாருடைய மனைவியார் உமையாளம்மை யென்பவர் கற்பவதியாகி, கலியப்தம் நாலாயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தொன்பதுக்குச் சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து எழுநூற்று எழுபதில் (கீலகவருஷம் ஆவணி மாசம் சுக்கிரவாரம் புனர்பூச நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் ஒரு ஆண்மகவைப் பெற்றார். அம்மகவுக்கு வீரசேகரனெனத் திருநாம மிட்டு வளர்த்தார்கள். அப்புதல்வர் பத்தொன்பதாம்வயதிலே அன்னை முதலிய வுறவினரைவிட்டு நீங்கி வன்னிவன க்ஷேத்திரமென்னுங் கோவிலூர் சென்று, அங்கு முத்துராமலிங்கதேசிகரென்னும் ஆண்டவர் மரபிலே, மூன்றாங்குருமூர்த்தமா யெழுந்தருளியிருந்த கருணாநிதி யாகிய சிதம்பர ஞானதேசிகரைச் சரணடைந்து நானசிவவாதர் கட்டளை, கீதாசாரத் தாலாட்டு, சசிவர்ண போதம், மஹாராஜா துறவு என்பனவாகிய ஞானசாஸ்திரங்களை யுணர்ந்து துறவாச்சிரமம் பெற்று, கருதி சோழவள நாட்டிலே, சிக்கலுக்கடுத்த பொருள்வைத்த சேரி

யிலே பரிபூரணமாகி விளங்கும் உகந்தகுருதேசிகர் சந்நிதானத்தை யடைந்து துறவுபூண்டு (சாயசமணிந்து) சின்னளங்கிருந்தார். பின்பு கோவிலூரை யடைந்து கருணாநிதிமுகமாகவே வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார், வேதாந்த சூளாமணி, கைவல்யம், பஞ்சதசப்பிரகரணம், இலக்ஷணவிருத்தி, விவேக சூடாமணி, ஈசுவரகீதை, பகவற்கீதை, பிரமகீதை, ஞானவாசிட்டம் முதலிய சாஸ்திரங்களை யுணர்ந்து "நீக்காய்வான் போல" தேசிகரை விட்டகலாதிருந்தார். இங்ஙன மிருக்கு நாளிலே தேசிகர் பரிபூரண மடைந்தார்; அச்சந்நிதானத்திலே சிலகாலமிருந்து, சிதம்பர தலத்தை யடைந்து, கைபபிக்ஷை யேற்றுண்டிருந்தார். பின்பு யாத்திரை செயக் கருதி கால்நடையாகச் சென்றபோது (மார்க்கத்தில்) ஒரு சமயங் கிடைத்த கேழ்வரகுக் கஞ்சியைக் கையிலேற்றுண்டும், மற்றொருசமயம் ஒரு கிரகஸ்தன் கொடுத்த பொருளை விரும்பாமலும், வேறொரு சமயம் கால் தேய்ந்து உதிரம் பெருகியதைக் கவனியாமலும் காசி, இராமேசுவரம், மதுரை, திருச்செந்தூர்முதலிய தலங்களுக்குப்போய்திரும்ப சிதம்பர தலத்தையடைந்து கைப்பிக்ஷை யேற்றுண்டு பொன்னம்பல ஞான தேசிகருடைய மடாலயத்திலிருந்தார். இவ்வாறிருக்கும் நாளிலே, முற்புகன்ற கோவிலூரிலே (நான்காம்) குரு மூர்த்தமாய் விளங்கிய இராம சுவாமி ஞானதேசிகர் பரிபூரணமடைந்தார். இதைக் கேள்வியுற்ற பொன்னம்பல ஞானதேசிகருடைய திருவாக்கிலிருந்து அந்தத் தானத்தை வகிக்கத்தக்கவர் வீரசேகர மூர்த்தியென வோர் வாக்கெழுந்தது. அவ்வாக்கைச் செவியுற்ற வீரசேகரர் அன்றிரவே (சிதம்பர தலத்தை நீங்கி) வளவனூரை யடைந்து சண்முக ஞான தேசிகருடைய மடாலயத்திலிருந்தார். அங்கு வசிப்பதை பொன்னம்பல ஞான தேசிகரறிந்து தமது மாணக்கர்களை யனுப்பி வரவழைத்து ஹிதமான வார்த்தைகளைச்சொல்லி யழைத்துக்கொண்டு கோவிலூரை யடைந்து (ஐந்தாம்) குருத்தானத்தை யடையவேண்டுமென்றார். வீரசேகரர் அவ்வாக்கைக் கடக்கக்கூடாதவராய் (சுபானுவருஷம் மார்கழி மாசம்) அத்தானத்தை வகித்தருளினார். ஞானமுங் குருத்தானமும் பெற்றமையால் வீரசேகர ஞானதேசிகரென்று பெயர் பெற்றார். (வீரப்ப

ஞானதேசிகரெனவும், வீரப்பசுவாமி யெனவுங் கூறுவர்.) இவர் அக்கோவிலூரிலே கோவிலினுள் தேவியார் ஸ்ரீமானும், அர்த்த மண்டபம், மஹாமண்டபம், அணிவெட்டிக்கான் மண்டபம், துஜத்தம்பங்கள், வாகனங்கள் ; மடாலயத்தினுள் - கருணாநிதி விமானம், பதினாறுகான் மண்டபம், அணிவெட்டிக்கான் மண்டபம், குருபூசைமண்டபம், கைலாசகொட்டகை மண்டபம், பிரமசபை; வீதிகளில் பலமாளிகைகள் ஆனந்தநிர்த்தனவில்முதலியவைகள் அமைத்துத் தென்கைலாயமாக்குவித்தார். இவர் ஒருசமயம் சோழவளநாட்டிலே, காவிரிநதியின்வடகரையிலே விளங்காநின்ற திருவேரகமென்னுஞ் சுவாமிமலை (கும்பாபிஷேகத்திற்குச்) சென்றிருந்தார். அங்குத் திருப்பூவனூர் இராஜு முதலியார் வந்து, திருஞானப்பதிகம் பெற்று விளங்காநின்ற திருக்களர்ச்சிவதலப்பெருமை சிறுமைகளை விபரமாக விண்ணப்பஞ் செய்தார். வீரசேகர ஞானதேசிகர் அவ்விண்ணப்பத்தைச் செவியேற்றுத் தாம் சோழவளநாட்டிலே தேவாரம் பெற்ற தலமொன்று திருப்பணி செயக்கருதியிருப்பதாயும், திருவுளச்சம்மதமிருந்தால் முடியுமென்றுஞ் சொல்லி கோவிலூர் சென்றார். பின்பு சிலநாட்சென்று மாணாக்கர் குழாஞ்சூழ சோமசுந்தரதபதியை யழைத்துக்கொண்டு திருக்களரை யடைந்து, கோவிலைப் பார்வையிட்டு அளந்து கணக்குப் பண்ணி, நாளடைவிலே மூந்நூறாயிரம் ரூபாய் கொணர்ந்து முற்புகன்ற இராஜு முதலியார், களப்பாள் இரங்கசுவாமி முதலியார் இவர்கள் முன்னிலையாக அக்கோவிலில் நிறைந்திருந்த காட்டைக் களைந்து; அக்காட்டினுள் குடியிருந்த விஷச்செந்துக்களைக் குடி கிளப்பி; வசந்தமண்டபத்தைப் புதுக்கி, அம்மண்டபத்துள் எல்லா மூர்த்திகளையும் பாலஸ்தாபனஞ் செய்து; தினம்நாலுகாலம்பூசை யேற்படுத்தி; பெரிய கோபுரம், பெரிய மதில் நீங்கலாக மற்றப் பாகங்களையெல்லாம் இடித்து விமானங்கள், மண்டபங்கள், சிற்சபை, மதில்கள், கோபுரங்கள் இவைகளமைத்து ; பெரியகோபுரம், பெரியமதில் இவற்றில் முளைத்திருந்த விருக்ஷங்களை வேரோடு களைந்து சரிந்த பாகங்களைக் கட்டிப் புதுப்பித்து; (சந்திரசேகரர், பள்ளியறைச்சொக்கர், தருவாசர் முதலிய) உத்ஸவமூர்த்திகள், (லிங்கவிக்கிரகங்கள், சில நாயன்மார்கள், துவாரபாலகர்கள், துவாரசக்தி

கள், சண்டேஸ்வரி, இலக்குமி, வள்ளிதெய்வானை முதலிய) மூல ஸ்தான மூர்த்திகள், (தங்கக்கிரீடங்கள், தங்கக்கவசங்கள், வெள்ளிக் கிரீடங்கள், வெள்ளிக்கவசங்கள், வெள்ளிநாகாபரணக்குவளை, இரத்தினப்பதக்கங்கள், இரத்தினமகரிகள், இரத்தின மாலை, இரத்தினத்திரு மாங்கல்ய வகையறா முதலிய) திருவாபரணங்கள், (தீவர்த்திகள், புதிலிகள், தடிகள், மடல், கிண்ணம், குடம், கெண்டி, அபிஷேகக்கலயம், தாம்பாளம், குத்துவிளக்கு, சந்தனப்பேலா, பன்னீர்ச்சொம்பு, ஆலவட்டம், தூபக்கால், தீபக்கால், அலங்கார தீபக்கால், இடபதீபக்கால், கஜதீபக்கால், வியாக்கிர தீபக்கால், சிங்கதீபக்கால், நாகதீபக்கால், நக்ஷத்திர தீபக்கால், கும்பதீபக்குடம், தீபதாம்பாளங்கள், கண்ணாடி, குடை, சாமரம், விசிறி, சுருட்டி, கருப்பூர தாம்பாளம், ஏழுமுக கர்ப்பூர தீபக்கால் முதலிய) வெள்ளிச்சாமான்கள், (மேற்படி) பித்தளைச் சாமான்கள், திருவாசிகைகள், பலவகை விளக்குகள், பலவகை மணிகள், எவர்சில்வர் சாமான்கள், துஜத்தம்பம், மஹாரதங்கள், (வெள்ளி யிடபங்கள், பிரதோஷவிடபம், கைலாசபர்வதம், நந்தி, பூதன், பூதகி, காமதேனு, கற்பக விருக்ஷம், சந்திரப்பிரபை, சூரியப்பிரபை, யானை, குதிரை, அன்னம், மயில், மூஷிகம், பல்லக்கு முதலிய) வாகனங்கள், ஆயபாத்திரங்கள் இவைகள் செய்வித்து; நான்கு வீதிக்குட்பட்டிருந்த காட்டைக் களைந்து; வீதிக்கொழுங்கினமாக விருந்த வீடுகளை யிடித்து; நான்கு தீர்த்தங்களையும் வெட்டி; நன்செய் முதலியவைகளைத் தூர்த்து; கீழவீதியைச் சாலையைவிட்டுப் பிரித்து, ஒவ்வொரு வீதியையும் இருபத்துநாலு கஜம் அகலம் வைத்தொழுங்கி; வாகனமண்டபம், வேத பாடசாலைகள், பசுச்சாலை, விநோதசபை, குருபூஜை மடம், அகரம், தேர்முட்டிகள், அலங்கார மாளிகைகள், திருவாசதீர்த்தப் படித்துறைகள், திருநந்தனவனங்கள் இவைகளியற்றி பூலோககயிலாசமாக்கி கலியாப்தம் ஐயாயிரத்துப் பன்னிரண்டிக்குச் சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து எண்ணூற்று முப்பத்துமூன்றில் (விரோதிகிருது வருஷம் சித்திரை மாசம் குருவாரம் புனர்பூச நக்ஷத்திரங் கூடிய சுபதினத்தில்) மஹா கும்பாபிஷேகஞ் செய்வித்து; அன்றிரவில் விநாயகரை மூஷிக வாகனத்திலும், சுப்பிரமணியரை மயில் வாகனத்திலும், சோமாஸ்

கந்தரை வெள்ளி யிடபவாகனத்திலும், தேவியாரை மற்றொருவெள்ளி யிடப வாகனத்திலும், தண்டேஸ்வரரைப் படிச்சப்பரத்திலும் வீதிக ளில் எழுந்தருளப் பண்ணினார். இம்மாதிரிக் கும்பாபிஷேகம் நடந்திரா வென்பதும், நடக்காவென்பதும் திண்ணமேயாம். பின்பு இருபத் தைந்து நாளோடு மண்டலாபிஷேகத்தைப் பூர்த்திசெய்து; வைகாசி மாசம் பூர்வபக்கஞ் சதுர்த்தி திதியும் புனர்பூச நக்ஷத்திரமுங்கூடிய சுபதினத்தில் (துஜாரோகணஞ்செய்து) இடபக்கொடியேற்றி அன்று படிச்சப்பரங்களிலும், இரண்டாநாள் சூரியப்பிரபை சந்திரப்பிரபை களிலும், மூன்றாநாள் பூதன் பூதகிகளிலும், நான்காநாள் நந்தி யன் னங்களிலும், ஐந்தாநாள் வெள்ளி யிடபங்களிலும், ஆறாநாள் கற்பக விருக்ஷங் காமதேனுகளிலும், ஏழாநாள் (திருக்கல்யாணம்) யானை புஷ்பப்பல்லக்குகளிலும், எட்டாநாள் கைலாசபர்வதங் குதிரைகளிலும், சோமாஸ்கந்தர் முதலிய பஞ்சமூர்த்திகளையும் வீதிகளிலெழுந்தருளப் பண்ணினார். ஒன்பதாநாள் அம்மூர்த்திகளை மஹாரதங்களில் ஏற்று வித்து திருக்களர் ஆட்களும்; வடபாதிமங்கலம் சோமசுந்தர முதலியார், திருக்கோட்டூர் திருவேங்கட முதலியார், மேற்படியூர் ஸ்ரீநிவாச முதலி யார், மேற்படியூர் சடகோப முதலியார், கோமாளப்பேட்டை சுப்பா முதலியார், மேற்படியூர் சோமசுந்தரமுதலியார், களப்பாள் குமரப்பமுத லியார், மேற்படியூர் வயித்திலிங்க முதலியார், நடுவீழிக்களப்பாள் அருணாசல செட்டியார், தென்பாதி சுப்பையாநாயுடுகாரு, சோலைக்குளம் பொன்னம்பலவாண்டையார் முதலானவர்களுடைய ஆட்களும் அவ் விரதங்களை யிழுத்தார்கள் அன்றுதேர்கள் நிலைக்கு வரவில்லை பத்தா நாள் (வைகாசிமாசம் சுக்கிரவாரம் விசாகநக்ஷத்திரங்கூடிய சுபதினத் தில்) பகல் பதினைந்து நாழிகைக்கு மேற்படி ஆட்கள் ஸ்ரீ சிவபெரு மான் எழுந்தருளியிருந்த மஹாரதத்தை யிழுத்துக்கொண்டு தெற்கு வீதியிற் போகும்போது அத்தேருக்கு அருகில் வலப்பக்கத்தில் மஹாதே தேவா ! மஹாதேவா !! வெனப் பன்முறை புகன்று தன்னை மறந்து ஆனந்தக்கூத்தாடிக் கொண்டுவந்த அவ்வீரசேகர ஞானதேசிகர் (பிரம தீர்த்தக்கரையில்) இருகரத்தையும் சிரமேற் குவித்து மஹாதேவா ! வெனக் கூப்பிட்ட சப்தத்தோடு (சோதியுட் கலந்தார்) பரிபூரணமடைந்

தார். அன்றும் அவ்விரதங்கள் நிலைக்கு வரவில்லை. பதினோராநாள் பகல் பதினைந்து நாழிகைக்கு எல்லா ரதங்களும் நிலைக்கு வந்தன. முற்புகன்ற இராஜு முதலியார், இரங்கசாமி முதலியார் முதலானவர்கள் அன்றே தீர்த்தோத்ஸவத்தையும் நடத்தினார்கள். இத்திருப்பணியாதிகளில் மேற்படி இராஜு முதலியார், இரங்கசாமி முதலியார் இவ்விருவரும் (மனவாக்குக்காயங்களினாலும்) செய்தவைகளை ஆதிசேடனாலுஞ் சொல்லமுடியா வென்ப துண்மையேயாம்.

திருச்சிற்றம்பலம்

## முற்றிற்று

---

குறிப்பு—மஹாரதங்கள் நிலைக்கு வந்தவுடன வீரசேகர ஞான தேசிகருடைய திருமேனியைக் கோவிலுக்கு ஈசான திக்கில் வீதிக்கு வடபக்கம் சமாதி வைக்கப்பட்டது. அன்றும், (பத்தாநாள்) மோக்ஷதீபத்தன்றும் எண்ணிறந்த மாதவர் குழாங்களும், மாதனர் குழாங்களும் வந்திருந்தார்கள். அந்நாட்களில் திருக்களர் திருக்களரியாகவே யிருந்தது. நாள்தோறும் கணக்கில்லாத ஜனங்கள்வந்துவீரசேகர ஞான தேசிகர்சமாதியையும், பாரிசாத வனேஸ்வரரையும், சபாநாயகரையும், அமுதவல்லியையும், துருவாச முனிவரையும் தரிசித்துக்கொண்டுபோகின்றார்கள். இங்ஙனந் தரிசித்துக்கொண்டு போகின்றவர்களுடையஎண்ணங்களெல்லாம் நிறைவேறுகின்றனவாம். பூதப்பிரேதப் பேய்பிணிகளெல்லாம் பறக்கின்றன. வைகாசி மாசம் விசாக நக்ஷத்திரத்தன்று மத்தியானத்தில் விபூதி, உருத்திராக்கம், இலங்கோடு கௌபீனம்,காயசம் என்பவற்று ளொன்றேனும், பலவேனு மணிந்தவர்கள் ; நல்வினை தீவினை யிரண்டுங் கெட்டவர்கள் ; ஆணவம், மாயை, காமியம் மூன்றும் போனவர்கள்; மனம்,புத்தி, சித்தம்,அகங்காரம் நான்கு முதிர்த்தவர்கள், மெய், வாய், கண், மூக்கு, செவி அஞ்சுங் குருடானவர்கள்.முதலிய அடியார்களை மனிதரெனக் கருதாது, சிவபெருமானெனக் கருதி அவர்களுடைய திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்து அழைத்துவந்து ஆசனத்தில் உட்கார வைத்து,கரகநீர் கொண்டு அவர்களுடைய திருவடிகளை விளக்கி, அத்தீர்த்தத்தைத் தன் சிரசின்மேற் ப்ரோ

க்ஷித்து உள்ளும் புறுகி வீடெங்கும் புரோக்ஷித்து, அத்திருவடியை மெல்லிய வஸ்திரத்தினால் துடைத்து, பத்திர புஷ்பங்களால் அருச்சித்து, பூமியில் விழுந்து நமஸ்கரித்தெழுந்து, பசுவின் சாணத்தினால் மெழுகிச் சுத்தஞ்செய்த தானத்தில், ஆசனத்தின்மீது வீரசேகர ஞானதேசிகருடைய திருவுருவத்தை வைத்து, புஷ்ப முதலியவைகளினால் அலங்கரித்து, பசுநெய்அல்லது எள் நெய்யில் ஏழிழைக்குக் குறையாமல் திரியிட்டுத்தீபமேற்றி,வெற்றிலைபாக்கு பழம் தேங்காய்மூடிகள் முதலியன வைத்து, தூபதீபங்காட்டி வீரசேகர ஞானதேசிகருடைய சரித்திரத்தைப் படித்து, அறுசுவை நிறைந்த நால்வகை யுணவுகளையும் நிவேதனம் புரிந்து, தூபதீபங்காட்டி, பத்திர புஷ்பங்களால் அருச்சித்து, கருப்பூரார்த்தி பண்ணி, வரிசையாக இலைகள் போட்டு, அவ்விலைகளில் நால்வகை யுணவுகளையும் பரிமாறி முற்கூறிய அடியார்களை யிட்காரவைத்து, திருவாசகம் (சிவபுராணம்) பெரியபுராணச் செய்யுள் இவைகள் ஓதி முடிந்த பின்பு, அவ்வடியார்களுடைய திருநெற்றிகளில் சந்தனமும் சிரசுகளில் புஷ்பங்களும் சாத்தி, தூபதீபங் காட்டி, நீர்மாற்றி, யொரு கடைசியில் போய் அடியார்களை நோக்கி பூமியில் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து இருகைகளையுங் கூப்பிக்கொண்டு நின்று, சுவாமிகளெல்லாரும் திருவமுது செய்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்து, அவர்கள் விருப்பமுடன் உண்ணும் பதார்த்தங்களை அன்போடு அளித்து, அமுது செய்தருளியபின்பு கையலம்ப நீர் கொடுத்து, சுத்தமான தானத்தில் இருத்தி, சந்தனம் புஷ்பம் வெற்றிலைபாக்கு தக்ஷிணை என்பவற்றோடு விபூதிப்பை; உருத்திராக்கமாலை, இலங்கோடு கௌபீனம், வஸ்திரம், திருவோடு, பாதுகம், விசிறி, ஸாத்திரப் புத்தகங்கள் முதலியவற்றுள் தனக்கியன்றதையுங் கொடுத்து, பூமியில் விழுந்து நமஸ்கரித்தெழுந்து, ஒடுக்கமாக நின்று, அவர்கள் அளிக்கும் விபூதிப் பிரசாதத்தை இடக்கரத்தின்மேல் வலக்கரத்தை வைத்து வாங்கித் தரித்துக்கொண்டு நமஸ்காரஞ் செய்வோர் எல்லாவிதப் பேற்றையுமெளிதிலடைவர்.